www.padippakam.com

16-31 மார்ச் 1997 ரூ. 3.50

ஊழல் ராஜீவ் குடும்பத்திற்கு அரசு மரியாதையா?

# புதிய ஜனநாயகம்




படிப்பகம்

www.padippakam.com

# பாக். தேர்தல்: வென்றது அதிபர் — இராணுவக் கூட்டணி

பாகிஸ்தானின் தேசிய சபைக்கு பிப்ரவரி 3-ந் தேதி நடைபெற்ற பொதுத் தேர்தலில், நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லீம் லீக் கட்சி மூன்றில் இரு பங்கு இடங்களை வென்று, ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. சென்ற வருடம் நவம்பர் மாதம் பிரதமர் பதவியில் இருந்து தூக்கியெறியப்பட்ட பெனாசிரின் பாகிஸ்தான் மக்கள் கட்சி, அவரது சொந்த சிந்து மாகாணத்திலேயே படுதோல்வி அடைந்தது. நவாஸ் ஷெரீப்புக்கும், பெனாசிருக்கும் மாற்றாக வருணிக்கப்பட்ட முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான்கானின் கட்சியை மக்கள் அறவே புறக்கணித்து விட்டனர்.

இத்தேர்தலை மேற்பார்வையிட வந்த ஆஸ்திரேலியாவின் முன்னாள் பிரதமர், ''பாகிஸ்தானில் ஜனநாயகம் அபாயத்தில் உள்ளதாக'' கருத்துக் கூறியுள்ளார். 62 சதவீத பாக். மக்கள் நடந்த முடிந்த இந்த பொதுத் தேர்தலில் ஓட்டுப் போடவில்லை என்பதுதான் அவரது அச்சத்திற்கு காரணம். எனினும், பாகிஸ்தானின் அரைகுறை ஜனநாயகம் குற்றுயிராகக் கிடந்து வருவதற்கு இதைவிட வேறு காரணங்கள் உண்டு. மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் மைய அரசைக் கவிழ்த்து விடும் அதிகாரம் அதிபரிடம் உள்ளது. மேலும், மறைமுகமான வழிகளில் பாக். அரசியலை ஆட்டிப் படைத்து வரும் இராணுவத்தின் பிடியை மேலும் வலுவாக்கும் வழிமுறைகள், பெனாசிர் ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பின் உருவாக்கப்பட்டுள்ளன.

இத்தேர்தலில் இராணுவமும் அதிபர் லெகாரியும் ஓர் அணி. இந்த அணி தூக்கியெறியப்பட்ட பெனாசிர், தேர்தலின் மூலமோ அல்லது நீதிமன்ற வழக்கில் வெற்றி பெற்றோ மீண்டும் ஆட்சியைப் பிடித்து விடக் கூடாது என்பதில் குறியாக இருந்தது.

இதற்காக, ''மக்களுக்குப் பதில் கூறக் கடமைப்பட்ட ஆட்சி'' என்ற முழக்கம் அதிபர் - இராணுவக் கூட்டணியால் உருவாக்கப்பட்டது. பெனாசிர் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு ஊழலும் ஒரு காரணமாகக் கூறப்பட்டதால், பெனாசிரின் எதிரிகள் இம் முழக்கத்தை உடனடியாகப் பிரச்சாரம் செய்யத் தொடங்கினர். மேலும், ஊழல் - மோசடிக் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தேர்தலில் நிற்பதைத் தடை செய்யும் சட்ட திருத்தத்தைக் கொண்டு வரவும் அதிபர் லெகாரி முயன்றார். ஓட்டுக் கட்சி அரசியல்வாதிகள் பலரின் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் இருந்ததால், இறுதியில் இச் சட்டம் பல திருத்தங்களோடு கொண்டு வரப்பட்டது.

அடுத்ததாக பெனாசிர் ஆட்சியில் நடந்த ஊழல்களும், அவரின் வெளிநாட்டு மாளிகைகளும் எஸ்டேட்டுகளும் வானொளியில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டன. பெனாசிரின் கணவர், பெனாசிரின் தம்பி முர்தாஸா புட்டோ கொல்லப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்டார். இறுதியாக பாக். உச்சநீதி மன்றம் ''ஊழல் குற்றச்சாட்டின் கீழ், அதிபர் பெனாசிர் ஆட்சியைக் கவிழ்த்தது சரிதான்'' என அளித்த தீர்ப்பு, பெனாசிரின் நாற்காலி கனவைக் கலைத்து விட்டது.

பெனாசிர் வெற்றிகரமாக ஓரங்கட்டப்பட்ட நிலையில், இடைக்கால அரசாங்கம், ''தேசிய பாதுகாப்பு மற்றும் தற்காப்பு கவுன்சில்'' ஒன்றை உருவாக்கியது. இக்கவுன்சிலில் அதிபர், பிரதமர், முப்படைத் தளபதிகள், முக்கிய அமைச்சர்கள் உள்ளிட்ட 10 பேர் உறுப்பினர்களாக இருப்பர். நெருக்கடி நிலையை அறிவிக்கவும் அதிகாரம் பெற்றது இக்கவுன்சில். பாகிஸ்தான் இராணுவம் திரைமறைவில் அமர்ந்து கொண்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் செயல்பாடுகளுக்கு ஒப்புதல் தரும் அவசியம் இனி இல்லை; அதை வெளிப்படையாகவே செய்யும் வாய்ப்பை இக்கவுன்சில் இராணுவத்திற்கு ஏற்படுத்தித் தந்துள்ளது. இக்கவுன்சிலை உருவாக்கியதன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் அரை குறை சுதந்திரம் முற்றிலும் பறிபோய் விட்டது.

இக் கவுன்சில் உருவாக்கப்பட்ட பின் பெனாசிர், ''அதிபர், இராணுவத்தை அரசியலுக்குள் இழுப்பதாக'' விமர்சித்தார். பாகிஸ்தான் அரசியலை இராணுவம் ஆட்டிப்படைத்து வருவதை நன்கறிந்தவர் பெனாசிர். இருப்பினும் இராணுவத்திடம் நல்ல பெயர் வாங்குவதற்காக, அதை அப்பாவி போல் சித்தரிக்கும் பெனாசிரின் விமர்சனம் உண்மைக்குப் புறம்பானதாகும்.



அதேபொழுதில் நவாஸ் ஷெரீப் மௌனமாக இருந்து அதிபர் - இராணுவக் கூட்டணிக்கு தனது விசுவாசத்தைக் காட்டிக் கொண்டார். இந்த விசுவாசம்தான் அவருக்கு பிரதமர் பதவியைப் பெற்றுத் தந்தது. ஏற்கனவே 93-ம் ஆண்டு ஊழல் குற்றம் சாட்டப்பட்டு ஆட்சியில் இருந்து அகற்றப்பட்ட நவாஸ் ஷெரீபே மீண்டும் பிரதமர் பதவியைப் பிடித்ததால், ''மக்களுக்குப் பதில் கூற கடமைப்பட்ட ஆட்சி'' என்ற முழக்கம் வெற்றுக் கூச்சலாய் முடிந்து போனது.

பாகிஸ்தானின் அரசியல் இராணுவத்தின் கையில் என்றால், அந்நாட்டின் பொருளாதாரம் ஐ.எம்.எஃப் - உலக வங்கியிடம் சிக்குண்டு போயுள்ளது. பெனாசிர் ஆட்சியைப் பற்றி இந்நிறுவனங்கள் குறை கூறிய பின்னர்தான், அதிபர் லெகாரி அவரது ஆட்சியைக் கலைக்கத் துணிந்தார். பெனாசிர் ஆட்சி கலைக்கப்பட்ட பின் உருவான இடைக்கால அரசாங்கத்தில் நிதி, வர்த்தகம், திட்டமிடுதல் இம்மூன்று துறையும் ஐ.எம்.எஃப் - உலக வங்கி அதிகாரிகள் வசம் ஒப்படைக்கப்பட்டன.

பெனாசிர் தனது ஆட்சி கலைக்கப்படுவதற்கு முன்பாக, ஐ.எம்.எஃப்-ஐத் திருப்தி செய்ய 1300 கோடி ரூபாய்க்கு புதிய வரிகளை விதித்தார். கடந்த ஓராண்டுக்குள் அந்நாட்டு ரூபாயின் மதிப்பு 29 சதவீதம் குறைக்கப்பட்டது. அத்தியாவசிய உணவுப் பண்டங்களின் விலைகள் அனைத்தும் உலகச் சந்தைக்கு இணையாக உயர்ந்து விட்டன. அந்நாட்டு மொத்த வருமானத்தில் 45 சதவீதத்தைக் கடனுக்கான வட்டியும், 40 சதவீதத்தை இராணுவமும் தின்று தீர்த்து விடுகின்றன.

இப்பொருளாதார சீர்கேட்டைக் குறித்து அக்கறை கொள்ளவும், இராணுவ சர்வாதிகாரிகளை எதிர்க்கவும் பாகிஸ்தானின் எந்தவொரு ஓட்டுக் கட்சிக்கும் முதுகெலும்பு கிடையாது. தேர்தலின் பொழுது, பெனாசிர் லெகாரியைத் திட்டி தீர்த்தார். நவாஸ் ஷெரீப் பெனாசிரின் மீது எரிந்து விழுந்தார். இம்ரான்கான், பெனாசிருக்கும், ஷெரிப்புக்கும் எதிராக வரிந்து கட்டினார். பிரச்சாரம் என்ற பெயரில் இதுதான் நடந்தது. அந்நாட்டை ஆண்டு வரும் ஐ.எம்.எஃப் - உலக வங்கிக்கும், இராணுவத்துக்கும் ஒரு பொம்மை தேவைப்பட்டது. அதை தேர்தலின் மூலம் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள் என்பதுதான் உண்மை.

• செல்வம்



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 12

இதழ்: 8 - 9

1 மார்ச் '97 - 31 மார்ச் '97

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 3.50
ஆண்டு சந்தா: ரூ. 84.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ



படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
புதிய ஜனநாயகம்,
அஞ்சல் பெட்டி எண்: 8015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


### மைய அரசின் வரவு - செலவு அறிக்கை:

## நாட்டை மறுஅடகு வைப்பதில் புது வேகம்! புது மோகம்!

"தரகுப் பெரு முதலாளிகளே, தட்டுங்கள் திறக்கப்படும்; ஏகாதிபத்தியங்களே, கேளுங்கள் கொடுக்கப்படும்" என்கிற பாசிச ராஜீவ் தொடங்கி வைத்த தாராளமயக் கொள்கைக்கும் மேலே போய், "தட்டாமலேயே தருகிறோம்; கேட்காமலேயே அள்ளிக் கொடுக்கிறோம்" என்பதையே தனது புதிய பொருளாதாரக் கொள்கையாக ஐ.மு. அரசு வரவு-செலவு அறிக்கை மூலம் அறிவித்துள்ளது.

வரலாறு காணாத வருமான வரிக் குறைப்பு - வரித் தள்ளுபடிகள், கருப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக்கிக் கொள்ள தாராள அனுமதி, சுங்கத் தீர்வை குறைப்பு, அந்நிய இறக்குமதிக்கு அபரிமிதமான சலுகைகள், தொழில் நுட்பம் குறைந்த சாதாரணத் துறைகளிலும், சிறு தொழிலுக்கென ஒதுக்கப்பட்ட துறைகளிலும் பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தாராள அனுமதி, தொழில் வரிக்கான கூடுதல் வரி ரத்து, ஏற்றுமதியின் மூலம் கிடைக்கும் இலாபத்துக்கு வரி விலக்கு எனத் தரகுப் பெரு முதலாளிகளுக்கும் ஏகாதிபத்தியங்களுக்கும் சலுகைகளை வாரியிறைத்துக் கட்டுப்பாடற்ற கொள்ளைக்குக் கதவை அகலத் திறந்து வைத்துள்ளார், நிதியமைச்சர் சிதம்பரம். பெட்ரோலிய அகழ்வாராய்ச்சி மற்றும் உற்பத்தியில் ஏகாதிபத்திய நிறுவனங்களுக்கு அனுமதி, மருத்துவக் காப்பீட்டில் அந்நிய மூலதனத்துக்கு அங்கீகாரம், அந்நிய செலாவணி நெறிப்படுத்தல் சட்டத்தைக் (FERA) குப்பையில் வீசியெறிவது, தொழில் நுட்பத் துறைகளில் அவசியமான ஏகாதிபத்தியக் கூட்டுக்களை ஏற்படுத்திக் கொள்ள அரசுத் துறை நிறுவனங்களுக்கு 'சுயாட்சி' உரிமை என்று பன்னாட்டு நிறுவனங்களிடம் நாட்டை விற்பதையே தமது கொள்கையாக வரவு - செலவு அறிக்கையில் பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

இதுதவிர, நடுத்தர வர்க்கத்தினரிடம் எஞ்சியுள்ள அற்ப சேமிப்புகளையும் பறித்துக் கொண்டு, தரகு முதலாளிகளின் சந்தை விரிவடைய வாய்ப்பு ஏற்படுத்தித் தரும் வகையில் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, கைக்கடிகாரம், அழகு சாதனங்கள் முதலான ஆடம்பர நுகர் பொருட்களுக்கு வரிக்குறைப்பு செய்துள்ளார். அந்நிய நுகர் பொருள் மோகம், ஐந்து நட்சத்திர கலாச்சாரம், ஏகாதிபத்திய சீரழிவு எனும் திசையில் நாட்டையும் மக்களையும் தள்ளி விடுவதுதான் ஐ.மு. ஆட்சியாளர்களின் நோக்கமாக உள்ளது.

ஆட்சிக்கு வந்ததுமே பெட்ரோல் விலையை உயர்த்தியது போதாதென்று, இப்போது ரயில்வே சரக்குக் கட்டணத்தை உயர்த்தி விலைவாசி ஏற்றத்தை நிதிய மைச்சர் தீவிரப்படுத்தியுள்ளார். இதுதவிர அஞ்சல் கட்டணங்களை அநியாயமாக உயர்த்தி மக்களிடம் சட்டபூர்வ வழிப்பறி செய்துவிட்டு, பற்றாக்குறை இல்லாத வரவு - செலவு அறிக்கையினைத் தயாரித்துள்ளதாக மாய்மாலம் செய்கிறார். அதே சமயம் ரூ. 65,000 கோடிக்கும் மேலாக உள்ள நிதிப்பற்றாக்குறையை வசதியாக மறைத்து விட்டார்.

வேலையின்மையைப் போக்க இந்த வரவு - செலவு அறிக்கையில் எந்தத் திட்டமும் இல்லை. மேலும், நலிவடைந்த அரசுத்துறை நிறுவனங்களை மேம்படுத்த ஒரு பைசா கூட ஒதுக்கீடு செய்யாமல், அவற்றைத் தனியாருக்குத் தாரை வார்ப்பதையே கொள்கையாக வரவு - செலவு அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனாலும், தரகு முதலாளித்துவ நிறுவனங்களுடன் போட்டியிட முடியாமல் சிறு தொழில்கள் நசிவடைவதாலும் வருமாண்டுகளில் வேலையில்லாப் பட்டாளம் கோடிக் கணக்கில் பெருகுவது நிச்சயமாகி விட்டது.

விவசாயக் கடனுக்குச் சற்றே கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்துவிட்டு, விவசாய வளர்ச்சிக்கு வித்திட்டுள்ளதாக மார்தட்டிக் கொள்கின்றனர். நவீன விவசாயம் - பணப்பயிர் உற்பத்தியில் ஈடுபடும் நிலப்பிரபுக்கள் மட்டுமே இக்கடன் சலுகையைப் பெற வாய்ப்புள்ளதே தவிர, கோடிக்கணக்கான சிறிய - நடுத்தர விவசாயிகளுக்கு இதனால் எந்தப் பலனுமில்லை.

நடப்பு வரவு - செலவு அறிக்கையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தில் கிராமப்புற வளர்ச்சிக்கான ஒதுக்கீடு வெறும் 1.6% தான்! இது கேடு கெட்ட காங்கிரசு ஆட்சியின் ஒதுக்கீட்டை விடக் குறைவானது. மேலும், மதிய உணவுத் திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ. 960 கோடியிலிருந்து ரூ. 440 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், "இந்திரா ஆவாஸ் யோஜ்னா" முதலான வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கான ஒதுக்கீடும் குறைந்து விட்டது. இவையனைத்தும் சேர்ந்து கிராமப்புற மக்களை வறுமைக்கும் பட்டினிக்கும் தள்ளுவதை உறுதிப்படுத்தி விட்டன. இதுதவிர 2 லட்சம் கோடிக்கும் மேலான அந்நியக் கடன் சுமையும், அதற்கு வட்டி கட்டவே மொத்த வருமானத்தில் காற்பங்கு தொகை ஒதுக்கப்படுவதும், மெக்சிகோ வழியில் நாடு திவாலாகப் போவதை நிச்சயமாக்கி விட்டது.

www.padippakam.com

# சிதம்பரத்தோடு மாறன் மன்மோகன் சிங்கின் வாரிசுகள்

அறிஞர் அண்ணா வளர்த்த இளஞ்சிங்கம்; கழகத்தின் கொள்கை காக்கும் கலைஞரின் மருமகன்; கழக உடன் பிறப்புகளின் போர்வாளான முரசொலி நாளேட்டின் ஆசிரியர்; 1967-லிருந்து நாடாளுமன்ற உறுப்பினராகச் செயல்பட்ட முதிர்ந்த அனுபவம் நிறைந்தவர்; தமிழினத்தின் உரிமைக்காக நாடாளுன்றத்தில் அன்னை இந்திராவையே எதிர்த்து வாதிட்டவர்; ராஜீவின் பஞ்சாயத்து ராஜ் சட்டத்தை எதிர்த்து முழங்கியவர்; சமூக நீதி காத்த வி.பி. சிங்கின் அமைச்சரவையில் அங்கம் வகித்தவர்.

அப்பேற்பட்ட முரசொலி மாறன், ஐக்கிய முன்னணி அரசின் காபினெட் அமைச்சராக - அதிலும் மிக முக்கியத்துவம் வாய்ந்த தொழில் அமைச்சராகியுள்ளார். தி.மு.க.வுக்கு மட்டுமல்ல; தமிழக மக்களுக்கே பெருமை சேர்க்கும் உயரிய பதவியில் அவர் இருப்பதோடு, நாட்டைத் தொழில்மயமாக்குவதில் அயராது பாடுபடுகிறார்.

— இப்படி, மத்தியத் தொழிலமைச்சரான முரசொலி மாறனைப் பற்றி தி.மு.க.வினர் மட்டுமல்ல; வடநாட்டின் பல்வேறு வார்த்தக - முதலாளித்துவ செய்திப் பத்திரிகைகளும் புகழாரம் சூட்டுகின்றன.

ஆனால் முரசொலி மாறன், பதவியைப் பிடித்ததும் தானொரு ஏகாதிபத்திய விசுவாசி தான் என்று காட்டி விட்டார். தொழில்மயமாக்குவது என்ற பெயரில் அந்நிய மூலதனக் கொள்ளைக்குக் கதவை அகலத் திறப்பதில் புதுவேகம் காட்டுகிறார்; நாட்டை ஏகாதிபத்தியங்களுக்கு மறு அடகு வைக்கும் கேடு கெட்ட காங்கிரசின் புதிய பொருளாதாரக் கொள்கையை விசுவாசமாகச் செயல்படுத்தி வருகிறார்.

## கொள்கை வீரம் பேசி சோரம் போன மாறன்

பொதுத் தேர்தலுக்கு சற்று முன்பாக, திருச்சியில் தி.மு.கழகம் மிகப் பெரியதொரு மாநாட்டை நடத்தியது. ''திருப்புமுனை மாநாடு'' எனச் சித்திரிக்கப்பட்ட இம்மாநாட்டில், காங்கிரசையும் அதன் கேடு கெட்ட புதிய பொருளாதாரக் கொள்கையையும் எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மாநாட்டுத் தீர்மானங்களைத் தீட்டுவதிலும், அதை நிறைவேற்றுவதிலும் முரசொலி மாறன் முக்கியப் பங்கு ஆற்றியதை பத்திரிகைகள் முக்கியமாகக் குறிப்பிட்டன.

தேர்தலுக்கு முன்பு, தி.மு.கழகம் ராவ் காங்கிரசோடு சந்தர்ப்பவாதமாகக் கூட்டணி சேர முயற்சிப்பதாக 'மார்க்சிஸ்டு' கட்சி குற்றம் சாட்டி வந்தது. காங்கிரசையும், அதன் புதிய பொருளாதாரக் கொள்கையையும் எதிர்த்து தி.மு.க. எந்தவொரு போராட்டமும் நடத்த முன்வரவில்லை என்று சாடியது. இந்நிலையில், தாங்கள் காங்கிரசுக்கும் அதன் பொருளாதாரக் கொள்கைகளுக்கும் எதிரானவர்கள் என்பதை திருச்சி மாநாட்டுத் தீர்மானங்கள் நிரூபித்துக் காட்டுவதாகவும், மார்க்சிஸ்டுகள் தங்கள் மீது வீண்பழி சுமத்துவதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அப்போது தி.மு.க.வினர் மேடைகளில் பேசி வந்தனர்.

இப்படி, காங்கிரசையும் அதன் கொள்கைகளையும் எதிர்ப்பதாக வீரவசனம் பேசி வந்த முரசொலி மாறன், தேர்தல் முடிந்து மத்தியத் தொழில் அமைச்சர் ஆனதும் தனது இலட்சியக் கொள்கைகளைக் குப்பையில் வீசி எறிந்து விட்டார். ''சில தீய சக்திகள் வெளியுலகுக்கு இந்தியாவைப் பற்றி தவறான சித்திரத்தைக் காட்ட முயற்சிக்கின்றன. அந்நிய முதலீட்டாளர்கள் விரட்டப்பட்டால் அவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். அவர்களது சதி வலைக்குள் இந்த அரசு ஒரு போதும் சிக்காது'' என்று எச்சரிக்கும் அளவுக்கு, அவர் அந்நிய மூலதன ஆதிக்கத்துக்கு எடுபிடியாக இருக்கிறார்.

''அந்நிய முதலீட்டை வெறும் நிதி முதலீடாக மட்டும் நான் கருதவில்லை. நவீன தொழில் நுட்பம், நவீன நிர்வாகம், வேலை வாய்ப்பு, புதிய சந்தை முதலானவற்றையும் பார்க்கிறேன். நம்மிடம் பெரும் பற்றாக்குறை உள்ளது. அன்னிய நேரடி முதலீடு மூலம் இதை ஈடு செய்ய முடியும். யார் ஆட்சிக்கு வந்தாலும் இதை விட்டால் வேறு வழியே கிடையாது'' என்று அந்நிய மூலதன ஆதிக்கத்தையும் கொள்ளையையும் வெட்கமின்றி நியாயப்படுத்துகிறார். ''நடப்பாண்டில் இந்தியாவில் 36,000 கோடி ரூபாய் அந்நிய முதலீட்டைக் குவிக்க இலக்கு தீர்மானித்துள்ளோம். வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களைய அந்நிய முதலீட்டு வளர்ச்சி வாரியத்தில் புதிய குழுவை அமைத்துள்ளோம். மலேசியா, தாய்லாந்து முதலான நாடுகளில் உள்ளது போல, அந்நிய முதலீடுகளுக்கு ஒற்றைக் கதவு முறையைக் கொண்டுவர உள்ளோம். இதன் மூலம் தாமதமின்றி உடனடியாக முதலீடு செய்யவும், எந்த இடத்தில் தொழில் தொடங்க அந்நியர்கள் விரும்புகிறார்களோ, அங்கே உடனடியாக உரிய ஏற்பாடுகள் செய்யவும் முடியும்'' என்று ஏகாதிபத்தியங்களின் கொள்ளைக்கு கதவை அகலத் திறந்து வைக்கிறார்.

நாட்டை மறுகாலனியாக்கிவரும் 'ஒட்டிப் பிறந்த இரட்டையர்'



இது மட்டுமல்ல; அந்நிய இறக்குமதிப் பொருட்களுக்கு சுங்கத் தீர்வை குறைக்கப்பட்டதை உற்சாகத்தோடு வரவேற்கிறார். அந்நியச் செலாவணி நெறிப்படுத்தல் சட்டம் (FERA), தொழில்துறை வளர்ச்சி முறைப்படுத்தல் சட்டம் (IDR)



படிப்பகம்

www.padippakam.com

ஆகியனவற்றை மறுபரிசீலனை செய்து, இன்றைய நிலைமைக்கேற்ப மாற்றியமைப்போம் என்கிறார். அந்நிய ஏகாதிபத்தியங்களின் பங்காளிகளான இந்தியத் தரகு முதலாளிகளின் தொழிலுக்கும் வர்த்தகத்துக்கும் சலுகைகளை வாரியிறைத்து வரும் மாறன், சர்க்கரை முதலான தொழில்களுக்கு உரிமம் பெறத் தேவையில்லை என்ற தாராளமயக் கொள்கையை விரைவில் நிறைவேற்றப் போவதாகச் சூளுரைக்கிறார். தோல் பொருட்கள், சிமெண்ட், காகிதம், மின் உபகரணங்கள் முதலான தொழில்களுக்கும் இக்கொள்கையை விரிவுபடுத்துவோம் என்கிறார்.



திருப்பெரும்புதூர் அருகே நிலம் - வரிச்சலுகைகள் அளித்து உருவாகிவரும் தென்கொரிய ஹுண்டாய் கார் தொழிற்சாலை அடிக்கல் நாட்டு விழா: ஏகாதிபத்திய சேவையில் மாமனும் மருமகனும்

### தரகுப் பெரு முதலாளிகளின் செல்லப் பிள்ளை

சுருக்கமாகச் சொன்னால், ஏகாதிபத்தியங்களின் - தரகுப் பெரு முதலாளிகளின் விசுவாசமான செல்லப் பிள்ளையாக முரசொலி மாறன் சோரம் போய் விட்டார். எனவே தான் "தேவே கௌடா அரசில் சீர்திருத்தக் கொள்கையின் நம்பிக்கை நட்சத்திரம்" என்று "பிசினஸ் வேர்ல்டு" எனும் வடநாட்டு ஆங்கில வர்த்தக இதழ் மாறனை உச்சிமுகர்ந்து பாராட்டுகிறது. மன்மோகன் சிங் நடைமுறைப்படுத்திய பொருளாதாரக் கொள்கையைக் காத்து விரிவுபடுத்தும் ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள் என்று முரசொலி மாறனையும், நிதியமைச்சர் சிதம்பரத்தையும் அந்த இதழ் நன்றியோடு பாராட்டுகிறது. மத்திய அரசின் காபினெட் அமைச்சர்களின் செயல்பாட்டுத்திறன் பற்றிய மதிப்பீட்டில், சிதம்பரத்துக்கும் மாறனுக்கும் அதிக மதிப்பெண்கள் கொடுத்து, பாராட்டி, அண்மையில் "இந்தியா டுடே" ஆங்கில இதழ் தனது கருத்துக் கணிப்பை வெளியிட்டுள்ளது.

மத்திய நிதியமைச்சரான சிதம்பரம், அந்நிய மூலதனக் கொள்கையை ஆதரித்து, நாட்டை மறு அடகு வைப்பதில் தீவிரம் காட்டுகிறார் என்றால், அதில் ஓரளவாவது, நியாயம், இருக்கிறது. ஏனெனில் அவர் ஒரு காங்கிரசுக்காரர்; மன்மோகன் சிங்கின் நம்பகமான சீடர். அவரும் அவரது த.மா.கா.கட்சியும் காங்கிரசின் பொருளாதாரக் கொள்கைகளை எதிர்ப்பதாக என்றுமே கூறியது கிடையாது. காங்கிரசின் கொள்கைதான் த.மா.கா.வினுடையது. ஆனால் காங்கிரசின் புதிய பொருளாதாரக் கொள்கையை எதிர்ப்பதாக வீரவசனம் பேசிய முரசொலி மாறன், பதவியைப் பிடித்ததும் தனது இலட்சியக் கொள்கையை தூக்கியெறிந்து விட்டார் என்றால் அதில் ஏதாவது நியாயம் இருக்கிறதா?.

"பதவி என்பது தோளில் அணியும் துண்டு போன்றது; கொள்கை - இலட்சியத்துக்கு இழுக்கு ஏற்பட்டால், துண்டை வீசியெறிந்து விட்டு கொள்கைக்காக கழகம் போராடும்" என்று தி.மு.க. தலைவர்கள் மேடைகளில் வீரதீரப் பிரகடனம் செய்வது வாடிக்கை. ஆனால் மாறன் இவற்றை எல்லாம் வெற்றுச் சவடால்கள்தான் என்று தனது துரோகத்தனத்தின் மூலம் நிரூபித்துக் காட்டி விட்டார்.

### டாடாவின் கூட்டாளி நாட்டுக்குப் பகையாளி

தி.மு. கழகத்தினர், "தமிழகத்தின் உண்மையான பொதுவுடமைவாதிகள் நாங்கள்தான்! ஒடுக்கப்பட்ட திராவிட இனத்தின் தனித் தன்மையைக் காட்ட கருப்பு நிறமும், பொதுவுடமை இலட்சியத்தைக் காட்ட சிவப்பு நிறமும் கொண்டதாக கட்சிக் கொடியை அறிஞர் அண்ணா வடிவமைத்தார். மிட்டா மிராசுகள் - டாட்டா, பிர்லாக்களின் ஆதிக்கச் சுரண்டலை எதிர்ப்பதில் கழகம் என்றுமே பின்வாங்கியது கிடையாது" என்று மேடைகளில் பெருமை பாராட்டிக் கொள்வதுண்டு. ஆனால் மாறனோ, இந்தக் கொள்கை எல்லாம் வெறும் வெங்காயம் என்று தரகுப் பெரு முதலாளி - டாடாவின் கூட்டாளியாகி விட்டார்.

டாடாவும் சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் நிறுவனமும் கூட்டுச் சேர்ந்து இந்தியாவில் தனியார் விமானப் போக்குவரத்தை நடத்த ஒப்பந்தம் செய்து கொண்டு, அரசிடம் ஒப்புதல் கோரியுள்ளன. அரசின் தனியார்மயக் கொள்கையின்படி, டாடா நிறுவனம் 60% பங்கும், சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் நிறுவனம் 40% பங்கும் கொண்டதாக இருக்கும் என்றும், 19 விமானங்கள் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்படும் என்றும் டாடா நிறுவனம் அறிவித்துள்ளது. இத் தனியார் விமானப் போக்குவரத்துத் திட்டத்தை மத்திய விமானப் போக்குவரத்து அமைச்சரான இப்ராஹிம் கடுமையாக எதிர்க்கிறார். "ஏற்கெனவே நட்டத்தில் இயங்கிவரும் அரசுத்துறை நிறுவனங்களான இந்தியன் ஏர்லைன்ஸ், ஏர் இந்தியா ஆகியவை கடுமையாகப் பாதிக்கப்படும்; மிகப் பெரிய டாடா நிறுவனத்தால், இதர சிறிய தனியார் விமானப் போக்குவரத்து நிறுவனங்கள் போட்டி போட முடியாமல் நலிவடையும்" என்று நியாயவாதங்களை முன்வைக்கும் அவர், "என் பிணத்தின் மீது தான் டாடா நிறுவனத்தின் ஒப்பந்தம் நிறைவேறும்" என்று எச்சரிக்கிறார்.

ஆனால் முரசொலி மாறனோ, டாடாவுக்கு காவடி தூக்கிக் கொண்டு, இத்திட்டத்தை வரிந்து கட்டிக் கொண்டு ஆதரிக்கிறார். "நம்மிடம் விமானங்களைப் புதுப்பிக்க போதிய நிதி உள்ளதா? புதிய விமானங்கள் வாங்க வசதி உள்ளதா? அல்லது அடுத்த ஐந்தாண்டுகளுக்கான (2001 வரை) குறுகிய காலத் திட்டமாவது உள்ளதா? எதுவுமில்லை. இந்நிலையில் டாடாவின் அந்நியக் கூட்டுப் பங்கு விமானப் போக்குவரத்தை அனுமதிக்க மாட்டோம் என்பதில் பயனேதுமில்லை" என்று எதிர்வாதங்களை அள்ளி வீசுகிறார்.

ஏற்கனவே இந்தியாவில் அந்நிய கூட்டுடன் இயங்கிவரும் தனியார் விமானப் போக்குவரத்து நிறுவனங்கள், இந்திய விமான நிலையங்களைப் பயன்படுத்திய வகையில் கோடிக்கணக்கில் வாடகை - கட்டண பாக்கி வைத்துள்ளன. ஈஸ்ட் வெஸ்ட், மோடி லுஃப்ட், டாமானியா, ஜெட் ஏர்வேஸ் முதலான நிறுவனங்கள் கடந்த ஆண்டில் மட்டும் ரூ. 23.5 கோடி பாக்கி வைத்துள்ளன. அரசுத்துறை நிறுவனமான இந்திய விமானப் போக்குவரத்து ஆணையகத்தின் அடிக்கட்டுமான சேவையைப் பயன்படுத்திக் கொண்டு கொழுத்த இலாபம் ஈட்டுவது, சேவை - வாடகைக் கட்டணத்தைச் செலுத்தாமல் பாக்கி வைத்து, நட்டக் கணக்கு காட்டி ஏய்ப்பது என்ற நோக்கத்தோடுதான் தனியார் விமானப் போக்குவரத்து நிறுவனங்கள் செயல்படுகின்றன. இந்திய மக்களின் வரிப்பணத்தில் விமான நிலையங்களும், அடிக்கட்டுமான சேவையும் தொடர வேண்டும்; இலாபத்தை மட்டும் தனியார் விமான் நிறுவனங்கள் ஏப்பம் விட வேண்டும் என்பதுதான் தரகுப் பெரு முதலாளிகளின் தாராளமயக் கொள்கை. நாட்டைத் திவாலாக்கும் இந்தக் கொள்கையை ஆதரித்து, டாடா நிறுவனத்துக்கு காவடி தூக்கி ஆடுகிறார் முரசொலி மாறன். நிதியமைச்சர் சிதம்பரத்தோடு சேர்ந்து கொண்டு அமைச்சரவைக் கூட்டத்தில் ஆதரவு தேடி அலைகிறார். அதே சமயம் ஈஸ்ட் வெஸ்ட், ஜெட் ஏர்வேஸ் முத

தொடர்ச்சி 7-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

# மாஃபியாக்களின் காலடியில் மும்பை தொழிற்சங்கங்கள்

ஜனவரி 16 - காலை 11.15 மணி. மும்பையின் பிரபல தொழிற்சங்கத் தலைவர் தத்தா சமந்த் தனது காரில் பின்புறம் அமர்ந்து புறப்பட்டார். கார் வீட்டு வாயிலைக் கடந்து கொஞ்ச தூரம் நகர்ந்த போது, அக்குறுகிய சாலையில் நான்கு பேர் சைக்கிளுடன் மறித்துக் காரை நிறுத்தினர். உடனே தத்தா சமந்தின் உடலை 17 தோட்டாக்களால் துளைத்தனர். ஓட்டுநரின் முகத்தையும் துப்பாக்கிக் குண்டு துளைத்தது.

சுட்டவர்கள் வழியில் வந்த ஆட்டோவைத் துப்பாக்கி முனையில் மிரட்டி ஏறித் தப்பி விட்டனர். அவர்கள் இன்று வரை பிடிபடவில்லை.

தத்தா சமந்தும் ஓட்டுநரும் உடனடியாக சமந்தின் மூத்த மகன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப் பட்டனர். தீவிர சிகிச்சையும் பலனின்றி சமந்த் இறந்தார். ஓட்டுநர் பிழைத்துக் கொண்டார். கொலைகாரர்களுக்கு அரசியல்வாதிகளின் முழு ஆதரவிருக்கும் போது, பிடிபட்டால் தான் அதிசயம்!

அனைத்து தொழிற்சங்கங்களும் ஜனவரி 17-இல் பொது வேலை நிறுத்தம் செய்தன. மும்பை நகரே ஒரு நாள் செயல்படவில்லை.

போர்க்குணமிக்க பொருளாதாரப் போராட்டங்களை முன்னெடுத்து, சமரசமின்றிப் போராடியவர் தத்தா சமந்த். ஆனால் பல ஆண்டுகள் பொருளாதாரப் போராட்டங்களை மட்டுமே நடத்தி, தொழிலாளர்களைத் தொழிற்சங்கத் வாதத்தில் மூழ்கடித்தார். போலி கம்யூனிஸ்டுகளைக்கூடத் தொழிற்சங்கம் நடத்தக் கூடாது என எதிர்த்தார்.

ஆனால், புதிய பொருளாதாரக் கொள்கைகளால் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டதைப் பார்த்த பின், அரசியல் போராட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்தார். புதிய பொருளாதாரக் கொள்கைக்கு எதிராகவும், என்ரான் திட்டத்திற்கு எதிராகவும் போலி கம்யூனிஸ்டுகளுடன் இணைந்து போராடினார். ஆனால் தொழிலாளர்களைத் தொழிற்சங்கவாதத்தில் ஆழ்த்தி விட்டதால், இவரால் பெரிதாகச் சாதிக்க இயலவில்லை.

☆☆☆

மருத்துவப் பட்டம் பெற்ற தத்தா சமந்த் தொழிலாளர் குடியிருப்பு மிகுந்த காட்கோபர் பகுதியில் தனது மருத்துவத் தொழிலைத் தொடங்கினார். தொழிலாளர்கள் கொடூரமாகச் சுரண்டப்படுவதைக் கண்டு மனம் கொதித்தார்.

அப்பகுதியில் "கல் குவாரிகள்" அதிகம். கல்லுடைக்கும் தொழிலாளர்கள் அவலம் கண்ட அவர், அவர்களை அமைப்பாகத் திரட்ட வேண்டும் என உணர்ந்தார். 1965-ல் "மகாராட்டிர ஹான் காம்கார் சங்கம்" என்ற தொழிற்சங்கம் கட்டி, கல்லுடைக்கும் தொழிலாளர்களை ஓரணியில் திரட்டினார். குவாரி முதலாளிகள் தத்தாவைக் கொலை வெறி கொண்டு தாக்கினர். ஒரு வாரம் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்ற அவர், முன்னிலும் உறுதியுடன் போராட்டத்தைத் தொடர்ந்தார். முடிவில் கூலி உயர்வும், வேறு பல உரிமைகளையும் போராடிப் பெற்றனர், கல்லுடைக்கும் தொழிலாளர்கள்.



மாஃபியா தலைவன் அருண் காவ்லியை விடுதலை செய்யக் கோரி போலீசு நிலையத்தில் உண்ணாவிரதமிருக்கும் சிவசேனா எம்.பி. மோஹன் ரவாலே: மாஃபியா-ஓட்டுக்கட்சிகளின் வலுவான பிணைப்பு

தத்தா சமந்தின் இப்போராட்டம் பிற தொழிலாளர்களையும் அவரிடம் ஈர்த்தது. தொழிற்சங்கப் பணி முழு நேரமானது. 1972-இல் விக்ரோலியிலுள்ள கோத்ரெஜ் ஆலைப் போராட்டம் தத்தாவை வெளி உலகம் அறிய வைத்தது.

1967 தேர்தலில் சுயேச்சையாகவும், '72 தேர்தலில் காங்கிரசு சார்பாகவும் போட்டியிட்டு, சட்டமன்ற உறுப்பினர் ஆனார். இவரது சமரசமற்ற போராட்டத்தால் காங்கிரசு கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டது மட்டுமின்றி அவசர நிலை பாசிசக் காட்டாட்சியில் சிறையிலுமடைக்கப் பட்டார். 80-ல் திரும்ப சுயேச்சை எம்.எல்.ஏ.வானார்.

1982-ல் பம்பாய் மில் தொழிலாளர்கள் 2 இலட்சம் பேருடன் மிகப் பெரும் போராட்டத்தைத் தொடங்கினார். கூலி உயர்வும், நிரந்தரமற்ற 'பதிலி' தொழிலாளர்களை நிரந்தரமாக்கக் கோரியும் முக்கிய கோரிக்கைகளாக வைக்கப்பட்டன. ஆலைகள் மூடப்பட்டன. நாடு முழுதும் பரபரப்பாகப் பேசப்பட்ட போராட்டம் வருடக் கணக்கில் தொடர்ந்தது. சட்டப்படி போராட்டம் முடியவில்லை. ஆனால் தொழிலாளிகள் பெருமளவு பாதிக்கப்பட்டனர்.

இப்போராட்டத்தின் தோல்வி நாடு முழுதும் எதிரொலித்தது. குறிப்பாக மும்பையின் தொழிற்சங்க இயக்கத்தை ஒழிக்க முதலாளிகள் மாஃபியா கும்பலைப் பயன்படுத்தத் தொடங்கினர்.

இன்னொருபுறம் புதிய பொருளாதாரக் கொள்கைகளால் ஆலைமூடல், ஆட்குறைப்பு, வேலை இழப்பு என்ற நெருக்கடிகளும், '82 போராட்டத் தோல்வியும் தொழிலாளர்களின் போராட்ட உணர்வை மழுங்கடிக்கத் தொடங்கின. தவிர நாடு முழுவதுமான தொழில் நெருக்கடியும் தொழிற் சங்கத்தை முடக்கியது. இது மாஃபியாக்களின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடும் பலத்தைத் தொழிலாளரிடமிருந்து பறித்தது.

1990 தொடங்கி மும்பையில் வீடு - வீட்டு மனை வியாபாரம் கொடி கட்டிப் பறந்து வருகிறது. மத்திய மும்பை பகுதியிலுள்ள துணி ஆலைகளின் நிலங்களை விற்க முதலாளிகள் திட்டமிட்டனர்.

சுமார் 2.8 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள இந்நிலங்களின் இன்றைய மதிப்பு சுமார் 17,000 கோடி ரூபாய். இவ்வளவு பிரம்மாண்ட மதிப்புள்ள ஆலைகளின் நிலத்தை வீடு - வீட்டு மனைச் சந்தையில் வைப்பதில் மும்பையின் மாஃபியா கும்பல்களும் தலையிடுகின்றன.

1994-ல் முதன் முறையாக கட்டாவ் மில்லின் 13 ஏக்கர் நிலத்தை, விற்க அதன் முதலாளி சுனித் கட்டாவ் திட்டமிட்டான். மில்லின் நிலத்தை தொழிற்சங்க அனுமதியின்றி விற்க முடியாது என்பதால் அருண் காவ்லி என்ற மாஃபியா கும்பலின் தலைவனைக் கொண்டு தொழிலாளிகளை மிரட்டிப் பணிய வைத்தான். சுமார் 400 கோடி ரூபாய்க்கு நிலத்தை விற்றவன் கணிசமான தொகையை அருண் காவ்லிக்கு கொடுத்தான்.

இன்னொரு மாஃபியா கும்பல் தலைவன் அமர் நாயக். இவனுக்கும் அருண் காவ்லிக்குமிடையே 'தொழில்' போட்டி உண்டு. கட்டாவ் கோடிக் கணக்கில் காவ்



படிப்பகம்

www.padippakam.com

லிக்கு பணம் தரவே அமர் நாயக் 1994-ல் கட்டாவைச் சுட்டுக் கொன்றான்.

இதற்கு முன்பாக அங்கீகாரம் பெற்ற சங்கமான ஆர்.எம்.எம்.எஸ். நிலம் விற்பதை எதிர்த்து வந்தது. அதன் தலைவராக இருந்தவர் ஹரிபாவ் நாயக். எனவே காங்கிரசும் மில் முதலாளிகளும் சேர்ந்து தொழிற்சங்கத் தேர்தலில் அருண் காவ்லி என்ற வலிமை மிகுந்த மா∴பியா கும்பல தலைவனின் மருமகனான சசின் அஹிர் என்பவனைச் சங்கத் தலைவனாக்கினார்கள். இவன் பதவி ஏற்றதும் தொழிலாளிகளை மிரட்டி மில் நிலங்களை விற்க் அனுமதித்தான்.

ஆனால், தத்தா சமந்தின் கிர்னி காம்கார் சங்கம் மில் நிலங்களை விற்பதைக் கடுமையாக எதிர்த்தது. இதனால் 80,000 தொழிலாளிகள் வீதிக்கு விரட்டப்படுவார்கள் என்பதுதான் காரணம். இதனால் இருவருக்குமிடையே மோதல் இருந்து வந்தது.

மும்பையின் பல மில்களின் உள்ளே மா∴பியா குண்டர்கள் வெளிப்படையாகச் சுற்றி வருகின்றனர். நிர்வாகத்திற்கு எதிரான சங்கங்களின் ஆலை வாயில் கூட்டங்களுக்கு செல்லக்கூடத் தொழிலாளிக்ளை அனுமதிப்பதில்லை. மீறிச் செல்பவரின் உயிருக்கு உத்தரவாதமில்லை. இந்நிலையில் தான் தத்தா சமந்த் மா∴பியா கும்பலால் கொடூரமாகக் கொல்லப்பட்டுள்ளார்.

மா∴பியா பின்னணி கொண்ட பாய் ஜக்தாப், இப்போது தொழிற்சங்கத் தலைவராக உலா வருகிறான். இவனும் வெளிப்படையாகவே முதலாளிகளை ஆதரிக்கிறான். தொழிலாளிகளைக் கசக்கிப் பிழிந்து, சிறிது ஊதிய உயர்வு வாங்கித் தந்துள்ளான். இவனது, 'பாரதீய கம்கார் கர்மாசரி மகா சங்கம்' என்பது இப்போது மும்பையின் முக்கிய தொழிற்சங்கமாகி விட்டது.

சிவசேனாவின் 'ஷ்ரமிக் சேனா' என்ற தொழிற்சங்கத்தின் தலைவரும் மாநில சுற்றுச்சூழல் மந்திரியுமான கணேஷ் நாயக்கும் இதே வரிசையைச் சேர்ந்தவர்தான்.

மும்பையில் வலுவான மையப்படுத்தப்பட்ட ஒரு புரட்சிகர தொழிற்சங்கம் தற்பொழுது இல்லை. இந்த வெற்றிடத்தை, பொருளாதாரவாதத்திற்குப் பலியான தொழிலாளிகளுக்கு அற்ப சலுகைகளை வீசி, மா∴பியா கும்பல் கைப்பற்றி விட்டது.

இருப்பினும், வாழ்வுக்கு உத்தரவாதமான ஆலைகள் மூடப்படுவதை எதிர்த்து தன்னெழுச்சியான தொழிலாளர்களின் போராட்டங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன. இந்நிலையில் தத்தா சமந்தின் இழப்பு கடினமான ஒன்று.

• பரி

● ● ●

5-ஆம் பக்கத் தொடர்ச்சி

லான வேறு பிற அந்நியக் கூட்டு விமான நிறுவனங்களை ஆதரிக்கும் இப்ராஹிம், இதற்கு இணங்காததால் இன்னமும் இந்த விவகாரம் இழுபறி நிலையிலேயே நிற்கிறது.

### அரசுத் துறை நிறுவனங்களுக்கு வேட்டு வைக்கும் மாறன்

அந்நிய ஏகாதிபத்தியங்களுக்கும் தரகுப் பெரு முதலாளிகளுக்கும் விசுவாச சேவை செய்து வரும் மாறன், அதுவும் போதாது என்று, அரசுத்துறை நிறுவனங்களையும் தரகு முதலாளிகளுக்குத் தாரை வார்க்கக் கிளம்பி விட்டார். "நலிவடைந்த - நட்டத்தில் இயங்கும் 39 அரசுத் துறை நிறுவனங்களின் பங்குகளை விற்று இதுவரை 9962 கோடி ரூபாயை ஈட்டியுள்ளோம். வருமாண்டில் மேலும் 5000 கோடியை ஈட்ட தீர்மானித்துள்ளோம்" என்று மாறன் அறிவித்துள்ளார். வருமாண்டில் 49 கனரக அரசுத்துறை நிறுவனங்களை மறு ஒழுங்கமைப்பு செய்து அதன் பங்குகளை விற்க தொழிலமைச்சகம் தீர்மானித்துள்ளது. இதுவும் போதாது என்று நல்ல நிலையில் இலாபத்தில், இயங்கிவரும் 9 அரசுத்துறை நிறுவனங்கள் அந்நிய கூட்டு நிறுவனங்களாக மாற்றவும் மாறன் தீர்மானித்துள்ளார். "நவரத்தினங்கள்" எனப்படும் பி.எச்.ஈ.எல்., ஓ.என்.ஜி.சி., ஐ.ஓ.சி. முதலான 9 அரசுத்துறை நிறுவனங்களும் உலக அளவில் போட்டியிடும் அளவுக்குத் தரமும், திறனும் கொண்டவை. இவற்றின் தரத்தை மேலும் உயர்த்துவதாகக் கூறிக் கொண்டு, இவற்றை அந்நியக் கூட்டுப் பங்கு நிறுவனங்களாக்க மாறனும் சிதம்பரமும் தீவிரம் காட்டுகின்றனர்.

> **மாறனை, "தி.மு.க.வின் நரசிம்ம ராவ்" என அக்கட்சியினரே வேடிக்கையாகக் குறிப்பிடுவதுண்டு; பழகும் தன்மையில் மட்டுமல்ல; நாட்டை ஏகாதிபத்தியங்களின் வேட்டைக்காடாக்குவதில் தானும் ஓர் இளைய நரசிம்ம ராவ் தான் என்பதை நிருபித்து வருகிறார், மாறன்**

அரசுத்துறை நிறுவனங்களைத் தனியாருக்குத் தாரை வார்ப்பது அல்லது கூட்டு பங்கு நிறுவனங்களாக மாற்றுவதால் அவற்றில் பணியாற்றும் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலை இழப்பர். இதை ஈடு செய்ய விருப்ப ஓய்வுத் திட்டம், தங்கக் கைகுலுக்கல் திட்டங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கி, தொழிலாளர்களின் எதிர்ப்பு இல்லாமல் தனியார்மயக் கொள்கையை நிறைவேற்றுவோம் என்கிறார் மாறன். அவரது புதிய முயற்சிகளைப் பாராட்டி, "பிசினஸ் வேர்ல்டு", இதழ் கட்டுரை தீட்டுமளவுக்கு அவர் அரசுத்துறை நிறுவனங்களை அழிப்பதில் தீவிரம் காட்டுகிறார்.

தொகுப்பாகச் சொன்னால், தொப்பி அணியாத காங்கிரசுக்காரனாகவே முரசொலி மாறன் செயல்படுகிறார். அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்களும், உலக வர்த்தக நிறுவனமும் (WTO) இட்ட கட்டளையை நிறைவேற்றும் விசுவாச சேவகனாகவே இயங்குகிறார். நாட்டை ஏகாதிபத்தியங்களின் வேட்டைக் காடாக மாற்றுவதில் பாசிச ஜெயா - காங்கிரசு கும்பலுக்கு தாங்கள் சற்றும் சளைத்தவர்கள் அல்லர் என்பதை மாறனும் தி.மு.க. அமைச்சர்களும் வெகு விரைவிலேயே நிருபித்துக் காட்டி விட்டனர்.

மத்திய பெட்ரோலியத் துறை இணை அமைச்சரான டி.ஆர். பாலு பதவியேற்றதுமே பெட்ரோல் விலையேற்றத்தை நியாயப்படுத்தியதோடு, "பெட்ரோலியத் துறை ஒரு வியாபார நிறுவனம்; இலாபமில்லாமல் நட்டத்தில் இயங்க அதை அனுமதிக்க முடியாது" என்று திமிராகக் கொக்கரித்தார். பெட்ரோல் விலை உயர்வை உங்கள் கட்சித் தலைவர் விமர்சித்துள்ளாரே என்று பத்திரிகை நிருபர்கள் கேட்ட போது, "பெட்ரோல் விலை உயர்வைப் பொருத்தவரை நான் முதலில் தேவே கௌடாவைத்தான் ஆதரிப்பேன்; பிறகுதான் கட்சியெல்லாம்!" என்று தனது பிழைப்புவாதத்தைப் பகிரங்கமாக்கினார். மாறன் - கருணாநிதி குடும்பத்தின் நம்பகமான விசுவாசியான, தி.மு.க.வின் புதிய தலைமுறையைச் சேர்ந்த இணையமைச்சரே இப்படியென்றால், மூத்த அமைச்சரான மாறன் எப்படியிருப்பார் என்று சொல்லத் தேவையில்லை.

"இன உரிமை, நாட்டுப் பற்று, கொள்கை - இலட்சியம் என்று எதையும் பார்க்கத் தேவையில்லை. பணம் - பதவியைக் குறி வைத்து அரசியல் நடத்துவதில் தவறில்லை. நாட்டை மறுகாலனியாக்கி, அந்நிய ஏகாதிபத்தியங்களுக்கும் தரகுப் பெரு முதலாளிகளுக்கும் விசுவாச சேவை செய்வதுதான் ஓட்டுப் பொறுக்கிகளின் இன்றைய கொள்கை என்றாகிவிட்ட பிறகு, அதையே பகிரங்கமாகச் செய்வதில் தவறொன்றுமில்லை" என்கிற புதிய பாரம்பரியம் - பண்பாட்டை மாறனும், தி.மு.க. அமைச்சர்களும் படைத்து வருகிறார்கள்.

கட்சித் தொண்டர்களுடன் கலகலப்பாக பேசி ஐக்கியப்படாமல், எப்போதும் இறுக்கமாகவே இருக்கும் மாறனை, "தி.மு.க.வின் நரசிம்மராவ்" என்று அக்கட்சி அணிகளே வேடிக்கையாகக் குறிப்பிடுவதுண்டு. ப்ழகும் தன்மையில் மட்டுமல்ல; நாட்டை ஏகாதிபத்தியங்களின் வேட்டைக் காடாக்குவதிலும், அரசியல் தரகு வேலைகளிலும் தானும் ஓர் இளைய நரசிம்மராவ்தான் என்பதை மாறன் வெகு விரைவிலேயே நிருபித்துக் காட்டி விட்டார்.

• மனோகரன்



படிப்பகம்

www.padippakam.com

# "தாதா"க்களே தலைவர்களாக...

## ஓட்டுக் கட்சிகளைப் பீடித்துள்ள புதிய சீக்கு

ம.தி.மு.க.வின் வடசென்னை ஆர்.கே. நகர் பகுதிச் செயலாளர் சிவா, கடந்த ஜனவரி 22-ம் தேதி அதிகாலை ராயபுரம் மாதா கோவில் தெருவில் உள்ள தனது நண்பரும் தொழில் கூட்டாளியுமான சுரேஷைப் பார்க்கச் சென்றார். ஐந்தாறு கார்களில் வந்த கூலிப் படையினர் சரமாரியாக அரிவாளால் வெட்டி சிவாவைக் கொன்று விட்டனர்.

1993-இல் இதே ராயபுரம் பகுதியில் தான் ம.தி.மு.க.வின் வடசென்னை செயலாளர் ஏழுமலை கொல்லப்பட்டார். அரசியல் ஆதாயம் பெறுவதற்காக மு.க.ஸ்டாலின் சொல்லித்தான் ஏழுமலை கொல்லப்பட்டார் என அறிக்கை வெளியிட்டு மூக்கறுபட்டார் வை.கோ. அப்போதைய அ.தி.மு.க. மந்திரி மதுசூதனனின் உத்தரவின் பேரில் அவரது அடியாள் படைகளால்தான் ஏழுமலை கொல்லப்பட்டார் என்ற செய்தி கசிந்தும் கூட இன்றுவரை கொலைகாரர்கள் தண்டிக்கப்படவில்லை.

இப்போது கொல்லப்பட்ட சிவா, ஏழுமலையின் அரசியல், தொழில் வாரிசு. ஏழுமலை மிகப் பெரிய தாதா. அவருக்கு எதிரிகளும் அதிகம். அவர் கொல்லப்பட்ட போது ராயபுரம் பரபரப்பானது. வழக்கம் போல் 'ஜெ' ஆட்சி குற்றவாளிகளைப் பாதுகாத்தது. பொய்யாக தி.மு.க.வினர் சிலரை கைது செய்து, ஜாமீனில் விட்டது. ஏழுமலை கொலை வழக்கை சரிவர நடத்தவில்லை.

அதே வழியில் இன்று சிவா கொலை. சிவாவிற்கும் சமீபத்தில் தொடர்ந்து கொலை மிரட்டல்கள் வந்தது. அதனால் எப்போதும் பாதுகாப்புக்கு ஆட்களுடன் தான் சிவா நடமாடினார். இதிலும் அரசியல் ஆதாயம் தேடி வை.கோ. சி.பி.ஐ. விசாரணை கோரி தமிழகம் முழுதும் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளார்.

அரசியலில் நேர்மை, பொதுவாழ்வில் தூய்மை, கொள்கையில் உறுதி என மேடைக்கு மேடை முழக்கமிடும் ம.தி.மு.க.விலும் தாதாக்கள். பயங்கர ரவுடிகள். இவர்கள் நேர்மை, தூய்மை, கொள்கை என கட்சிக்கு வரவில்லை. தனது உயிருக்கும், தொழிலுக்குமான பாதுகாப்பிற்கும் உத்தரவாதத்திற்கும் தான் அரசியல் கட்சிகளில் இணைந்தனர்.

முதலில் இன்றைய தி.மு.க. எம்.எல்.ஏ. மதிவாணனின் அப்பாவிடமிருந்தார் சிவா. பிறகு சிறிது வளர்ந்ததும் சீனித்தலை ராஜ் என்பவருடன் இணைந்தார்.

• கடத்தல் தொழில் முழு நேர வேலையானது. இங்கு சீனித்தலை ராஜுவுடன் மோதல்வர, அவரை விட பெரிய ரவுடியான எர்ணாவூர் நாராயணனிடம் சேர்ந்து பாதுகாப்பு தேடிக் கொண்டார்.

• எர்ணாவூர் நாராயணனின் தொழில்களில் கொலை, கள்ளச்சாராயம், கஞ்சா கடத்தல் என எல்லா சமூக விரோதச் செயல்களும் அடக்கம். சிவா, நாராயணனுடன் நெருக்கமாக இருந்து 'தொழிலில்' திறமை பெற்றார். நாராயணனின் வலது கரமாக விளங்கினார். சிவாவின் செல்வாக்கும் செல்வமும் பெருக அங்கும் மோதல் வந்தது.

• எர்ணாவூர் நாராயணனிடமிருந்து தனது உயிரைப் பாதுகாக்க அவரை விடப் பெரிய தாதாவான ஏழுமலையிடம் அடைக்கலமானார் சிவா. அங்கும் தனது 'தொழில்' திறமையால் மேல் மட்டத்திற்கு வந்தார். வந்த சிறிது நாட்களில் ஏழுமலை கொல்லப்பட சிவா தலைமை தாதாவானார்.

• துறைமுகம் காண்ட்ராக்ட் தொழில் ஏழுமலை செய்து வந்தது. அத்தொழில் சிவா கைக்கு மாறியது. நாளொன்றுக்கு ரூ. 10,000 முதல் ரூ. 20,000 வரை லாபம் கிடைக்கும் தொழில். இதில் மட்டும் மாதத்திற்கு ஐந்தாறு லட்சம் லாபம். இதில் பல தாதாக்களுடன் மோதல்.

• இது தவிர சொந்தமாக நாலு லாரிகள் ஓடுகிறது. மேலும் கோடிக் கணக்கில் சந்தனக் கடத்தல் தொழிலும் செய்து வந்தவன்தான் இந்த சிவா.

இப்படி சமூக விரோத தொழில்களில் கொடி கட்டிப் பறந்தவன்தான் சிவா. இதில் எதிரிகள் அதிகம்.

ஏற்கனவே அ.தி.மு.க. விலிருந்த எர்ணாவூர் நாராயணன் தமிழ் மாநில காங்கிரசில் இணைந்தான். ஏழுமலையுடனிருந்த சொரூப் சந்திரன் சிவா ஆதிக்கத்தை எதிர்த்து ம.தி.மு.க.விலிருந்து விலகி தி.மு.க.வில் இணைந்தான். துறைமுக காண்ட்ராக்டைப் பெறுவதற்காக சொரூப் சந்திரன் களத்திலிறங்க சிவாவிற்கும் சொரூப் சந்திரனுக்கும் மோதல் நடந்துள்ளது. இடையில் எர்ணாவூர் நாராயணனும் காண்ட்ராக்ட்டைப் பெற முயன்றுள்ளான். 1993-இல் ஒரு முறை குண்டர் சட்டத்தில் சிறையிலடைக்கப்பட்டவன்தான் இந்த நாராயணன். அதற்குக் காரணம் சிவாதான் என்ற கோபம், ஏற்கனவே நடந்த தொழில் போட்டியும் தற்போதைய காண்ட்ராக்ட் பிரச்சினையும் சேர நாராயணன் ஏரலில் உள்ள தனது தம்பி சின்னதுரை மூலம் சிவாவைக் கொலை செய்துள்ளான். நாராயணன், சின்னதுரை உட்பட 10 பேர் வரை நீதிமன்றங்களில் சரணடைந்துள்ளனர். இதில் மேலும் பலர் சம்பந்தப்பட்டிருப்பதாக போலீசார் விசாரித்து வருகின்றனர்.

ஆக, ரவுடிகளுக்கிடையிலான போட்டியில் சிவா கொல்லப்பட்டிருக்கிறான்.தான் கொல்லப்படுவோம் எனத் தெரிந்தே எப்போதும் அடியாட்கள் சூழ நடமாடி வந்துள்ளான். ஆனால் இந்த சிவாவிற்குப் பின்னால் ஒரு ஒளி வட்டம் போடுகின்றனர்.

'ம.தி.மு.க. வளர்ச்சியைப் பொறுக்காமல் இரண்டாவது கொலை செய்து விட்டனர். மாநில அரசு வழக்கை பிசுபிசுக்க வைக்க சதி செய்கிறது. எனவே சி.பி.ஐ. விசாரணை வேண்டும்' என்கிறார், வை.கோ.

சிவாவை தியாகியாக்கி தமிழகம் முழுதும் ஆர்ப்பாட்டம் நடத்துகிறார் வை.கோ. கிசுகிசு பத்திரிகைகளோ இன்னும் மேலேபோய் 'சிவா, தான் சம்பாதித்த பாதிப்பணத்தை ஏழை, எளியவர்களுக்கு வாரி வழங்கினார். தனது சொந்த செலவில் ராயபுரம் எட்டியப்ப நாயக்கர் பள்ளிக்கு பல லட்ச ரூபாய் மதிப்புள்ள கம்ப்யூட்டர்கள் வாங்கித் தந்தார். தனது ம.தி.மு.க. கட்சிக்கும் பெருமளவில் செலவழித்தார். கட்சியில் முக்கிய பொறுப்பு தர முடிவு செய்த நேரத்தில் இப்படி நடந்து விட்டது' என ஒரு பக்க உண்மைகளை மட்டும் பெரிதுபடுத்தி வருந்துகின்றன. ஆனால் பணம் சம்பாதித்த வழியைப் பற்றி வசதியாக மறந்து விடுகின்றன. அல்லது முக்கியத்துவமளிப்பதில்லை.

ம.தி.மு.க.வில் மட்டுமில்லை. இன்று எல்லா கட்சிகளிலும் ரவுடிகளே தலைவர்களாக வருகின்றனர். கொலை, கொள்ளை, கள்ளச்சாராயம், போதை கடத்தல் என

போட்டி ரவுடிக் கும்பலால் கொல்லப்பட்ட ம.தி.மு.க. சிவா




படிப்பகம்

www.padippakam.com

இன்றைக்கு ஒரு பகுதியில் பெரும் ரவுடியாக இருப்பவன் கட்டாயம் ஒரு கட்சியிலிருக்கிறான். அங்கு கட்சி அலுவலகம் அந்த கிரிமினலின் கட்டுப்பாட்டில் இயங்குகிறது. பெரும்பாலும் கிரிமினலின் 'அலுவலகமே' கட்சி அலுவலகமாக இயங்குகிறது.

தொலைபேசி, "செல்லுலார்" தொலைபேசி, "பேஜர்" என நவீன தொலை தொடர்பு சாதனங்களுடன் இக்கும்பல் செயல்படுகிறது. அப்பகுதியில் மாமூல் வசூலிப்பது, கட்டப் பஞ்சாயத்து நடத்திப் பணம் பறிப்பது, கள்ளச் சாராயம் விற்பது என எல்லா சமூக விரோதச் செயல்களும் எவ்விதத் தங்கு தடையுமின்றி நடைபெறும்.

மக்களின் அன்றாட நடவடிக்கைகளை ஆட்டிப் படைப்பவர்களாக இக்கும்பல் மாறுகிறது. குடிநீர் தொட்டியிலிருந்து நியாயவிலைக் கடை வரை அனைத்தும் இக்கும்பலின் கட்டுப்பாட்டில்தான். யாரும் கேள்வி கேட்க முடியாது. யாராவது முனகினால்கூடப் பாய்ந்து குதறிவிடுவார்கள். ரத்தக்களரி ஏற்படுத்துவது சாதாரண விசயம். தன்னை மீறி யாராவது வளர்ந்து விடலாம் என சந்தேகப்பட்டால், கொலை செய்யக்கூடத் தயங்க மாட்டார்கள்.

இவர்களின் இன்னுமொரு முக்கியமான தொழில் "ரியல் எஸ்டேட்" வியாபாரம். வில்லங்கமான சொத்துக்களை அடிமாட்டு விலைக்கு வாங்குவது. அதில் குடியிருப்பவர்களை மிரட்டி விரட்டியடித்து சொத்துக்களை அபகரிப்பது. பின் கொள்ளை இலாபத்திற்கு விற்பது.

வீடு வாடகைக்கு இருப்பவர் காலி செய்யவில்லை என்றால் பணம் வாங்கிக் கொண்டு அடியாள் கும்பல்களை ஏவிக் காலி செய்வது.

புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து, அடுக்கு மாடிக் கட்டிடங்கள் கட்டி விற்பது; அதைச் சட்டபூர்வமாக மாற்றிக் கொள்வது.

இப்படி கோடி கோடியாகப் புரளும் "ரியல் எஸ்டேட்" வியாபாரத்தில் இக்கிரிமினல்கள் வைத்ததுதான் சட்டம் எனச் செயல்படுகின்றன.

இதே பாணியில் ரௌடி கும்பலும் செயல்படுகிறார்கள். நவீன துப்பாக்கிகள், நவீன சொகுசுக் கார்கள் சகிதமாக மிக நவீனமாகச் செயல்படுகின்றன இக்கிரிமினல் கும்பல்கள். திரைப்படங்களுக்குக் கடன் தருவதும், அத்துறையில் தலையிடுவது என்பது வரை முன்னேறியுள்ளனர்.

இவர்களின் செயல்பாடு ஒரு வலைப்பின்னலாக தமிழகம் முழுவதும் விரிந்து பரந்துள்ளது. சென்னையில் ஒரு கொலைக்குத் திட்டமிடும்போது இக்கும்பல் நேரே களத்தில் இறங்குவதில்லை. மாறாக, தென் மாவட்டங்களிலிருந்து ஆட்களை வரவழைத்து, சகல சொகுசு வசதிகளுடன் தங்க வைப்பார்கள். காரியம் முடிந்ததும் வந்த கும்பல் ஊர் திரும்பி விடும். குற்றவாளி யார் எனத் தெரியாமல் வழக்கே மூடப்படும்.

தென் மாவட்டங்களின் சாதிக் கலவரங்களின் போது கூட இது போன்ற நடைமுறை செயல்படுத்தப்பட்டுள்ளதாகச் செய்திகள் வந்தன. கபிலன், ஆசைத்தம்பி, மனோ போன்ற சுட்டுக்கொல்லப்பட்ட ரவுடிகள் இந்த முறையில் தான் இயங்கினர். சமீபத்திய சிவா கொலையிலும் இதுதான் நடந்துள்ளது.

சமூக விரோதச் செயல்களைச் செய்பவர்கள் கட்சித் தலைவர்கள்.

சமீபத்தில் உறுப்பினர்களை அதிகம் சேர்க்க த.மா.கா. ஒரு இயக்கம் நடத்தியது. சமூக விரோதிகள் கூட உறுப்பினர் கார்டு வைத்துக் கொண்டு போலீசை மிரட்டுவதாக ஒரு த.மா.கா. தலைவர் வருத்தப்பட்ட செய்தி ஜூ.வி.யில் வந்தது. கட்சி சமூக விரோதிகளுடன் நெருக்கமாயிருக்கும் போது அவர்கள் உறுப்பினராகாமல் வேறு யார் சேருவார்கள்? சிவாவைக் கொன்றதாக நீதிமன்றத்தில் சரணடைந்துள்ள எர்ணாவூர் நாராயணன் ஒரு த.மா.கா. பிரமுகர். தவிர மந்திரிகள் சற்குண பாண்டியன், ஜெனிபர் சந்திரனுடன் மேடையில் முக்கிய அரசியல் பிரமுகராக தன்னை விளம்பரப்படுத்திக் கொண்டவர், வட சென்னை வியாபாரிகள் சங்கத் தலைவர். சாதி சங்கத்தில் முக்கிய பிரமுகர்.

பா.ம.க.விலும் இதே போல குரு என்பவர், பெரம்பலூர் மாவட்டச் செயலாளர். ஏற்கெனவே ஒரு கொலை வழக்கில் சரியான சாட்சியங்கள் இல்லாததால் வழக்கு தள்ளுபடியானது. சேத்தியாத்தோப்பில் ஒரு கொலை வழக்கில் குரு ஒரு குற்றவாளி. கள்ளச்சாராய வியாபாரம், கட்டப்பஞ்சாயத்து செய்து பணம் பறிப்பவன். சமீபத்தில் இவன் வாகனத் திருட்டு, கள்ளச் சாராய வழக்கில் கைதான போது பா.ம.க.வினர் பல நாள் பஸ் மறியல் செய்து கலவரம் நடத்தினர்.

தி.மு.க.வில் கடந்த உள்ளாட்சித் தேர்தலின் போது உதவி மேயர் என்ற கனவுடன் மதுரை மாநகர கவுன்சிலராக நின்ற புதூர் சவரிமுத்து கொல்லப்பட்டதும் ரவுடிகளுக்கிடையிலான மோதலில்தான். இவரது திருமணம் முதல்வர் கருணாநிதி தலைமையில் நடந்தது. சவரி முத்துவின் தாதா பின்னணி தெரிந்தும் கருணாநிதி கலந்து கொண்டார்.

விழுப்புரம் மின்னல்ராஜா, தி.மு.க. தொண்டர்படை அமைப்பாளர். ஒரு கொலை வழக்கில் இவனுக்கு மாவட்ட நீதிமன்றம் ஆயுள் தண்டனை தந்ததும், விழுப்புரத்தையே சூறையாடியது மின்னல் ராஜாவின் அடியாள் கும்பல். தற்செயலாக நீதிபதி தப்பித்துக் கொண்டார். அவரது கார் அடித்து நொறுக்கப்பட்டது.



தனது 'தொழில்' பாதுகாப்புக்கு த.மா.கா.வை அரவணைத்துக் கொண்ட எர்ணாவூர் நாராயணன்

மதுரை 30-வது வார்டு கவுன்சிலர் சண்முகம், மேயர் தலைமையிலான முதல் கூட்டம் நடந்த போது சிறையிலிருந்தார். கட்டப் பஞ்சாயத்து செய்யும் பெரிய ரவுடி எனத் தெரிந்த பின்தான், அத்தகுதிக்கு தான் சண்முகத்தை தி.மு.க. 30-வது வார்டு கவுன்சிலராக நிறுத்தியது. சைதை கிட்டு, தூத்துக்குடி பெரியசாமி என பட்டியல் மிக நீண்டு செல்கிறது.

அ.தி.மு.க. பற்றி சொல்ல வேண்டியதேயில்லை. மந்திரியிலிருந்து அடிமட்டத் தொண்டர் வரை ரவுடித்தனம் ஒரு தகுதியாக்கப்பட்டு, அது கலையாக-வளர்க்கப் பட்டது. ஐந்து ஆண்டு கால ஆட்சியில் தமிழக மக்கள் கண்டு வெறுத்துப் போயினர்.

இன்னும் ஒரு படி மேலே போய் ஜான்பாண்டியன் என்ற சமூக விரோதி சாதியத் தலைவராக கட்சிகளுடன் பேரம் பேசி வந்தான். ஆங்காங்கே கலவரங்களுக்கு வித்தூன்றி விட்டு, இடத்தைக் காலி பண்ணி ஓடி வந்து விடுவான். சாவது அப்பாவி உழைக்கும் மக்கள் தான்.

இன்று கராத்தே செல்வின் என்ற சமூக விரோதி 'காமராஜ் ஆதித்தனார் கழகம்' என்ற கட்சியையே தொடங்கியுள்ளான். அரிவாள்களும் துப்பாக்கியுமாக ஒரு பெரிய அடியாள் கும்பலைக் கொண்டு கட்டப்பஞ்சாயத்து, மிரட்டல், மாமூல் என கட்சி நடத்தி வருகிறான். சாதியத் தலைவர்களும் அச்சாதிய பண்ணையார்களும், பணக்காரர்களும் அவனுக்கு பக்கபலமாக உள்ளனர்.

கட்சிகள் ரவுடிகளைப் பயன்படுத்திய காலம் போய் ரவுடிகளே கட்சித் தலைவர்களாக, மந்திரிகளாக உலா வருகின்ற நிலைமை உருவாகியுள்ளது. எய்ட்ஸ் நோயைப்போல, கெட்டமுகி நாறும் நாடாளுமன்ற ஜனநாயகத்தை இப்புதிய போக்கு வேகமாகத் தாக்கி வருகிறது.

• ராசு


படிப்பகம்

www.padippakam.com



## ஜெர்மனியை அச்சுறுத்தும் கோடிக்கால் பூதம்

உலகின் மூன்றாவது பொருளாதார வல்லரசு நாடாகிய ஜெர்மனியில், அண்மைக் காலமாக அதிகரித்து வரும் வேலையின்மையைத் தீர்க்க வழி தெரியாமல் ஆட்சியாளர்கள் விழி பிதுங்கி நிற்கின்றனர். ஜெர்மனியில் நெருக்கடி மிகுந்த 1950-லிருந்து 70வரை வேலையற்றோர் எண்ணிக்கை 5 லட்சம் பேரைத் தாண்டியதில்லை. ஆனால் 1997-ன் துவக்கத்தில் இது 47 லட்சமாகி விட்டது. கதவடைப்பு காரணமாக அரைகுறையாக வேலை பெறுவோரின் எண்ணிக்கையையும் சேர்த்தால் இது 60 லட்சம் பேரைத் தாண்டிவிடும் என்று அந்நாட்டின் பொருளாதாரவாதிகளே ஒப்புக் கொள்கின்றனர். கடந்த ஜனவரி மாதத்தில் மட்டும் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் புதிதாக 5 லட்சம் பேர் பதிவு செய்துள்ளதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன. ஜெர்மனியின் மக்கட் தொகையில் 12% பேர் வேலையின்மையால் பரிதவிக்கின்றனர். குறிப்பாக, கிழக்கு ஜெர்மனியில் இது 30% ஆகத் தீவிரமடைந்துள்ளது.

பல லட்சக் கணக்கான தொழிலாளர்கள், வேலையில்லாதோருக்கு அரசு தரும் அற்ப நிவாரணத் தொகையைப் பெறுவதற்காக நீண்ட வரிசையில் மணிக்கணக்கில் காத்திருப்பது ஜெர்மனியில் அன்றாடக் காட்சியாகி விட்டது. இந்த வரிசை ஒரு கி.மீ. நீளத்திற்கும் மேலாக நீண்டு செல்வதாக பத்திரிகைகள் எழுதுகின்றன. ஜெர்மனியின் வரலாற்றில் கடந்த 64 ஆண்டுகளில் இப்படியொரு நெருக்கடி ஏற்பட்டதில்லை என்று பொருளாதார நிபுணர்கள் அங்கலாய்க்கின்றனர். ஆனால் அவர்களாலும் தீர்வு காண முடியாத அளவுக்கு நெருக்கடி தீவிரமாகிவிட்டது.

வேலை வாய்ப்பு மையங்களில் கிடைக்கும் ஓரிரு வேலைக்கு பலர் போட்டியிடுவதால், வேலையில்லா தொழிலாளர்களிடையே அடிதடியும் கைகலப்பும் நடப்பது வாடிக்கையாகி விட்டது. சில நேரங்களில் கொலை மிரட்டல்களும் நடக்கின்றன. 1930-களில் இது போன்ற நெருக்கடியின் விளைவாக பாசிசம் அரியணைக்கு வந்தது. அது போன்ற நிலைமையை நோக்கி ஜெர்மனி நாலுகால் பாய்ச்சலில் செல்வதாக சமூகவியலாளர்கள் மதிப்பிடுகின்றனர்.

1990-இல் கிழக்கு ஜெர்மனியை மேற்கு ஜெர்மனி விழுங்கி ஒரே நாடாக ஐக்கியப்பட்ட போது, மக்களிடம் இருந்த நம்பிக்கையும் கனவுகளும் இன்று மணற்கோட்டையாக சரிந்து விட்டது. வல்லரசு நாடான ஜெர்மனி, இராணுவ - பொருளாதார கூட்டுகள் மூலம் ஐரோப்பிய சமூக நாடுகளைத் தன் பின்னே அணி திரட்டிக் கொண்டு உலக மேலாதிக்கப் போட்டியில் அமெரிக்காவை விஞ்சத் துடிக்கிறது. ஆனால் அதன் உள்நாட்டில் வேலையின்மை எனும் புதை சேற்றில் சிக்கிக் கொண்டு அலறுகிறது.

## அரியானாவை ஆளுவது உலக வங்கிதான்! — அமைச்சரின் ஒப்புதல் வாக்குமூலம்

அரியானா மாநிலத்தின் மின்சார வாரியம் நட்டத்தில் இயங்குவதால், அதை ஈடு செய்வதாகக் கூறிக் கொண்டு உலக வங்கி உத்திரவுப்படி மின்துறையை தனியாருக்குத் தாரை வார்க்க அம்மாநில அரசு அண்மையில் தீர்மானித்துள்ளது. உலக வங்கி திட்டப்படி மாநில மின் துறையை மறுசீரமைப்பது, மின் உற்பத்தி மற்றும் விநியோக உரிமையை தனியார் - அந்நிய நிறுவனங்களிடம் கொடுப்பது, இதற்காக உலக வங்கியிடம் 5000 கோடி ரூபாய் 'உதவி' பெறுவது என்று, ஆளும் பன்சிலால் அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி அரியானாவின் நான்கு மாவட்டங்களில் புதிய மின் நிலையங்கள் அமைக்கவும், நடப்பிலுள்ள மின்சார வாரியத்தை தனியார் - அந்நிய நிறுவனங்கள் இயக்கவும் சர்வதேச டெண்டர்கள் கோரப்பட்டுள்ளன. இதன் விளைவாக, மாநில மின்வாரிய ஊழியர்கள் வேலை இழக்கும் அபாயம் உள்ளதால் அவர்கள் அரசின் முடிவை எதிர்த்து போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

உலக வங்கியின் உத்தரவுக்கு கோலெடுத்தால் ஆடும் குரங்காக மாறிவிட்ட அரசின் முடிவை எதிர்த்து மாநில மின்துறை அமைச்சரான ஜஸ்வந்த் சிங் பதவி விலகி விட்டார். ''நாட்டையும் மக்களையும் கடுமையாகப் பாதிக்கும் இம் முடிவை அனைத்து தரப்பினரிடமும் விவாதிக்கவில்லை. உலக வங்கி உத்தரவுப்படி, சட்டத்துக்குப் புறம்பான வழிகளில் இம் முடிவு சர்வாதிகாரமாக திணிக்கப்படுகிறது. மாநில மின்துறை அமைச்சரான என்னைப் புறக்கணித்து விட்டு உலக வங்கி குழுவுடன் ஆட்சியாளர்கள் பேச்சுவார்த்தை நடத்துகின்றனர். மின் உற்பத்தியைத் தீர்மானிப்பதும் விநியோகிப்பதும் கட்டுப்படுத்துவதும் உலக வங்கியின் கையில்தான் உள்ளது. மாநில அரசுக்கு எந்த உரிமையோ, அதிகாரமோ கிடையாது. உலக வங்கி உத்தரவுப்படி தனியார்மயமாக்கினால் மின் கட்டணம் கடுமையாக உயர்வதோடு, பல்லாயிரக்கணக்கான மின் வாரிய ஊழியர்களும் வேலை இழப்பர். மக்கள் சொத்தான மின்சார வாரியத்தை தனியாருக்கு ஏலம் போடவோ, விற்கவோ எனக்கு அதிகாரம் கிடையாது. மக்களோடு சேர்ந்து இந்த அநியாயத்தை எதிர்ப்பேன்'' என்று தனது அமைச்சர் பதவியிலிருந்து அவர் விலகியுள்ளார்.

நாட்டை ஆள்வதாகக் கூறிக் கொள்ளும் மத்திய - மாநில அரசுகள், அமைச்சர்களுக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது; உண்மையான அதிகாரம் உலக வங்கியிடமும் அந்நிய ஏகாதிபத்தியங்களிடமும் தான் உள்ளது என்பதை இது மீண்டும் நிரூபித்துக் காட்டி விட்டது.

**அரசு நிவாரணத் தொகையைப் பெறுவதற்காகக் காத்து நிற்கும் வேலையற்றோர் பட்டாளம்**




## பார்வையைப் பறித்த பாசிச ரௌடிகள்

பீகாரின் பாகல்பூரில் போலீசுக்காரன்கள் விசாரணைக் கைதிகளின் கண்களில் திராவகத்தை ஊற்றி குருடாக்கிய கொடுஞ்செயலைப் போலவே, குஜராத்தின் ராஜ்கோட்டில் போலீசுக் கயவாளிகள் 7 பேரைக் கொடூரமாகச் சித்திரவதை செய்து கண்களைக் குருடாக்கியுள்ளனர். பீகார் போலீசு ரௌடிகளைப் போல குஜராத் போலீசு ரௌடிகள் திராவகத்தை ஊற்றவில்லை; 'டைகர் பாம்'' எனும் வலி நிவாரணி மருந்தை கண்களில் வைத்து தேய்த்து குருடாக்கியுள்ளனர். கடந்த ஜனவரி இறுதியிலிருந்து அடுத்தடுத்து 7 பேருக்கு இத்தகைய கொடூர சித்திரவதையைச் செய்து அவர்களின் எதிர்கால வாழ்வையே இருளில் தள்ளியுள்ளனர்.

குஜராத் ராஜ்கோட் நகரில் கள்ளச்சாரயம், சூதாட்டம், திருட்டு பெருகி விட்டதால் அவற்றைக் கட்டுப்படுத்துவதாகக் கூறிக் கொண்டு சூதாட்டத்தில் ஈடுபட்ட அல்லது வேடிக்கை பார்த்த பலரைப் போலீசார் கைது செய்தனர். இவர்கள் பரம்பரைக் குற்றவாளிகளோ, கிரிமினல்களோ அல்ல. அனைவரும் கூலித் தொழிலாளிக்ள். போலீசார் கைது செய்த போது வெறும் 50 பைசாவிலிருந்து 25 ரூபாய் வரை தான் அவர்களது பைகளில் இருந்துள்ளது. போலீசு நிலையத்தில் இவர்களை மிருகத்தனமாக சித்திரவதை செய்த போலீசார், இனி இதுபோல் சூதாடக் கூடாது என்று கண்களில் வலி நிவாரணி மருந்தை வைத்து தேய்த்துள்ளனர். இக் கொடுஞ்செயல் போலீசு துணைக் கமிஷனரான கே.எல்.என். ராவ் முன்னிலையிலேயே நடந்துள்ளது. எரிச்சல் தாளாமல் கண்கள் வீங்கி அலறிய அவர்களுக்கு எவ்வித





படிப்பகம்

www.padippakam.com



முதலுதவியும் செய்யாமல் போலீசார் அடித்து விரட்டினர். கண் மருத்துவமனைக்கு பாதிக்கப்பட்டவர்கள் அடுத்தடுத்து சென்ற பின்னரே மருத்துவர்கள் மூலம் இக்கொடுஞ்செயல் இப்போது வெளியே தெரிய வந்துள்ளது. சித்திரவதைக்குள்ளான 7 பேரின் விழிப்படலம் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது என்றும் மூன்று மாத சிகிச்சைக்குப் பின்னரே அவர்களுக்குப் பார்வை திரும்புமா எனக் கூற முடியும் என்றும் மருத்துவர்கள் சொல்கின்றனர்.



இருண்ட எதிர்காலம்: போலீசு ரௌடிகளால் கண் பார்வை பறிக்கப்பட்டவர்கள்

உதிரத்தை உறையச் செய்யும் குஜராத் போலீசு குண்டர்களின் இச் சித்திரவதைக் கொடுஞ்செயல் நாடெங்கும் நாறத் தொடங்கியதும், குஜராத் அரசு 9 போலீசுக்காரர்களை தற்காலிகப் பணி நீக்கம் செய்துள்ளது. ஆனால் அவர்கள் இன்றுவரை கைது செய்யப்படவில்லை. போலீசு பாதுகாப்பில் அவர்கள் தலைமறைவாக உள்ளனர். இக்கொடுஞ்செயல் பற்றிய விசாரணை அறிக்கையின்படி நடவடிக்கை எடுக்குமாறும், மனித உரிமைகளை மதித்து நடக்குமாறும் குஜராத் போலீசுக்கு தேசிய மனித உரிமைக் கமிசன் வேண்டுகோள் விடுத்துள்ளது. ஆனால் பாசிச இட்லருக்கே பாடம் சொல்லித்தரும் வகையில் பயங்கரவாத முறையில் பயிற்றுவிக்கப்பட்ட இந்தியப் போலீசார், மனித உரிமைகளை ஒருபோதும் மதித்து நடக்க மாட்டார்கள் என்பதை பெருகிவரும் கொட்டடிக் கொலைகளும், பாசிச சித்திரவதைகளுமே நிருபித்துக் காட்டுகின்றன.

## அல்பேனியா: முதலாளித்துவத்தின் மோசடி

அல்பேனியாவில் அண்மைக் காலமாகத் தொடரும் வரலாறு காணாத ஆர்ப்பாட்டங்கள், அந்நாட்டையே உலுக்கி வருகிறது. கிரீசுக்கும் யூகோஸ்லாவியாவுக்கும் இடைப்பட்ட சிறிய ஏழை நாடான அல்பேனியாவில் போலிக் கம்யூனிச ஆட்சி தூக்கியெறியப்பட்டு, முதலாளித்துவ ஆட்சி நிலைநாட்டப்பட்ட பிறகு மீள முடியாத பொருளாதார நெருக்கடியில் அந்நாடும் மக்களும் சிக்கித் தவிக்கின்றனர். இந்நிலையில், அல்பேனிய மக்களிடம் எஞ்சியிருந்த அற்ப சேமிப்புகளையும் முதலாளித்துவ மோசடி நிதி நிறுவனங்கள் ஏமாற்றி கைப்பற்றிக் கொண்டு பட்டை நாமத்தைப் போட்டு விட்டன. தமிழகத்தின் அனுபவ், ஸ்டெர்லிங், ஈஸ்வரி முதலான மோசடி நிதி நிறுவனங்களைப் போலவே கவர்ச்சிகரமான வட்டி தருவதாகக் கூறி, அல்பேனிய நிதி நிறுவனங்களும் மக்கள் பணத்தை விழுங்கி ஏப்பம் விட்டு விட்டன. இதில் சில நிதி நிறுவன முதலாளிகள் துருக்கி மற்றும் சுவிஸ் நாட்டிற்குப் பலகோடி ரூபாயுடன் தப்பியோடி தலைமறைவாகி விட்டனர். இதில் கொடுமை என்னவென்றால், இந்நிதி நிறுவனங்களால் மூலதனமும் சேமிப்பும் பெருகி பொருளாதாரம் முன்னேறும் என்று அல்பேனிய அரசும் இவற்றை ஆதரித்து ஊக்கப்படுத்தி வந்தது.

இம்மோசடி நிதி நிறுவனங்களிடமிருந்து தமது பணத்தைத் திரும்பப் பெறுவதற்காக நடந்த போராட்டம், இப்போது அரசுக்கு எதிரான போராட்டமாக தீவிரமடைந்துள்ளது. தலைநகர் டிரானா உள்ளிட்டு நாட்டின் 12 பெரு நகரங்களில் மீண்டும் மீண்டும் ஆர்ப்பாட்டங்கள் வெடித்துப் பரவுகின்றன. பீதியடைந்த அரசு, நாடெங்கும் அவசர நிலையைப் பிரகடனப்படுத்தி போராட்டத்தைத் தடை செய்த போதிலும், தடையை மீறி ஆர்ப்பாட்டங்கள் தொடர்கின்றன. அடக்கு முறையை ஏவும் போலீசாரை பொது மக்கள் தாக்குவதும் அவர்களது சீருடையைக் கழற்றி தீயிட்டுக் கொளுத்துவதும் அன்றாட நிகழ்ச்சியாகி விட்டது.

நிதி நிறுவனங்களின் மோசடி பற்றி நாடு தழுவிய விசாரணை நடத்தப் போவதாக பிரதமர் அலெக்சாண்டர் மெக்கி நாடகமாடுகிறார். ஆனால் மக்களின் போராட்டங்களோ, முதலாளித்துவ ஆட்சியையே காவு கொள்ளும் அளவுக்கு முன்னேறுகின்றன.

## இந்தியாவைக் கவ்விய அணுக் கதிர்வீச்சு அபாயம்

ஒவ்வொரு அரசுத் துறையையும் தனியார் — அந்நிய நிறுவனங்களுக்குத் தாரை வார்த்தது போதாது என்று, நாட்டைப் பேரழிவுக்குள் தள்ளும் வகையில் அணுசக்தி துறையையும் தனியார் மயமாக்க அண்மையில் ஐ.மு. அரசு தீர்மானித்துள்ளது. இதற்கேற்ப 1962-ம் ஆண்டின் அணுசக்தி கொள்கை குறித்த அரசியல் சட்டத்தையும் திருத்தியமைக்க முடிவு செய்துள்ளது. அண்மையில் பிரதமர் கௌடா, ஜப்பானிய வர்த்தக செய்திப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் முற்றிலும் 100% அந்நியருக்குச் சொந்தமான அணுமின் நிலையம் அமைக்க அரசு ஒப்புதல் அளிக்கும் என்று அறிவித்துள்ளார். பற்றாக்குறை காரணமாக 8-வது ஐந்தாண்டு திட்டத்தில் அணுமின் துறைக்குத் திட்டமிடப்பட்ட 15,000 கோடியில் வெறும் 760 கோடிதான் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மின் உற்பத்தியை வரும் பத்தாண்டுகளில் 5 மடங்கு உயர்த்த வேண்டியுள்ளதால் அணுமின் துறையை தனியார் மயமாக்க முடிவு செய்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அணுமின் துறையானது மிகப்பெருமளவு முதலீட்டை விழுங்கிவிட்டு அற்ப அளவுக்கு மின்சாரத்தை வழங்கும் லாபமற்ற துறையாகும். அணுக்கதிர் வீச்சு அபாயம் உள்ளதால், கூடுதலான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியிருப்பதாலும், அணுக் கழிவுகளால் சுற்றுச் சூழல் கெடாமல் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும் பெருமளவு மூலதனத்தை அணுமின்துறை விழுங்குகிறது. இதனால் தொழில் நுட்பத்தில் முன்னேறிய ஏகாதிபத்திய நாடுகளே அணுவாற்றல் மூலம் மின் உற்பத்தி செய்யும் முயற்சியைக் கை கழுவி விட்டன; அல்லது பெயரளவுக்கே இயக்குகின்றன. பாதுகாப்பு நடவடிக்கைகளால் ஏற்படும் பெரும் பொருட்செலவைக் குறைக்க, அணுக் கழிவுகளை ரகசியமாக ஏழை நாடுகளில் கொண்டு வந்து கொட்டுகின்றன. பின் தங்கிய ஏழை நாடுகளின் வாழ்வையும் வளத்தையும் சுற்றுச் சூழலையும் நாசப்படுத்துகின்றன.

இந்நிலையில் அந்நிய ஏகாதிபத்தியங்களை நம் நாட்டில் அணுமின் நிலையம் அமைத்துக் கொள்ள அனுமதித்தால், இந்திய நாடும் மக்களும் பேரழிவுக்குள் தள்ளப்படுவர். ஏகாதிபத்தியங்கள் தமது நாட்டின் அணுக்கழிவுகளை இங்கு வந்து கொட்டுவதற்கான குப்பைத் தொட்டியாக இந்தியா மாற்றப்பட்டு விடும். இதனால் சுற்றுச் சூழலும் மண்ணும் நஞ்சாகி இனம் புரியாத நோய்கள் பரவும். மேலும் அந்நிய அணுமின் நிறுவனங்களில் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதா என்று கண்காணித்து இந்திய அரசு நடவடிக்கை எடுக்கவும் அதிகாரம் கிடையாது. இதனால் அணுக் கதிர் வீச்சு அபாயம் இந்தியாவை எப்போதும் கவ்வியிருக்கும். இதுதவிர இந்த அணுமின் நிலையங்களில் ரகசியமாக அணு ஆயுதங்களைத் தயாரித்து சர்வதேச கள்ளச் சந்தையில் விற்கவும் ஏகாதிபத்திய நிறுவனங்களுக்கு வாய்ப்பு உள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

# "பூனைக்கும் தோழன்; பாலுக்கும் காவலன்"

**சென்ற இதழில் (16-28 பிப்ரவரி 1997) குறிப்பிட்டிருந்தபடி, "தலித்தியம்" பற்றி பு.ஜ. (1-15 சனவரி 1997)-வில் வெளியாகியிருந்த பதிலின் மீதான "தலித் பண்பாட்டுப் பேரவை"யின் மாநில ஒருங்கிணைப்பாளர் உஞ்சைராசனின் விமர்சனங்களுக்கு இங்கு பதில் தந்துள்ளோம். வாசகர்கள் அவர் வைத்த விமர்சனங்களை அறிந்து கொள்ளுவதற்கு ஏதுவாக, அவரது விமர்சனக் கடிதம் தரப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் விமர்சனமற்ற, சில பொதுவான கருத்துக்கள் மட்டுமே இடப் பற்றாக்குறை காரணமாக நீக்கப்பட்டுள்ளன. அவரது கடிதத்தைத் தொடர்ந்து, விமர்சனங்களின் மீதான பதில் தரப்பட்டுள்ளது.**

வணக்கம்.

புதிய ஜனநாயகம் ஜனவரி 1-15, '97 இதழ் படித்தேன். கேள்வி - பதில் பகுதியில் மதுரை வீரன் என்ற தோழரின் கேள்விக்கு விளக்கமான பதிலளித்துள்ளது வரவேற்கத்தக்கது. அதே சமயம் என் கருத்துக்களை சில விளக்கங்களுக்காக பு.ஜ.வுடன் பகிர்ந்து கொள்வது அவசியமாகிறது.

....கருவறை நுழைவுப் போராட்டத்தையொட்டி ஆதரவு தந்ததுடன் கிராமங்களில் சிறு தெய்வ வழிபாட்டிடங்களில் என்ன செய்யப்போகிறோம் என்றதற்கும் சரி, இதழ்களில் 'கீழ் சாதி', 'மேல் சாதி' என்ற சொல்லாடல்கள் குறித்த கேள்விகளுக்கும் சரி, குறுங்குளம் குறித்தும் சரி, தலித் இயக்கங்கள் குறித்த பார்வை பற்றி எழுப்பிய கேள்விக்கும் சரி, மதுரை தலித் கலை விழா குறித்த உடன்பாடு - முரண்பாடு பற்றியும் சரி... எதற்கும் தோழர்கள் வழியோ இதழ்கள் வழியோ இதுநாள் வரை எவ்வித கருத்தோ மறுப்போ இல்லை. ஒரு வேளை இது தேவையற்றதாக இருக்கலாம். அல்லது சந்திக்கும் வாய்ப்பு இல்லாமலிருக்கலாம். எனினும் 'அலட்சியம்' செய்கிறீர்கள் என்கிற அலட்சியத்திற்கு நான் வந்து விடவில்லை. ....எனது கருத்துக்களை தயை செய்து செவிமடுப்பதுடன் புதிய ஜனநாயகத்தில் வெளியிட வேண்டும் என்று தோழமையுடன் கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில் இந்த எனது கருத்து பலரின் கருத்துத் தொகுப்பாக இருக்கலாம். அல்லது இந்த முடிவுகளுக்கு வர உதவலாம்.

நீண்ட காலமாகவே, தலித், தலித் இலக்கியம், தலித் பண்பாடு, தலித் அரசியல், தலித் தலைமை, தலித்தியம்... என்கிற கோட்பாடு முழக்கங்கள் முன்மொழியப்பட்டு மேலோட்டமாகவும் ஆழமாகவும் பல சந்தர்ப்பங்களில் விவாதிக்கப்பட்டு வருகின்றன. இந்த விவாதங்களில் பங்கெடுக்கிற எவரும் நிலவும் சாதி பற்றிய பிரச்சினையிலிருந்தோ அதற்கான தீர்வுக்காகப் போராடும் மக்களின் எண்ணங்களிலிருந்தோ தொடங்காமல் சில நபர்கள் தன்முனைப்புக் கொண்டு முன்மொழிவதை மட்டும் எடுத்துக் கொண்டு தொடங்குகின்றனர். ஏனெனில் இவர்கள் குறிப்பிடும் சில நபர்கள் முன்பு மார்க்ஸிய இயக்கங்களிலிருந்து வெளியேறியவர்கள். இவர்களை உள்ளும் புறமுமாக உரித்தெடுப்பதில் நமக்கொன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால் இவர்கள் தான் தாழ்த்தப்பட்டவர்களின் ஒட்டுமொத்த பிரதிநிதி என்பதாய் இறுதி எண்ணப்படுத்திக் கொண்டு எழுந்து நின்று சண்டைக்கு வருவதையே கேள்விக்குள்ளாக்க வேண்டியுள்ளது.

உதாரணமாக, இன்று தோன்றியுள்ள தலித்திய கூறுகளனைத்தும் பின்நவீனத்துவ குழுவினரின் கண்டுபிடிப்பு என்பதாகவும், அக்குழுவின் முதன்மைச் சக்தியான ஒருவரின் மூளையில் உதித்து வெளிவருவதாகவும், அவைகளை தலித் இயக்கப் பிரதிநிதிகளும், தலித் இலக்கிய எழுத்தாளர்களும், தலித் மக்களும் அட்டியின்றி ஏற்றுக் கொண்டு அவர்கள் பின் தொடர்வதாகவும் கற்பனை செய்து கொண்டு பலரும் பலவாறாய் எழுதியும் பேசியும் வருகின்றனர்.

.....பு.ஜ. இதழும் நிறப்பிரிகை குழு, தன்னார்வக்குழு இவைகளை மனதில் வைத்துக் கொண்டு எளிதாக அனைத்து தலித் இயக்கங்களையும், நபர்களையும் அவர்கள் முன்மொழியும் கருத்தியலையும் எவ்விதப் பரிசீலனையும் இன்றி எடுத்த எடுப்பில் ஏகாதிபத்திய கைக்கூலிகள் என்பதாக முத்திரை குத்த வேண்டுமா என்பதே எனது கேள்வி.

கடந்த காலத்தில் புரட்சி பேசும் குழுக்களைப் பார்த்து இப்படித் தான் முத்திரை குத்தி ஒதுக்கினர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர். ஆனால் மக்களின் பக்கமுள்ள நியாயத்தையோ அதற்கான போராட்ட முறைகளையோ கொஞ்சமும் எண்ணிப் பார்க்க மறந்தனர். அதைப் போல் இன்றும் 'தலித் எழுச்சியை' வெறுமனே ஏகாதிபத்திய எச்சம் என்று ஏளனப்படுத்துவது உண்மையில் பிரச்சினையின் தன்மையை உதாசீனப்படுத்துவதாகி விடும். அதே சமயம் இப்படி அடிநாதமான பிரச்சினையை முன்மொழிவதன் மூலம் தாங்கள் முற்றும் முழுதானவர்கள் என்று எண்ணும் ஏகாதிபத்திய தாசர்களை இனம்பிரித்து மக்களுக்கு அடையாளம் காட்ட வேண்டியது சமூக மாற்றத்தை விரும்பும் ஒவ்வொருவனின் கடமையாகிறது. தலித் பிரச்சினையை ஊடகமாக்கிக் கொண்டு மிகவும் எளிய சனநாயகமான வடிவமாகத் தெரியும் கூட்டு விவாதம், கூட்டுச் சிந்தனை என்பதன் மூலம் பெண்ணியம், பாலியல் சுதந்திரம், பின் நவீனத்துவம், வானவில் கூட்டணி, அமைப்பு மறுப்பியல், விளிம்பு நிலை வாதம் எனப் பல வகைகளை முதன்மைப் படுத்தியதை மிகவும் உன்னிப்பாய் கவனப்படுத்திக் கொண்டதன் விளைவாக பல சந்தர்ப்பங்களில் சிறிதும் பெரிதுமான விமர்சனங்களை அய்யங்களை முன் வைத்துள்ளோம்.

குறிப்பாக, ராஜ் நாராயணனின் நூலை பின் நவீனத்துவர்கள் உயர்த்திப் பிடித்த போதும் சரி, பார்ப்பனர் முதல் பறையர் வரை சனநாயகப்படுத்துகிறோம்... என்ற போதும் சரி, இந்தியா டுடே தலித் இலக்கியத்துக்கு முக்கியத்துவம் கொடுத்த போதும் சரி, தலித் எழுத்தாளர்களுக்கு அரசியல், அமைப்பு தேவையில்லை என்ற போதும் சரி, நேரடியாகவே முரண்பாடுகளை வெளிப்படுத்தி, இதுவே தலித்தியப் பார்வையாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளோம். மேலும், சென்னை தலித் கலை விழாவில் பின் நவீனத்துவர்களின் பேச்சை மேடையிலேயே திருமாவளவன் மறுத்ததையும், தொடர்ந்து மறுப்பை ''மக்கள் தமிழகத்தில்'' பதிவு செய்ததையும், தமிழர் கண்ணோட்டத்தில் தோழர் வெங்கட்ராமன், பின் நவீனத்துவ வாதிகளால் தலித் இயக்கங்கள் வழிநடத்தப்படுகின்றன என்ற குற்றச்சாட்டுக்கு பின் நவீனத்துவம் தலித்துகளுக்கு எதிரானது என்று எழுதியதையும், தாழ்த்தப்பட்டோர் தலைமை பற்றிய அறிக்கையில் தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம் தலித் அரசியல் நூலின் சில பகுதிகளை விமர்சித்திருப்பதையும், சமீபத்தில் இரட்டை வாக்குரிமை பற்றிய மாநாட்டை நடத்தி வரும் பின் நவீனத்துவ குழுவினரை விமர்சித்துப் பங்கெடுக்க மறுக்கும் தலித் இயக்கத் தலைவர்கள் போக்கையும், புதிய ஜனநாயகம் அறிந்திருக்காமல்... (அல்லது அறிந்தும் அறியாததாய் காட்டிக் கொண்டு) எழுதியிருப்பது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாய் இருக்கிறது.

மார்க்சியம் பற்றி பலரும் பேசவில்லையா? இந்தப் பொதுப் பண்பை வைத்துக் கொண்டு ம.க.இ.க.விற்கும் மார்க்சிஸ்ட் கட்சிக்கும் நெருங்கிய உறவு இருக்கிறதென்று பொதுமைப்படுத்திக் கூற முடியுமா? உண்மையில் தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலையில் அக்கறை இருந்தால் நேருக்கு நேரான விவாதங்களை முன் வைக்கலாம். தேவையொட்டி இணைந்து செயல்படலாம். அவ்வாறில்லாது ஒரு சமயத்தில் இந்தந்த அமைப்புகள் சாதிய அமைப்புகள் என்றும், பிறிதொரு சமயத்தில் இந்தந்த இயக்கங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், கைப்பாவைகள் என்றும் ஒதுங்கிக் கொள்வது பிரச்சினையி



படிப்பகம்

www.padippakam.com

விருந்தும் ஒதுங்கிக் கொள்வதை இட்டுச் செல்வதாகும். எனில், எந்த அடிப்படையில் இவைகள் சாதிச்சங்கங்கள் என்றோ, எந்த அடிப்படையில் இவைகளை ஏகாதிபத்திய கைக்கூலிகள் என்றோ விவரப்படுத்தாமல், சமயத்துக்கேற்ப பொதுமைப்படுத்தி முத்திரை குத்திவிட்டு ஒதுங்கிக் கொள்வது எதனால்?

இன்று பல தலித் தலைவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் அமைப்பாதலை பெரிதும் வலியுறுத்துவதையும் இவர்களனைவரும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆயுதம் கோரி வருவதையும்... தேவையேற்படின் ஆயுதபாணியாக மாற வேண்டிய அவசியம் குறித்தும் பேசுவதை அறியாமலிருக்க முடியாது. அவ்வாறிருக்க தலித்தியம் பேசுபவர்கள் நிராயுதபாணியாகவும், அமைப்பாய்த் திரளாமல் வெற்றுக் கும்பலாகவும் தாழ்த்தப்பட்ட மக்களைப் பலவீனப்படுத்துவதுதான் தலித்தியம் என்று முடிவு கட்டியிருப்பதன் மூலம் உண்மைக்கு மாறாக மக்களைத் திசை திருப்புகிறீர்கள் என்பதே வெளிப்படை.

தலித் இலக்கியம் குறித்தும் தலித் அரசியல் குறித்தும் பேசப்பட்ட அளவுக்கு 'தலித்தியம்' பேசப்படவில்லைதான். தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்ட வரலாறு பல படிகளைக் கடந்து, பல அர்சியல் அனுபவங்களைப் பெற்றதுதான். எனினும் சமீபத்திய இந்த தலித்திய போக்கென்பதே தாழ்த்தப்பட்ட மக்களின் தனித்த அடையாளமாக விளங்குகிறது என்ற போதிலும், அரசியல் அரங்கில் இப்போக்கே இறுதியானது என்று எவரும் கூறிவிடவில்லை. கடந்த கால அனுபவங்களின் மீதுள்ள வெறுப்பில் விளைந்தது இது. வேகத்தில் விளைந்தது விவேகமாய் இருக்குமென்றோ அல்லது இருக்காதென்றோ இறுதிப்படுத்திக் கூற முடியாது. இது தாழ்த்தப்பட்டவர்களின் எழுச்சி என்பதுடன் மார்க்சிய அரசியலின் (இந்தியாவின்) மறுபார்வைக்கானது என்பதை மார்க்சியர்கள் உணர வேண்டும். ஏனெனில் பு.ஜ. குறிப்பிடுவதைப் போல் ஏகாதிபத்தியத்தால் திட்டமிட்டு உருவாக்கப்படும் தன்னார்வக் குழுக்களின் கருத்தென்றோ, ஏகாதிபத்தியத்துக்கு ஒப்புக் கொடுக்கும் குழுக்களின் கருத்தென்றோ மட்டும் விலக்கி விட முடியாது. மாறாக, பல்லாயிரக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்களின் கோபாவேசமாக இக்கோபத்தைப் புரிந்து கொண்டு. தீர்வு காணாத அமைப்புகளிலிருந்து வெளியேறிய, வெளியேற்றப்பட்ட (தாழ்த்தப்பட்ட) மார்க்சியர்களின், கம்யூனிஸ்ட்களின் குரலாக தலித்தியத்தைப் பார்க்க வேண்டும். அப்படி பார்க்க மறுப்பது ஏகாதிபத்திய ஊடுறுவலை வீழ்த்துவதாகாது. மாறாக மீண்டும் கம்யூனிஸ்ட்டுகளைக் காவு கொள்வதாகவே முடியும். ஒரு வேளை இப்படி விலகிய கம்யூனிஸ்டுகளையும் அல்லது தோன்றியெழும் புதிய தலைமையையும் பின்நவீனத்துவவாதிகளும் ஏகாதிபத்திய அடிவருடிகளும் வீழ்த்தி தலித்தியம் என்பது மார்க்சியத்துக்குத் துணையானதல்ல; பகையானது என்று நிருபித்து விட்டால், அந்தத் தோல்வியை என்னைப் போன்றவர்கள் கட்டாயம் ஏற்பார்கள். ஏனெனில், தன்னார்வ நிறுவனங்களும் அதன் துணைபோகிகளும், சில ஆயிரங்களை செலவு செய்து நூல்கள் வெளியிட, லட்சங்களைச் செலவு செய்து, மாநாடுகள், ஊர்வலங்கள் நடத்திட, உயிராதாரப் பிரச்சினையைக் கையிலெடுத்துத் துடிப்புள்ளவர்களை பலியாக்கி ஒதுங்கிக் கொள்ள தயாராயுள்ளனர். அதே சமயம் என் போன்றவர்களுக்கு இவர்கள் தோற்பார்கள்... சாயம் வெளுக்கும் என்ற உறுதிப்பாடு இருக்கிறது. தலித் கோட்பாடுகள் குறித்து இன்று சில அமைப்புகள், தலித் என்பது தாழ்த்தப்பட்ட, ஒடுக்குண்ட சாதிகளைக் குறிக்காது... ஏனெனில் அட்டவணைப்படுத்தப்பட்ட சில சாதிகளுக்கு தீண்டாமை இல்லை... எனவே தலித் என்பது பறையர் சாதியைத்தான் குறிக்கிறது என்றும் (தமிழ் தேசத்தை வென்றெடுக்கும்(?) ஒரு அமைப்பும்) முன்மொழிகின்றன. இப்படி வரட்டுத்தனமாக சமூக் இயங்கியலைப் பார்ப்பதை என்னவென்று சொல்வது? இப்படி வலிந்து முத்திரை குத்தும் போக்கிற்கொப்பவே பு.ஜ.வும் குற்றம் சாட்டுகிறது. ......தலித் தலைமை என்றால் தாழ்த்தப்பட்ட பறையர் சாதியில் பிறந்த உஞ்சைராசன் தலைமை என்பது போல் சிலர் துவங்கும் போதுதான் சாதீயம் கண்ணை மூடுவதாகக் குற்றம் சுமத்தத் தோன்றுகிறது. அப்படியானால் பாட்டாளி வர்க்கத் தலைமை என்றால் திருச்சி பெல்லில் வேலை செய்கிற 'எக்ஸின்' தலைமை என்று பொருளா? ஒரு அரசியல் கோட்பாடு எதை முன்மொழிகிறது? அதன் சமூக அரசியல் பொருளியல் சூழல் என்ன? அப்படி அது கூறுவது எந்த வகையில் பொருந்தாது? என்று கூறிச் செல்ல வேண்டுமேயொழிய, சாதியப்பார்வை பார்த்து சாதியத்துக்குள் மீண்டும் அடைக்க முயலலாமா? மார்க்சிஸியத்தை இந்திய தேசியம் பேசுபவர்கள், சோசலிசம் பேசுபவர்கள், தமிழ் தேசியம் பேசுபவர்கள், வர்க்கம் பேசுபவர்கள் எனப் பலரும் தங்கள் பார்வைக்கேற்ப எடுத்துக் கொள்கிறார்கள். சாதி அழிவிற்காக முன்மொழியப்படும் போது மட்டும் குய்யோ முறையோ என்றால், சாதி இருக்கட்டுமா... அழியட்டுமா என்பதே எமது கேள்வியாகிறது.

தலித் எழுச்சிக்கு உதாரணமாக ''தலித் பண்பாட்டுப் பேரவை'' போன்ற அமைப்புகளின் தோற்றத்தைக் காட்டுகிறார்கள் என்றும், இந்த எழுச்சி பின்வரும் அடிப்படையிலானது என்று தினமணி, இந்தியா டுடே எழுத வாய்ப்பளிப்பதும், தாழ்த்தப்பட்ட மக்களை புரட்சிகர இயக்கத்தில் இணைவதைத் தடுக்கவும், பிளவுப்படுத்திச் சிதறடிக்கவும், சீரழிக்கவும் ஏகாதிபத்திய கைக் கூலிகள் முயன்று வருகின்றன என்றும், ஏகாதிபத்திய கழிசடைக் கலாச்சாரத்தை அடிப்படையாகக் கொண்ட பின் நவீனத்துவத்தை முன் மொழிவதாகவும் சுட்டிக் காட்டியுள்ளது, பு.ஜ.

தலித் பண்பாட்டுப் பேரவையின் மாநில ஒருங்கிணைப்பாளர் என்கிற முறையில் பல போராட்டங்களில், கருத்துருவாக்கங்களில் (சிறிய அமைப்பாக இருந்தபோதும்) பங்கெடுக்கிற அமைப்பு என்ற முறையில் இங்கு சில சொல்லியாக வேண்டும். தலித் பண்பாட்டுப் பேரவை தலித் எழுச்சிக்கு ஒரு எடுத்துக் காட்டாகவே கொள்ளலாம். ஆனால் இவ்வமைப்பு திட்டமிட்டு உருவாக்கப்பட்டதல்ல. 1990 முதல் ''மனுசங்க'' வெளிவந்தது. நான்கு பேர்கள் மட்டுமே இணைந்து குழுவாக இயங்கி வந்தோம். அச்சமயத்தில் தாழ்த்தப்பட்டோர் விடுதலையை முன்மொழியும் படைப்புகளை வெளியிடுவது என்ற முயற்சியில் தேடலில் சில தோல்வியும் ஏற்பட்டது. எனவே தமிழக அளவில் ஓர் அறை கூவல் மூலம் தலித் படைப்பாளர்களை ஒன்றிணைக்கலாம். அதன்வழி மனுசங்க இதழைத்.தலித் இலக்கிய இதழாகத் தொடர்ந்து கொண்டு வரலாம் என்று திட்டமிட்டு பாண்டிச்சேரியில் கூடினோம். அக்கூட்டத்தில் கூடிக் களைந்தோம் என்றில்லாமல் அமைப்பாய் மாறிக் கொள்வது என்று ஒலித்த குரல்களுக்கு மதிப்பளித்து, 'தலித் பண்பாட்டுப் பேரவை' அமைக்கப்பட்டது. அக்கால கட்டத்தில் ம.க.இ.க., இ.ம.மு., பு.இ.மு., ம.ஜ.இ.க. போன்ற இயக்கத் தோழர்களிடம் இதன் தோற்றமும் அதற்கான கடந்த கால மார்க்சியர்களின் தவறுகளும் பற்றி விளக்கியுள்ளோம். காலத்தில் த.ப.பே. இரண்டு மூன்று செயற்குழு கூடிய பின், தஞ்சை (நாகை) மாவட்டத்தில் ஏற்பட்ட எழுச்சி இதை இன்னும் வலுவான அமைப்பாக, பண்பாட்டுப் படையாக மாற்றுவதற்கு எடுத்த முயற்சிக்குப் பின்தான், பின் நவீனத்துவ வாதிகள், 'தலித் பண்பாட்டுப் பேரவை' அமைப்பாய் மாற எடுக்கிற முயற்சியை முறியடிக்க முயன்றனர். எனவே இன்றும் இந்த அமைப்பை இயன்ற வகையில் குறிப்பிட்ட சில தளப்பகுதியை மையப்படுத்தி அரசியல் அமைப்புகளுக்கு இணையாக முன்னெடுத்து வருகிறோம். அதே சமயம் அன்று ஆர்வங்கொண்ட சிலர் ஒதுங்கி உதிரிகளாக படைப்பாக்க முயற்சியோ அல்லது பங்கெடுப்பதையோ செய்து வருகின்றனர் என்பது உண்மைதான். காரணம் அவர்களில் சிலர் அமைப்பு மறுப்பியலை ஏற்றுக் கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தாழ்த்தப்பட்ட மக்களைப் பிரிக்க எடுக்கிற முயற்சியாக த.ப.பே. கட்டப்பட்டது என்பது முற்றிலும் தவறு. இன்று தலித் பண்பாட்டுப் பேரவை தான் தமிழக அளவில் தாழ்த்தப்பட்டோர் இயக்கங்களை ஒன்றிணைக்க மிகப் பெரிய பணியைச் செய்கிறதென்பதை பு.ஜ. உணர வேண்டும். அதே சமயத்தில் வெண்ணெய் திரண்ட போது தாழி உடைந்த கதையாக் தலித் இயக்கங்களுக்குள் அரசியல் ஐக்கியம் உருவாகி, வலுவான முன்னணியை கட்டியெழுப்பிய நேரத்தில், தன்னார்வ நிறுவனங்கள் சவாலாய் முன்நின்று சிலரை, சாதகமாக்கிக் கொண்டு கூட்டமைப்பையே கேள்விக்குள்ளாக்கினர். இதனால் மிகப் பெரிய இக்கட்டில் நிற்பதும், எப்படியும் இந்த வல்லூறுகளிடமிருந்து மக்களைக் காக்க வேண்டும் என்று தீவிர எண்ணங் கொண்டு செயல்படுவதும் தலித் பண்பாட்டுப் பேரவை என்பதை நிச்சயம் தலித்துகள், இயக்கவாதிகள் அறிவார்கள். அது மட்டுமின்றி, தலித் இடது சாரிகளும், தமிழ் தேச இடது சாரிகளும், பிற இடது சாரிகளும் இன்றைய அரசியல் சூழலைக் கணக்கில் கொண்டு ஐக்கிய முன்னணி கட்ட வேண்டும் என்பதை பல இயக்கங்களுடன் தொடர்பு கொண்டு வலியுறுத்தி வருவதும் தலித் பண்பாட்டுப் பேரவை தான். த.ப. பேரவையின் செயல்பாடு என்ன என்பது பற்றி பகுதி ம.க.இ.க. ஊழியர் அறிவார். அவரிடம் அறிந்தாவது பு.ஜ. தன் நிலையை மாற்றிக் கொள்ள வேண்டுகிறேன். இன்றைய சூழலில் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் எவ்வித ஒட்டும் உறவும் இல்லை என்பதைப் போல், பின் நவீனத்துவ வாதிகளுடன் பல கருத்துகளில் முரண்பட்டு அந்த மாய வலையில் சிக்கியுள்ள



படிப்பகம்

www.padippakam.com

வர்களை களப் பணியுடன் இணைத்தே வெல்ல வேண்டும் என்பதை உணர்கிறோம். தாங்கள் 'குசு' விட்டதைக் கூட அச்சேற்றி விடுகிற பலத்தைப் பெற்றுள்ள அவர்கள் எங்கே? பல ஆண்டாய் மனுசங்க இதழை நடத்த பணமில்லாது அல்லாடும் தலித் பண்பாட்டுப் பேரவை எங்கே? எனவே இன்றைய அரசியல், பண்பாட்டு பணிகளில் நிறைய கற்றுக் கொள்ளவும் அய்க்கியப்படவும் துல்லியமான பிரச்சினையில் முதன்மை கொண்டு (அரசதிகாரத்தை அடைவதே அம்பேத்கர் கூறிய இறுதி இலக்கு என்று) அமைப்பாகிவிடவும் முயற்சிக்கிறோமே அல்லாது, தலித் மக்களைச் சிதைக்கவல்ல.

இச்சூழலில் தலித்தியக் கோட்பாடுகளை இந்திய தேசிய ஊடகமாகப் பார்ப்பதிலிருந்தம், கிருத்துவ மத விரிவாக்கத்துக்குப் பயன்படுத்துவதினின்றும், ஏகாதிபத்திய எடுபிடிகளிடமிருந்தும், பார்ப்பனீய மயப்படுத்த எடுக்கிற முயற்சிகளின்றும் தாழ்த்தப்பட்டோர் விடுதலைக் கோட்பாடாக உயர்த்திப் பிடிக்க வேண்டிய கடமை உணர்ந்து செயல்படுகிறோம். இன்று இம்மக்களுக்கு ஆதாரமாய் இருப்பது இத்தத்துவ நெறியே ஆகும். அந்த நம்பிக்கையில் தலித்தியத்தை உயர்த்திப் பிடிக்கும் போது பின் நவீனத்துவமும், தன்னார்வக் குழுக்களும் பிடறிதெறிக்க ஓடும் என்பதை உறுதி. எனவே பு.ஜ. இனியேனும் ஒட்டு மொத்த மக்களையும் குற்றம் சுமத்துவதான வாதங்களை முன் வைக்காமல், குறிப்பிட்ட பிரச்சினையில் குறிப்பிட்ட அமைப்பின் நபரின் செயலை விமர்சியுங்கள். அதுவே எம்போன்ற கருத்தாளர்களுக்கும், அமைப்பினரும் அய்க்கியப்பட வழியேற்படுத்தும். ஏனெனில் நாம் கம்யூனிஸ்ட்டுக்கள். நமக்குள் ஐக்கியம் தேவை. புரட்சி சிறு குழுக்களால் ஏற்படுவதல்ல. மாறாக, மக்கள் திரள் அமைப்பாலும் உறுதியான அரசியல் கோட்பாட்டாலும் என்பதை நாம் நிருபித்தாக வேண்டும். அய்க்கியத்துக்கான விவாதங்களைத் தொடங்குவோம்.

**தோழமையுடன்**
**(ஒம்) உஞ்சைராசன், தலித் பண்பாட்டுப் பேரவை**

இந்தக் கடிதத்தின் வாயிலாக, ''புதிய ஜனநாயகம்'' பத்திரிகையின் மீது நண்பர் உஞ்சைராசன் அவர்கள் முன்வைக்கும் மிக முக்கியமான விமர்சனங்களில் ஒன்று: நிலவும் சாதி பற்றிய பிரச்சினையில் இருந்தோ, அதற்கான தீர்வுக்காகப் போராடும் எண்ணங்களில் இருந்தோ தொடங்காமல், மார்க்சிய இயக்கங்களில் இருந்து வெளியேறிய ஒரு சில நபர்கள் முன்மொழிவதை மட்டும் எடுத்துக்கொண்டு, அவர்களே தாழ்த்தப்பட்டவர்களின் ஒட்டுமொத்தப் பிரதிநிதி என்பதாய் இறுதி எண்ணப்படுத்திக்கொண்டு எழுந்து நின்று சண்டைக்கு வருவதாய்க் கூறுகிறார்.

ஆம்! அது அப்படித்தான்! மார்க்சிய இயக்கத்துக்கு மட்டுமல்ல; வேறெந்த இயக்கத்துக்கும் இது பொருந்தும்! ஒரு இயக்கத்தில் இருந்து வெளியேறி, அதன் அரசியல் - சித்தாந்த எதிரிகளாகி விடும் துரோகிகள் தாம் அந்த இயக்கத்தின் எதிரிகளின் முக்கிய ஆயுதமாகப் பயன்படுபவர்கள். அவர்களை முறியடிப்பது அந்த இயக்கத்தின் முதன்மையான பணியாகவே இருக்கும். அந்த இயக்கத்தின் அணிகளைச் சீரழித்து, தங்களைப் போலவே துரோகிகளாகி விடும்படி தூண்டுவதன் மூலம் எதிரிகளின் நம்பகமான ஊழியர்களாகவும் அவர்கள் செயல்படுகிறார்கள், இல்லையா!

அடுத்து, இவர்களை மட்டுமல்ல; அம்பேத்கர் உட்பட வேறு எவரையும், எந்தவொரு அமைப்பையும் தாழ்த்தப்பட்ட மக்களின் ஒட்டுமொத்தப் பிரதிநிதி என்று நாங்கள் கருதவில்லை. அப்படி பல நபர்களும், குழுக்களும் உரிமை பாராட்டிக் கொண்டாலும் அதற்குத் தாழ்த்தப்பட்ட மக்களின் அங்கீகாரமும் கிடைத்ததில்லை. அப்படி உரிமை பாராட்டிக் கொள்வதற்குப் பொருத்தமாக தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலை - நலன்களுக்கான அரசியல் - சித்தாந்த நெறிமுறைகளை வகுத்துச் செயல்படுத்தவோ, கோட்பாடு ரீதியிலாவது நிறுவவோ இல்லை.

அடுத்து, நண்பர் உஞ்சைராசன் முன்வைக்கும் மிக முக்கியமான விமர்சனங்களில் ஒன்று: பின் நவீனத்துவ நிறப்பிரிகைக் குழுவையும், தன்னார்வக் குழுக்களையும் மனதில் வைத்துக்கொண்டு, எளிதாக, அனைத்து தலித் இயக்கங்களும், தலித் பிரதிநிதிகளும், தலித் தலைவர்களும், தலித் இலக்கிய எழுத்தாளர்கள் - நபர்களும் முன்மொழியும் கருத்தியலையும் எவ்விதப் பரிசீலனையும் இன்றி எடுத்த எடுப்பில் ஏகாதிபத்தியக் கைக்கூலிகள் என்பதாக முத்திரை குத்துகிறோம் என்கிறார்.

ஏகாதிபத்திய தன்னார்வக் குழுக்கள் மற்றும் பின் நவீனத்துவக் குழுக்களிடம் இருந்து பல்வேறு வகைகளில் தாம் மாறுபடுவதாகவும், அதற்குச் சில சான்றுகளும் முன்வைத்திருக்கிறார். இதன் காரணமாக தங்களையும் அவர்களையும் வேறுபடுத்தி அணுக வேண்டும் என்கிறார். 'தலித் எழுச்சி'யை வெறுமனே ஏகாதிபத்திய எச்சம் என்று ஊனப்படுத்துவது உண்மையில் பிரச்சினையின் தன்மையை உதாசீனப்படுத்துவதாகி விடும் என்கிறார்.

''தலித் அமைப்புகள், பிரதிநிதிகள்'' என்று சொல்லிக்கொள்ளும் அனைவரையும் ஏகாதிபத்திய தன்னார்வக் குழுக்கள், பின்நவீனத்துவவாதிகள் என்று நாங்கள் கருதவில்லை. தன்னார்வக் குழுக்களுடன் உறவு வைத்துக்கொள்வதிலும், பின்நவீனத்துவக் கோட்பாட்டின் பல அம்சங்களை நிராகரிப்பதிலும் சில குழுக்களும், நபர்களும் அவற்றில் இருந்து மாறுபடுகின்றனர் என்பது உண்மையே. ஆனால் இந்த மாறுபாடுகள் எல்லாம் அனுபவவாத அடிப்படையிலானவை தாம். இவற்றையும் மீறி ஓர் உண்மை இருக்கிறது. தலித், தலித் இலக்கியம், தலித் பண்பாடு, தலித் அரசியல், தலித் தலைமை, தலித்தியம்... என்கிற கோட்பாட்டு முழக்கங்கள் எல்லாமே ஒரே அரசியல் - சித்தாந்த அடிப்படையிலானவை என்பதுதான் அந்த உண்மை.

அம்பேத்கர் நூற்றாண்டு விழாவையொட்டி, தானே தோன்றிய ''தலித் எழுச்சி''யின் விளைவுதான் ''தலித்தியம்'' என்பதாக அதன் ஆதரவாளர்கள் அனைவருமே கூறுகின்றனர். ஆனால் அதற்கு வேறொரு வரலாறு இருக்கிறது. 'இடது' தீவிரவாதத் தவறுகளால் பின்னடைவையும், பிளவுகளையும் சந்தித்த மார்ச்சிய - லெனினிய இயக்கம் தவறுகளைத் திருத்திக்கொண்டு, புத்துயிர் பெற்று, உழைக்கும் மக்கள் திரளை, குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களை அணிதிரட்டுவதில் பெருமெடுப்பில் முன்னேறிய போது, அதற்கு மாற்று மையங்களாகக் கிறிஸ்துவத் தன்னார்வக் குழுக்கள் தோன்றின. குறிப்பாக, இந்திய மக்கள் முன்னணித் தலைவர் ஐ. பால்ராஜ், உழைக்கும் மக்கள் பெயரால் ஒய். டேவிட், மதுரை அரசரடி இறையியற் கல்லூரியை மையமாகக் கொண்டியங்கும் போலந்து நாட்டின் பாஸ்டியன் விளங்கோ தம்பதியினர், பாதிரிகள் சபையில் இருந்து விலகிய அந்தோணி சேவியர் போன்றவர்கள் இதற்காகவே பணியாற்றினர். வினோத் மிஸ்ரா தலைமையில் இருந்த மார்க்சிய - லெனினியக் குழுவுக்குள் ஊடுருவி, அதைச் சீரழிப்பதில் இவர்கள் வெற்றி பெற்றனர்.

1987-லேயே ''ஒருங்கிணைக்கின்ற தலித் விடுதலை இயக்கம்'' என்பது பாஸ்டியன் விளாங்கோ முன்முயற்சியில் துவங்கப் பட்டது. அதற்கு முன்பே, அவர் நடத்திவந்த ''ஐடியாஸ்'' என்ற அமைப்பின் பெயரால் சிறுசிறு சமூக, பொருளாதார, அரசியல் ஆய்வு வெளியீடுகள் மூலம், முடிந்த அளவு சில ''இடதுசாரி அறிவுஜீவி''களிடையே குழப்பமான முடிவுகளை அவர் பரப்பி வந்தார். அவரது இன்னொரு முயற்சியாக இறையியல் கல்லூரி, ''தலித் ஆய்வு மைய''த்தை நிறுவியது. அம்பேத்கர் நூற்றாண்டு விழாவையொட்டி ஒரு கருத்தரங்கம் நடத்தி, ''தலித் விடுதலை இயல்'' என்கிற சித்தாந்தத்தை உருவாக்கினர். அதைத்தான் ''தலித்தியம்'' என்று புதிய நாமகரணம் சூட்டி, சுமார் இரண்டாண்டுகளுக்குப் பிறகு நிறப்பிரிகை உட்பட பிறர் முன்வைத்தனர்.

''தலித் கலாச்சாரம், தலித் சித்தாந்தம் இவற்றினை அடிப்படையாகக் கொண்டுள்ள இயக்கங்களே இந்தியாவில் தலித் மக்களுக்கு சுதந்திரத்தைக் கொண்டுவர இயலும். தமிழ்நாடு இறையியல் கல்லூரி தலித் இயக்கங்களை ஆதரவளித்தும், ஒருங்கிணைத்தும், அவர்களைப் பதப்படுத்தும் பொருத்தமான தலித் சித்தாந்தத்தை உருவாக்கி வருவதன்மூலம் இதனையே செய்கின்றது'' என்கிறார் ''ஐடியாஸ்'' மையத்தின் சேசு சபையாளர் அந்தோணிராஜ். (தலித் விடுதலை இயல், அணிந்துரை). ஆக, ஒருவர் பௌதீக ரீதியாக ஏகாதிபத்திய, கிறித்துவத் தன்னார்வக் குழுக்களுடன் இல்லாவிட்டாலும், சித்தாந்தப்பூர்வமாக இணைந்திருக்க அடிப்படை உள்ளது. அதையே நாங்கள் குறிப்பிட்டோம்.

அம்பேத்கருக்குப் பிறகு தலித் இலக்கியம் என்பதாகத் தோன்றி, 1940 களின் ஆரம்பத்தில் தாழ்த்தப்பட்ட அறிவுஜீவி

தொடர்ச்சி 21-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

# "களவைக் கற்றுத் தேறு"

# தாராளமயம் போதிக்கும் புதுநெறி

• பைசும், சோகைலும் போபால் நகரத்தைச் சேர்ந்த இணைபிரியாத நண்பர்கள். அவர்களுக்குத் தேவை அதிகம் இருந்தது. முக்கியமாக, அமெரிக்காவில் இருந்து இறக்குமதியாகும் "ராங்லர்" ஜீன்ஸ் பேண்டையும், "நைக்" ஷூவையும் மாட்டிக் கொண்டு ஊர் சுற்றி வர வேண்டும் என்ற ஆசை நாளுக்கு நாள் வெறி பிடித்து ஆட்டியது. வீட்டில் பணம் கேட்டால் கிடைக்குமா என்ற தடுமாற்றத்துடன் நின்ற இருவரும் தங்களின் இலட்சியக் கனவை ஈடேற்றிக் கொள்ள, தொலைக்காட்சி நாடகத் தொடரில் இருந்து கிடைத்த புது யோசனையை வரித்துக் கொண்டார்கள். பகலில் வீட்டிற்கு அடங்கிய பிள்ளையாய் இருந்த அவர்கள், இரவு ஆனவுடன் சங்கிலி பறிக்கும் திருடராய் அவதாரமெடுத்து, தங்களின் கனவுகளை நனவாக்கிக் கொண்டனர்.

பைசும், சோகைலும் தாராளமயம் பெற்றெடுத்திருக்கும் நவீன இளங்குற்றவாளிகள். நடுத்தர வர்க்க குடும்பத்தில் பிறந்த இவர்களுக்கு, உல்லாசத்திற்கு திருடுவது தவறு என மனசாட்சி உறுத்தவில்லை. அம்மனசாட்சியை ஏற்கனவே தொலைக்காட்சி விளம்பரங்கள் கொன்று விட்டன.

இந்த நவீன இளங் குற்றவாளிகள் பட்டியல் பைசோடும், சோகைலோடும் முடியவில்லை என்பது நம்மை பயமுறுத்தும் கசப்பான உண்மை. நகர்ப்புறத்து மேட்டுக்குடி - நடுத்தர வர்க்கப் பெற்றோர்கள், தங்கள் கண்மணிகள் போதைப் பொருளுக்கு அடிமையாகிவிடக் கூடாது என கலங்கிக் கொண்டிருந்த காலம் மலையேறிவிட்டது. பிள்ளைகள் போதைப் பொருள் கடத்தும் மா∴பியாவாக மாறி விடக் கூடாதே என வேண்டிக் கொள்ளும் காலம் நெருங்கிவிட்டது.

மிகைப் படுத்தப்பட்ட கூற்றல்ல இது.

இர்∴பான் கஸாலி, ராஜேஷ் வஞ்ஜாரா என்ற இரு இளைஞர்களை பம்பாயிலும், மோபின் முலானி, நஸிர் பொம்மலை டெல்லியிலும் போதை மருந்து கடத்தல் தடுப்பு போலீசார் கைது செய்துள்ளனர். இந்நால்வருமே இருபத்தைந்து வயதிற்கு கீழான இளைஞர்கள்; மூவர் பட்டதாரிகள்; ஒரு இளைஞர் தொழில்நுட்பக் கல்வி பயின்றவர். இந்நால்வரும் இந்தியாவில் இருந்து மொரிசியஸுக்குப் போதை மருந்து கடத்தும் மா∴பியா கும்பலைச் சேர்ந்தவர்கள் எனக் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

"சங்கிலி அறுப்பது, வழிப்பறி, வீட்டை உடைத்து திருடுவது, கார் திருட்டு, மோசடி ஆவணங்கள் தயாரிப்பது, பணத்திற்காக ஆட்களைக் கடத்துவது - கொலை செய்வது — இந்தக் கொடுங் குற்றங்களைச் செய்வதில் நடுத்தர வர்க்க - மேட்டுக்குடி பின்னணி கொண்ட இளைஞர்களும் கைதேர்ந்தவர்களாக மாறி வருகின்றனர்" என பம்பாய் போலீசார் கூறுகின்றனர். இவ்விளைஞர்கள் பெரும்பாலோர் கல்லூரி - பள்ளி இறுதியாண்டு மாணவர்கள்; அல்லது படிப்பை பாதியில் நிறுத்தியவர்கள்.

"விதவிதமாக ஆடை அணிவது; நவீன கார்களிலும், இரு சக்கர வாகனங்களிலும் ஊர் சுற்றித் திரிவது; காதலன் / காதலியோடு உல்லாசமாகப் பொழுதைக் கழிப்பது; ஐந்து நட்சத்திர விடுதிகளில் குடித்துக் கும்மாளமிடுவது" - இதைத்தான் வாழ்க்கையாக, தொலைக்காட்சியும், திரைப்படமும், நுகர்பொருள் கலாச்சாரமும் நமது மண்டைகளில் திணிக்கின்றன. இந்த முறைகேடான வாழ்க்கையை ஆண்டு அனுபவிக்க இளைஞர்களிடம் ஏற்படும் வெறி, அவர்களைக் குற்றப் பாதையில் எளிதாக உந்தித் தள்ளவிடுகிறது.

• மாருதி கார் வாங்க ஆசைப்பட்ட ராஜேஷ் ஜோஷி என்ற இருபது வயது இளைஞன், மிதுல் பலேஜா என்ற மற்றொரு இளைஞனைக் கடத்திச் சென்று கொன்ற சம்பவம் பம்பாய் நகரையே உலுக்கியது.

• சஞ்சய் கன்னா, கரும்பாலை அதிபரின் மகன். பெற்றோரிடமிருந்து மாதாந்திர செலவுக்காக பத்தாயிரம் ருபாய் பெற்று வந்த இவனுக்கு அப்பணம் பற்றாததால், பப்லு சீறிவஸ்தவா என்ற மா∴பியா கும்பலில் சேர்ந்து, ஆட்களைக் கடத்திச் சென்று இலட்ச இலட்சமாகச் சம்பாதித்துள்ளான்.

• சஜல் பருயி, கல்கத்தாவைச் சேர்ந்த பள்ளி மாணவன். தன் வயதையொத்த இரு நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு, தனது தந்தையையும், சிறிய தாயாரையும், சகோதரனையும் கண்டதுண்டமாக வெட்டிக் கொன்றான் இவன். இக்கொலைக்கான

**ரிசர்வ் வங்கி பெண் அதிகாரியைக் கொன்ற சென்னை மாணவர்கள்: தாராளமயமாக்கலின் அபாயகரமான விளைவு**



உத்தியை "ஜீ - டி.வி." யில் இருந்து பெற்ற தாகவும் போலீசிடம் கூறியுள்ளான்.

• கடந்த ஆண்டு சென்னையில் சேத்துப்பட்டு புகைவண்டி நிலையத்திற்கு அருகே அநாதையாக நின்ற காரைப் பற்றி விசாரித்த போலீசாரிடம், ரிசர்வ் வங்கி பெண் அதிகாரியைக் கொலை செய்த நான்கு மாணவர்கள் சிக்கினர்.

• கடந்த 94-ஆம் ஆண்டு சென்னையைச் சுற்றி இலட்ச இலட்சமாய்க் கொள்ளையடித்துக் கொண்டிருந்த முகமூடிக் கொள்ளைக் கும்பலொன்றை வளைத்துப் பிடித்த போலீசாருக்கு மிகப் பெரும் அதிர்ச்சி. அக்கொள்ளையர்கள் ஒன்பது பேரும் பதினைந்து வயதுகூட நிரம்பாதவர்கள். ஆடம்பரமாக வாழ்வதற்காகவே கொள்ளையடித்துள்ளனர், இவ்விளைஞர்கள்.

• உ.பி.யில் 1993-ஆம் ஆண்டில் 16-ஆக இளம் குற்றவாளிகள் எண்ணிக்கை, 95-ஆம் ஆண்டில் 1375-ஆக உயர்ந்துவிட்டது.

• பெங்களூரில் "பப்" எனப்படும் மதுபான விடுதிக்குச் செல்வதற்காகவே, கல்லூரி மாணவர்கள் சங்கிலி பறிக்கும் திருடர்களாகச் சுற்றி வருவதாக போலீசார் கூறுகின்றனர்.

★★★

"சமூகத்தின் சகல துறைகளிலும் தாராளமயமாக்கம் புகுந்ததன் எதிர் விளைவுதான் இது" என்பதை மறுக்க இப்பொழுது யாருக்கும் துணிவில்லை. முதலாளித்துவ சமூகவியலாளர்களும், மனோதத்துவ நிபுணர்களும் மட்டுமின்றி, பெண் போலீசு அதிகாரி கிரண் பேடி, சி.பி.ஐ.-இன் இணை இயக்குநர் யு.என். பிஸ்வாஸ் போன்ற உயர் அதிகாரிகளும் இவ்வுண்மையை ஒப்புக் கொள்கின்றனர். அதே பொழுதில் ஐந்தாண்டுகளுக்கு முன்பு, "இந்த வக்கிர வாழ்க்கைதான் வேண்டுமென ஒற்றைக் காலில் சண்டித்தனம் செய்தவர்களும் இம்மேட்டுக் குடியினர்தான்" என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

"இதற்கு என்னதான் தீர்வு?" என்ற வினா எழும்போது, "கூட்டுக் குடும்பத்தைச் சிதைந்து விடாமல் காப்பாற்ற வேண்டும்" எனப் போகமுடியாத ஊருக்கு வழி காட்டுகின்றனர். "வாழ்க்கையில் கட்டுப்பாடுகள் வேண்டும்" எனப் போதிக்கின்றனர். கடப்பாரையை முழுங்கியவனுக்கு சுக்கு கசாயம் மருந்தாக முடியுமா?

அங்கீகரிக்கப்பட்ட அறிவு ஜீவிகள் இப்படி தலைமுடியைப் பிய்த்துக் கொண்டிருக்கையில், மைய அரசு இப்பிரச்சினையைத் தீர்க்க ஒரு அருமையான யோசனையை(!) முன் வைத்துள்ளது. "பதினெட்டு வயதுக்கு கீழானவர்களைச் சிறுவர்களாக வரையறுக்கும் சட்டத்தை பதினாறாக" மாற்றவுள்ளது. இனி அரசின் கோப்புகளில் இளங் குற்றவாளிகளின் எண்ணிக்கை குறைந்துவிடும்; ஆஹா, என்னே ஒரு திட்டம்!

• மாரி

# இரட்டை வாக்குரிமை கோரிக்கை:

# புண்ணுக்குப் புனுகு தடவும் முயற்சி

மோகன்தாக காந்தி தலைமையிலான பார்ப்பன - பனியா சதியாலும், தாழ்த்தப்பட்ட மக்களின் ஒரு பிரிவுத் தலைவர்களின் சமரசப் போக்காலும், இன்னொரு பிரிவுத் தலைவர்களின் துரோகத்தாலும் ஏற்பட்ட 1932 பூனா ஒப்பந்தத்தின் மூலம் குழி தோண்டிப் புதைக்கப்பட்டது, தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இரட்டை வாக்குரிமை - தனி வாக்காளர் தொகுதி என்ற கோரிக்கை.

இன்றைக்கு அதை மீண்டும் தோண்டி, "தலித் மக்களுக்கு மாற்றீடு செய்ய முடியாத ஓர் அரசியல் ஆயுதமாகும்" என்று சொல்லி முன் வைக்கப்படுகிறது. அது அப்படிப்பட்டது தானா என்ற பரிசீலனையில் புகுமுன், அந்தக் கோரிக்கையின் வரலாற்றையும் விவரங்களையும் பார்ப்போம்.

காங்கிரசுக் கட்சி, இடஒதுக்கீடு ஆகியவற்றைப் போலவே, இந்த நாட்டில் தனித் தொகுதி, தனி வாக்காளர் தொகுதி முறையும் பிரித்தானிய காலனியவாதிகள் கொண்டு வந்தவைதாம். மின்டோமார்லி சீர்திருத்த அடிப்படையில் 1909-ஆம் ஆண்டு நடந்த சென்னை மாகாண சபைத் தேர்தலில் முதன் முதலாக இசுலாமியருக்குத் தனித் தொகுதி முறையும், நகரவைகள், பல்கலைக்கழகம், ஜமீன்தார்கள், ஜமீன்தார் அல்லாத நிலவுடமையாளர்கள், வர்த்தகர்கள், தோட்ட முதலாளிகள் என வாக்காளர் தொகுதிகளும் உருவாக்கப்பட்டன. சொத்துரிமை, வரிகட்டும் தகுதி, கல்வியறிவு உள்ளவர்களுக்கு மட்டுமே வாக்குரிமை தரப்பட்டது.

உள்ளூராட்சி அமைப்புகளில் ஒடுக்கப்பட்ட வகுப்பாருக்குப் பிரதிநிதித்துவ நியமனம் தரவேண்டும் என்று இரட்டைமலை சீனிவாசனும் பண்டிதர் அயோத்தி தாசரும் 1881 திராவிட மகாசபை வாயிலாகக் கோரினர். 17 ஆண்டுகளுக்குப் பிறகு அக்கோரிக்கையை இங்கிலாந்து அரசர் ஏழாம் எட்வர்டு முன் மொழிய காலனிய அரசு ஏற்றது. ஆனால் அதை அமலாக்கிய விவரம் நமக்குத் தெரியவில்லை. 1919-ஆம் ஆண்டு வந்த இரட்டை ஆட்சி முறையின் கீழ் சென்னை மாகாண சபைக்குத் தாழ்த்தப்பட்டவர்களில் 10 பேர் நியமனம் பெற்றனர்.

சொத்துரிமை, படிப்பறிவு அடிப்படையிலான வாக்குரிமை மட்டுமே இருந்தால், சென்னை மாகாண மொத்த வாக்காளர் தொகையில் 4.1. விழுக்காடுதான் தாழ்த்தப்பட்டவர்கள் இருந்தனர். எனவே 1927-இல் அமைக்கப்பட்ட சைமன் குழு முன் வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை தந்தால், தாழ்த்தப்பட்டோருக்குத் தனி இட ஒதுக்கீட்டுடன் கூடிய கூட்டு வாக்காளர் தொகுதி தேவை; இல்லாவிட்டால் தனி வாக்காளர் தொகுதி- தாழ்த்தப்பட்டவர் மட்டுமே வாக்களித்து, தாழ்த்தப்பட்டவரைத் தம் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கும் உரிமை வேண்டும் என்று அம்பேத்கர் கோரினார்.

அனைவருக்கும் வாக்குரிமை என்ற கோரிக்கையை நிராகரித்த சைமன் குழு தாழ்த்தப்பட்டவர்களுக்கும், சிறுபான்மை மதத்தினருக்கும் தனி வாக்காளர் தொகுதி மற்றும் இரட்டை வாக்குரிமையைப் பரிந்துரைத்தது. இதன்படி சொத்துடமையும் படிப்பறிவும், வருமான வரி செலுத்தும் வசதியுடைய தாழ்த்தப்பட்டவர்களுக்கு மட்டும் வாக்குரிமை உண்டு. தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாகவும் நெருக்கமாகவும் வசிக்கும் பகுதியைத் தெரிவு செய்து, தனி வாக்காளர் தொகுதிகள் அமைத்து, தாழ்த்தப்பட்டவரை மட்டுமே தேர்ந்தெடுக்கும் உரிமை அளிக்கப்படும். இதோடு இந்தத் தொகுதி தாழ்த்தப்பட்ட வாக்காளர்களுக்கு பொதுத் தொகுதிக்கான வேட்பாளர்களையும் தேர்ந்தெடுக்கும் உரிமையும் அளிக்கப்பட்டது. இதனால் சில தொகுதிகளில் தாழ்த்தப்பட்டோருக்கு உரிமை தரப்படும். மற்ற பிற தொகுதிகளில் பிற சாதி, மதத்தினரோடு சேர்ந்து கூட்டு வாக்காளர்களாகி, பொது வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்பட்டது. இதுதான் இரட்டை வாக்குரிமை - தனிவாக்காளர் உரிமையாகும்.

சைமன் குழுவின் பரிந்துரைகளைப் பரிசீலிக்க இங்கிலாந்தில் (1930) கூடிய முதல் வட்டமேசை மாநாட்டை காந்தியின் காங்கிரசு புறக்கணித்தது. தாழ்த்தப்பட்டவர் சார்பாக கலந்து கொண்ட இரட்டைமலை சீனிவாசனும் அம்பேத்கரும் இரட்டை வாக்குரிமை தனி வாக்காளர் தொகுதி கோரிக்கையை வலியுறுத்தினர். மாநாடு அக்கோரிக்கையை பொதுவில் ஏற்றுக் கொண்டாலும், உடனடியாக அமலாக்கவில்லை. இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் (1931) கலந்து கொண்ட காந்தி, இசுலாமியர், சீக்கியருக்கு அவ்வுரிமை வழங்கப்படுவதை ஏற்றார். "இந்து சமூகத்தைப் பிளவுபடுத்தி விடும்" என்று சொல்லி, தாழ்த்தப்பட்டவருக்கு அதே உரிமை வழங்கப்படுவதைக் கடுமையாக எதிர்த்தார். பொது உடன்பாடு எது

www.padippakam.com

வும் எட்டப்படவில்லை. இது குறித்து இறுதி முடிவு எடுக்கும் அதிகாரத்தை பிரிட்டனின் பிரதமருக்கு அளிக்கும் உறுதிமொழிப் பத்திரத்தில் காந்தி கையொப்பமிட்டார்.

ஆனால் இந்தியா திரும்பிய காந்தி தாழ்த்தப்பட்டோருக்குத் தனி வாக்காளர் தொகுதி முறை ஏற்பட்டால் சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பதாக பிரிட்டனின் பிரதமருக்கு எழுதினார். அதையும் மீறி இசுலாமியர், சீக்கியர், ஆங்கிலோ இந்தியர், ஐரோப்பியர், தாழ்த்தப்பட்டோர், மராத்தியருக்குத் தனி வாக்காளர் தொகுதி முறை அறிவிக்கப்பட்டது. மற்ற பிரிவினருக்கு வழங்கினாலும், தாழ்த்தப்பட்டவருக்கு தனி வாக்காளர் தொகுதி கூடவே கூடாது என்று கூறி, அதை எதிர்த்து பூனா சிறையில் சாகும்வரை உண்ணாவிரதம் (1932) இருந்தார்.

காந்தியின் தலைமையிலான பார்ப்பன - பனியா கும்பல் இரண்டு உத்திகளை மேற் கொண்டது. அதற்குச் சிலகாலம் முன்புவரை இரட்டை வாக்குரிமை, தனி வாக்காளர் தொகுதி முறை கோரிக்கையைத் தூக்கிப்பிடித்த தாழ்த்தப்பட்டவரின் ஒரு பிரிவான எம்.சி.ராஜா, பாலு ஆகியோருக்கு பதவி ஆசை காட்டி, அக்கோரிக்கைக்கு எதிராகவே கலகம் செய்யத் தூண்டியது. காந்தியின் சாகும் வரை உண்ணாவிரதத்தை வைத்து, "மேல்சாதி" இந்துக்களிடையே வெறியேற்றி சாதிக் கலவரங்கள் மூளச் செய்து, அம்பேத்கர் தலைமையிலான பிரிவை அக்கோரிக்கையைக் கைவிடும்படி நிர்பந்தித்தது.

இவற்றின் விளைவாக காந்திக்கும் அம்பேத்கருக்கும் இடையில் ஏற்பட்டது தான் பூனா ஒப்பந்தம். இதன்படி தாழ்த்தப்பட்டவர்கள் எண்ணிக்கைக்கேற்ப சில தொகுதிகள் தனித் தொகுதிகளாக ஒதுக்கப்படும். அவற்றில் தாழ்த்தப்பட்டவர்கள் மட்டுமே வாக்களித்து போட்டியாளர்களில் நால்வரை முதற் கட்டமாகத் தேர்ந்தெடுப்பர். அந்த நால்வரில் ஒருவரை எல்லா வாக்காளர்களும் வாக்களித்து இரண்டாவது கட்டமாகத் தேர்ந்தெடுப்பர். பிரித்தானிய அரசு அறிவித்ததை விட அதிக எண்ணிக்கையில் இந்த வகைத் தனித் தொகுதிகள் இருக்கும்.

1946-இல் நியமிக்கப்பட்ட பிரித்தானிய அமைச்சரவைத் தூதுக்குழு வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை வழங்கியது. அப்போது பிற பிரிவினர் அனைவருக்கும் வகுப்புவாரி ஒதுக்கீட்டை அகற்றியது; தாழ்த்தப்பட்டவருக்கு மட்டும் தனித் தொகுதிமுறை நீட்டிக்கப்பட்டது. அதிகார மாற்றத்துக்குப் பிறகு 1950 அரசியல் நிர்ணய சட்டப்படி இரட்டை உறுப்பினர் தொகுதி முறை வந்தது. இதன்படி சில தொகுதிகளில் அனைத்து வாக்காளர்களும் வாக்களித்து தாழ்த்தப்பட்டோர் ஒருவரையும், அல்லாதார் ஒருவரையும் தேர்ந்து எடுக்கலாம். 1952, 1957 தேர்தலுக்குப் பிறகு இந்த முறையை எதிர்த்து வி.வி. கிரி நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து நீக்கும்படி செய்தார். அதன்பிறகு தற்போதுள்ள தனித் தொகுதி முறை வந்தது. அரசியல் சட்டப்படி இதன் காலக்கெடு முடிந்தாலும் மீண்டும் நீடிக்கப்பட்டு வருகிறது.

"இரட்டை வாக்குரிமை - தனி வாக்காளர் தொகுதி கோரிக்கையே இருபது ஆண்டுகளுக்குப் போதும். அதுவும் அனைவருக்கும் வாக்குரிமை வந்தால் தேவையில்லை என்பது தானே அம்பேத்கர் கோரிக்கை. அதை இப்போது மீண்டும் உயிர்ப்பிப்பது பொருந்துமா?" என்று சிலர் கேள்வி எழுப்புகின்றனர். இதற்கு 1950-களில் அம்பேத்கர் இறப்பதற்கு முன் மீண்டும் அக்கோரிக்கையை முன் வைத்



பிரித்தானிய காலனிய அரசு தாழ்த்தப்பட்டவருக்கு தனி வாக்காளர் தொகுதியை அறிவித்தபொழுது, அதை எதிர்த்து பூனா சிறையில் உண்ணாவிரதம் இருந்தார், காந்தி.

தார் என்று பதில் கூறப்படுகிறது. அதற்குத் தரப்படும் ஆதாரம் ஒன்றுதான். 1944-இல் சென்னையில் கூடிய அனைத்திந்திய அட்டவணை சாதியினர் கூட்டமைப்பு தீர்மானம் ஒன்றில் இக்கோரிக்கை இடம் பெற்றிருந்தது என்கின்றனர். ஆனால் இதன்பின் 1946-இல் வந்த பிரித்தானிய அமைச்சரவைத் தூதுக்குழு முன்போ, 1950 அரசியல் நிர்ணய சட்ட வரையறுப்பு விவாதத்தின் போதோ, வி.வி.கிரி. தொடுத்த வழக்கின் போதோ இப்போதைய தனித்தொகுதி முறை 1962-இல் அமலுக்கு வந்த போதோ இக்கோரிக்கை யாராலும் எழுப்பப்படவேயில்லை. இத்தனைக்கும் அரசியல் நிர்ணய சட்ட வரைவுக் குழுவின் தலைவராக இருந்து அதன் நிறைவேற்றத்துக்காக அம்பேத்கர் வாதாடினார். "அரசியல் சட்ட மேதை" "அரசியல் சட்டச் சிற்பி" என்றும் போற்றப்படும் அம்பேத்கர் ஏன் இப்படிச் செய்தார்? "அரசியல் சட்ட உருவாக்கத்தில் நான் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டேன்", "அரசியல் சட்டத்தைக் கொளுத்த வேண்டும்", என்றெல்லாம் பின்னாளில் அம்பேத்கர் பேசினார் என்பதே அந்தக் கேள்விக்குப் பதிலாகுமா?

இது ஒரு புறம் இருக்க, தாழ்த்தப்பட்டவர்களுக்கு இரட்டை வாக்குரிமை - தனி வாக்காளர் தொகுதி என்ற கோரிக்கை, நாடாளுமன்ற ஜனநாயக முறையே மரணப்படுக்கையில் கிடக்கும் இக் காலக் கட்டத்தில் தாழ்த்தப்பட்டோர் நலனுக்கேகூட எந்த அளவுக்குப் பொருத்தமானதாகவும் அவசியமானதாகவும் இருக்கும்.

கழிசடைக் கலாச்சாரப் படையின் தளபதியாக உருவாகிவரும் புதுவை ரவிக்குமார் என்பவர், பின்வருமாறு எழுதுகிறார்: "இரட்டை வாக்குரிமை என்பது இன்றுள்ள தேர்தல் நடைமுறையைத் தலைகீழாக மாற்றிவிடும். இப்போது பொதுத் தொகுதிகளில் தலித் அல்லாத பிற சாதியினர் தமத பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கின்றனர். 'ரிசர்வ்' தொகுதிகளிலும் தலித் அல்லாதவர்கள் வாக்களிப்பதால், அங்கு தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதி தலித் அல்லாதவர்கள் விரும்புகிற ஒருவராகவே இருக்கிறார். இதனால் தலித் மக்கள் தமக்கான, தமது பிரச்சினைகளைப் பேசுவதற்கான பிரதிநிதியை இப்போதுள்ள தேர்தல் முறையில் தேர்ந்தெடுக்க முடிவதில்லை. இரட்டை வாக்குரிமையோ தலித் மக்கள் தமது பிரதிநிதிகளைத் தாங்கள் மட்டுமே வாக்களித்துத் தேர்ந்தெடுக்க வழி செய்கிறது. அத்துடன் கூட, பொதுத் தொகுதிகளிலும் தலித் நலன்களுக்கு எதிரானவர்கள் வெற்றி பெற முடியாது என்ற நிலையை உண்டாக்குகிறது." இதோடு, "இந்திய அரசியல் சூழலை மாற்றியமைக்கப்போகிற முக்கியமான அரசியல் முழக்கம்" என்றும், "ஓர் அரசியல் ஆயதமென்கிற முறையில், அதன் மதிப்பு கணிப்புக்கு அப்பாற்பட்டது" என்று அம்பேத்கர் வர்ணித்ததையும் சுட்டிக்காட்டுகிறார்.

கேப்பையில் நெய் வடிகிறது நம்புங்கள் என்கிறார். அழுகி முடை நாற்றம் வீசும், கிரிமினல் மயமாகிவிட்ட நாடாளுமன்ற அமைப்பு, அதற்கான தேர்தல்முறை மீது பன்னீர் தெளிக்கும் பணி புரிகிறார். அவரது வாசகத்தின் ஒட்டாண்டித்தனத்தை, சுய முரண்பாட்டை அதுவே விளக்கி விடுகிறது. தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தனித் தொகுதிகளில் தேர்ந்தெடுக்கப்படும் தலித் பிரதிநிதிகள் அவர்களைத் தேர்தலில் நிறுத்தும் மேல் சாதிக்கும், கட்சிக்கும் விசுவாசிகளாக இருக்கிறார்கள் என்பதாலேயே இரட்டை வாக்குரிமை - தனி வாக்காளர் கோரிக்கை வைக்கப்படுகிறது. இதன் மூலம் மட்டும் தலித் மக்கள் தமக்கான, தமது பிரச்சினைகளைப் பேசுவதற்கான பிரதிநிதிகள் வந்துவிடுவார்களாம்! அப்புறம் பொதுத் தொகுதிகளிலும் தலித்துகளின் நலன்களுக்கு எதிரானவர் வெற்றி பெற முடியாத நிலை ஏற்பட்டு விடுமாம். எப்படி? இந்த நிலை சாத்


படிப்பகம்

www.padippakam.com

தியமென்றால், இப்போதே அப்படி நடந்திருக்கலாமே! தனி வாக்காளர் தொகுதியிலும் துரோகிகளும், மேல் சாதிக்காரர்களின், கட்சிகளின் விசுவாசிகளும் வெற்றி பெற முடியாதா? ஏற்கெனவே அப்படித் தானே தனித் தொகுதிகளிலும் நடக்கிறது.

இந்த உண்மையை அறிந்துதான் இவரது சித்தாந்த குரு அந்தோனி மார்க்சு, "இரட்டை வாக்குரிமை ஒரு சர்வரோக நிவாரணியும் அல்ல; இதன் மூலம் தேர்வு செய்யப்படுபவர்கள் எல்லா வகையிலும் சரியானவர்களாக இருப்பார்கள் என்பதற்கு உத்திரவாதமுமில்லை" என பின்குறிப்பு எழுதுகிறார். பிறகு ஏன் இந்தக் கோரிக்கைக்காக இவ்வளவு சவடால் அடிக்கிறார்கள்?

ஒரே ஒரு காரணம் தான்! மார்க்சிய - லெனினிய இயக்கங்கள் விடுக்கும் அறைகூவலை ஏற்று, தமிழ்நாடு உட்பட சில பகுதிகளில் போர்க்குணமிக்க மக்கள் திரள் போராட்டங்களிலும், ஆந்திரா, பீகார் உட்பட ஆயுதப் போராட்டங்களிலும் உழைக்கும் மக்கள், குறிப்பாக தாழ்த்தப்பட்டவர்களும், பழங்குடியினரும் அதிகரித்த விகிதத்தில் அணி திரண்டு வருகின்றனர்.

அதைத் தடுத்து தாழ்த்தப்பட்ட மக்களில் பின் தங்கிய உணர்வுடைய நடுத்தர வர்க்கத்தினரின் இயல்பான ஊசலாட்டத்தை, சுயநல பாதுகாப்பு, பய உணர்வைப் பயன்படுத்தி, இன்றைய நாடாளுமன்ற சகதி அரசியலில் இருத்தி வைப்பது தான் கழிசடைக் கலாச்சாரவாதிகளின் நோக்கம். அவர்கள் தமது கழிசடைக் கலாச்சார சித்தாந்தத்துக்கும் வாழ்க்கைக்கும் ஒரு சமூக ஆதரவு என்கிற முறையிலேயே தலித் மக்கள், பெண்கள் விடுதலை மற்றும் சிறுபான்மை மதத்தினரின் உரிமை பற்றிய சவடால்களை அடிக்கின்றனர். இதைச் சாதிப்பதற்கான வழிமுறைகளாக நுண்தள அரசியல் என்ற பெயரால் கருத்தரங்க - கூட்டு விவாத அரட்டையும், மாற்று எதிர்க் கலாச்சாரம் என்கிற பெயரில் தமது சொந்தக் கழிசடைப் பண்பாட்டையும் முன் வைத்து வருகின்றனர். இதை அவர்கள் இலக்காக வைத்துள்ள தலித் மக்களே நிராகரித்த நிலையில், இரட்டை வாக்குரிமை - தனிவாக்காளர் தொகுதி என்ற கோரிக்கையை கையிலெடுத்துள்ளனர்.

இதில் அவர்களுடைய நோக்கம் என்னவென்று அவர்களே பின்வருமாறு ஒப்புக் கொண்டுள்ளனர். "இன்றுள்ள தேர்தல் முறையை, சமூகக் கலாச்சார நிறுவனங்களைத் தலைகீழாகத் திருப்பிப் போடும் இக் கோரிக்கை, தலித் மக்களுக்கு மாற்றீடு செய்ய முடியாத ஓர் அரசியல் ஆயுதமாகும். இந்த ஆயுதத்தை 'ஆயுதப் புரட்சி' என்னும் வெற்று முழக்கத்தில் மயங்கிக் கீழே வீசியெறிவது பேதமையாகவே முடியும். இதில் தலித் அமைப்புகள் மிகுந்த எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும்".

இவ்வளவு தூரம் ஆயுதப் புரட்சி அரசியலையும், தேர்தல் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக தேர்தல் புறக்கணிப்பு பிரச்சாரமும் மாறி விட்டது என்பதையும் இழிவுபடுத்தி விட்டு, கூடவே புரட்சிச் சவடாலுக்காக இதையும் சொல்கின்றனர்: "தேர்தல் புறக்கணிப்பு என்பதை ஸ்தூலமான பிரச்சினையோடு இணைப்பது அவசியம். தனி வாக்காளர் தொகுதி கோரிக்கை அத்தகைய ஒரு முயற்சியேயாகும்." இரட்டை வாக்குரிமையும் - தனி வாக்காளர் தொகுதியும் கோருவது தான் தேர்தல் புறக்கணிப்பை ஸ்தூலமான பிரச்சினையோடு இணைப்பதாம்! இதே அலித்தனத்தோடு (எல்லாவற்றிலும் அலித்தனமே அவர்களது தத்துவம்) வன்முறை பற்றிய வாயுபச்சாரமும் செய்கின்றனர்.

"தலித் மக்களின் போராட்டமென்பது வெறுமனே குறுகிய கோரிக்கைகளுக்கானதல்ல. அவர்கள் வன்முறையாளர்களுமல்லர் 'உண்மையும் - நீதியும் - அமைதியை வேண்டுகின்றனர். ஆனால் இன்னும் அவை வன்முறைக்கே சொந்தமாயிருக்கின்றன. நமது வேட்கையின் தருணங்கள் அரசியல் யுத்தத்தின் இழிவான தேவைகளிலிருந்து நம்மை விலக்கி வைத்துள்ளன என்ற போதிலும், வெகு மக்கள் கோபத்தின் பெருக்கால் உந்தப்படுவார்கள் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்' என்ற வார்த்தைகளை மட்டும் இப்போதைக்கு இங்கே கூறி வைக்கலாம்."



**அனைவருக்கும் வாக்குரிமை வந்தால், தாழ்த்தப்பட்டவர்களுக்கு இரட்டை வாக்குரிமை - தனி வாக்காளர் தொகுதி தேவையில்லை என்பதுதான் அம்பேத்கரின் நிலைப்பாடு.**

இதுதான் அலித்தனம்! இரட்டை வாக்குரிமை, தனி வாக்காளர் தொகுதிக் கோரிக்கை என்பது எதை எதையோ தலைகீழாகப் புரட்டிப்போடும் மாற்றீடற்ற மதிப்பிட முடியாத ஓர் அரசியல் ஆயுதமென்று வாதிடும் கழிசடைக் கலாச்சாரவாதிகளே நாலுவரி கீழே அது வெறுமனே குறுகிய கோரிக்கைகளில் ஒன்றாக புரட்டிப் போட்டு விட்டார்கள். தலித் மக்களின் போராட்டத்தில் வன்முறையின் பங்கு பற்றி எவ்வளவு எச்சரிக்கையோடு வெண்டைக்காயை விளக்கெண்ணெயில் தேய்த்தாற் போன்ற, ஒரு மேலை நாட்டானின் வார்த்தைகளுக்குள் ஒளிந்து கொள்ளுகிறார்கள் பாருங்கள்.

அன்றாட வாழ்க்கையில் ஆயிரத்தெட்டு வழிகளில் ஆதிக்க சாதிகளின், அவர்களின் அதே அமைப்பின் வன்முறைத் தாக்குதல்களை எதிர் கொள்ளும் தாழ்த்தப்பட்ட சாதியினர் ஆயுதம் ஏந்தாமல் சாதி ஒடுக்கு முறை, தீண்டாமைக்கு எதிராகக் குரல் எழுப்புவது தற்கொலைக்கு ஒப்பாகும். ஒடுக்கப்படும் மக்களும், அவர்களுடைய அமைப்புகளும் இதை நன்கு அறிவர். தாமே ஆயுதமேந்திய அமைப்புகளாக இல்லாதவரை, அவர்களின் பெயரால் ஆயுதமேந்திய குழுக்களைக் கூட முற்றாக நம்பி அணிதிரளத் தாழ்த்தப்பட்ட மக்கள் முன் வருவதில்லை என்பதை இடது தீவிரவாதக் குழுக்களின் அனுபவங்களே காட்டுகின்றன. ஆனால் பாதுகாப்பான நடுத்தர வர்க்க வாழ்க்கையை அமைத்துக் கொண்ட இந்தக் கழிசடை கலாச்சாரவாதிகள், தமது 'படித்தனம் காரணமாக, போலி மார்க்சிஸ்டுகளைப் போல "நாங்கள் வன்முறையாளர்களல்லர்; அமைதியான அரசியல் மாற்றத்துக்கே நிற்கிறோம்; இருந்தாலும் எதிரிகள் அதற்கு அனுமதிக்க மாட்டார்கள் என்பதைக் கணக்கில் எடுத்துக் கொள்வோம்" என்று பூசிமெழுகுகின்றனர்.

சரி! இரட்டை வாக்குரிமை - தனி வாக்காளர் தொகுதி கோரிக்கையை ஏற்று வாதாடும் அனைவருமே இத்தகையவர்கள் என்று கூறுகிறோமா? இல்லை. தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றம், விடுதலையில் உண்மையான நாட்டங் கொண்டிருந்தாலும், அதற்காக சீர்திருத்த வழிக்கு மட்டுமே தயாராக உள்ள, அதன் மூலமாகவே தமது நோக்கத்தை நிறைவேற்ற முயலும் ஓரிரு குட்டி முதலாளிய அமைப்புகளும், ஒரு சில நபர்களும் கூட இந்தக் கோரிக்கையை ஏற்றுப் போராடுவர். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கும் அனைவரையும் கூட இந்தக் கோரிக்கையை அடைவதற்கான முயற்சி அம்பலப்படுத்தி விடும் என்பதால் இந்தக் கோரிக்கையை புரட்சியாளர்கள் எதிர்த்திடத் தேவையில்லை. அதாவது இந்தக் கோரிக்கைக்காகவே கூட உருப்படியான பாரிய முயற்சிகளில் அவர்கள் இறங்கத் துணிய மாட்டார்கள் என்பதும், இந்தக் கோரிக்கையின் வரம்பும் - இது தாழ்த்தப்பட்டவர் அரசியல் வாழ்க்கையில் கூட எந்தவித மாற்றத்தையும் கொண்டு வராது என்பதும் விரைவிலேயே தெரியவரும். மேலும் புரட்சிக்கு எதிராக அமையாத எந்தச் சீர்திருத்தத்தையும் மார்க்சிய - லெனினியவாதிகள் எதிர்ப்பதில்லை. ஆனால் புரட்சிப்பாதைக்கு இந்தக் கோரிக்கை பயன்படப் போவதில்லை என்பதால், மார்க்சிய - லெனினிய இயக்கத்தவரே முன் வைத்துப் போராடவும் தேவையில்லை. • ஆர்.கே.



படிப்பகம்

www.padippakam.com

# ராஜீவின் பீரங்கிக் கொள்ளை நிருபணம்:

# இறந்தாலும் அழியாத இழிவு

விக்கிரமாதித்தன் கதையில் வரும் வேதாளம் போல, போ∴பர்ஸ் ஊழல் விவகாரம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறி அமர்ந்து விட்டது. சுவிஸ் நாட்டில் இருந்து வந்துள்ள 500 பக்க ஆவணங்களில் பொதிந்து கிடக்கும் ஆதாரங்களினால், காங்கிரசு கலகலத்துப் போய்க் கிடக்கிறது. எனினும், காங்கிரசிலுள்ள சோனியா ஆதரவு கோஷ்டி, சோனியா எதிர்ப்பு கோஷ்டி என எல்லா கோஷ்டிகளும், "சி.பி.ஐ. துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்" எனக் கூச்சல் போட்டு வருகின்றன. இதன் மூலம், "போ∴பர்ஸ் ஊழலுக்கும், தங்கள் கட்சிக்கும் செத்துப் போன தங்கள் தலைவன் ராஜீவ் காந்திக்கும் சம்மந்தமில்லை" எனக் காட்டிட முயலுகின்றன. ஆனால் கடந்த பத்தாண்டு கால வரலாற்றைப் புரட்டினால் போதும் இந்த உத்தம சிகாமணிகளின் யோக்கியதை புரிந்து விடும்.

* * *

1985-ம் ஆண்டு — இந்திய இராணுவத்துக்கு பீரங்கிகளை விற்பதற்காக சுவீடன் மற்றும் பிரான்சு நாட்டைச் சேர்ந்த இரு நிறுவனங்கள் போட்டியிட்டுக் கொண்டிருந்த நேரமது. சுவீடன் பீரங்கிகளை வாங்குவதில் உயர் அதிகாரிகளிடையே சர்ச்சைகள் நிலவி வந்தன. 1985-ம் ஆண்டு மத்திக்குப் பின் இந்த சர்ச்சைகள் திடீரென்று காணமற் போயின. 1986 மார்ச் 24-ந் தேதி, அப்பொழுது பிரதமராகவும் இராணுவ மந்திரியாகவும் இருந்த ராஜீவ் காந்தி, 1437.72 கோடி ரூபாய் மதிப்பு கொண்ட 410 பீரங்கிகளை போ∴பர்ஸிடமிருந்து வாங்க ஒப்பந்தம் செய்து கொண்டார்.

இப்பேரத்தின் பின்னால் மறைந்திருந்த மர்ம முடிச்சினை, சுவீடன் நாட்டு வானொலி நிலையம் அவிழ்த்தது. 64 கோடி ரூபாய் அளவிற்கு நடந்துள்ள மோசடிகளை, அவ்வொனாலி நிலையம் 1987 ஏப்ரல் மாதம் வெளி உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டியது. ஆனால் ராஜீவ் காந்தியோ, "பீரங்கி பேரத்தில் இடைத்தரகர்கள் யாருமே கிடையாது" எனப் பாராளுமன்றத்தில் முழங்கினார். முந்திரிக் கொட்டையாய் முந்திக் கொண்டு, "நானோ, எனது குடும்பத்தாரோ இந்த பேரத்தில் ஒரு சல்லிக் காசு கூடப் பெறவில்லை" என சத்தியமே செய்தார்.

"அந்தோ பரிதாபம்!" ராஜீவின் சத்தியம் அற்ப ஆயுளில் இறந்து போனது. போ∴பர்ஸ் பீரங்கி பேரத்தில் நடந்த திரைமறைவுச் சதிகள், இரகசிய பேரங்களை ஒன்றன் பின் ஒன்றாக "இந்து", "இந்தியன் எக்ஸ்பிரஸ்", "ஹிந்துஸ்தான் டைம்ஸ்", "ஸ்டேட்ஸ்மேன்" நாளிதழ்கள் அம்பலப்படுத்தின.

● போ∴பர்ஸ் நிறுவனம் இலஞ்சத் தொகையாக 64 கோடி ரூபாயை (இன்றைய மதிப்புப்படி 200 கோடி ரூபாய்) "லோட்டஸ்", "துலிப்", "மோண்ட் பிளாங்க்", "ஸ்வென்ஸ்கா", "ஏ.இ. சர்வீசஸ் லிட்" என்ற ஐந்து பெயர்களைக் கொண்ட இரகசிய சுவிஸ் வங்கிக் கணக்குகளில் செலுத்தியது.

● ராஜீவ் காந்தியின் நெருங்கிய உறவினரும், ராஜீவ் மந்திரி சபையில் எரிசக்தித் துறை மந்திரியாகவும் இருந்த அருண் நேரு, 1985 ஏப்ரலில் சுவீடன் நாட்டு தூதரை இரகசியமாகச் சந்தித்துள்ளார். அவ்வாண்டு ஜூலை மாதம் வரை தொடர்ந்த இரகசிய சந்திப்புகளில் "விரைவில் ஒப்பந்தம் நிறைவேறும்" என உறுதியளித்துள்ளதோடு, "ராஜீவ் காந்தியின் பெயரும், தனது பெயரும் எக்காரணம் கொண்டு வெளியே தெரியக் கூடாது" என எச்சரித்துள்ளார்.

● இச்சந்திப்புகளின் பின் ஏ.இ. சர்வீஸஸ் என்ற நிறுவனத்திற்கும், போபர்ஸுக்கும் 1985-ம் ஆண்டு நவம்பர் 15-ந் தேதி இரகசிய ஒப்பந்தம் கையெழுத்தானது; ஒப்பந்தம் கையெழுத்தான அன்றே ஏ.இ. சர்வீசஸின் இரகசிய வங்கிக் கணக்கில் 24 கோடி ரூபாய் செலுத்தப்பட்டுள்ளது.

● ஏ.இ. சர்வீசஸுக்கும் போ∴பர்ஸுக்கும் ஒப்பந்தம் கையெழுத்தான அதே மாதங்களுக்குள் இந்திய அரசும் போ∴பர்ஸும் ஒப்பந்தம் செய்து கொண்டன.

● ஏ.இ. சர்வீசஸ் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்ட 24 கோடி ரூபாய், ராஜீவ் காந்தியின் நெருங்கிய நண்பரான ஒட்டாவியோ குட்ரோச்சியின் பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது. குட்ரோச்சி தவிர, போ∴பர்ஸின் இந்தியத் தரகன் வின் சத்தா, இந்துஜா சகோதரர்களுக்கும் இவ்வூழலோடு நெருங்கிய தொடர்புண்டு.

பத்திரிகைகள் அம்பலப்படுத்திய இந்த ஆதாரங்களை, பொய்களையும், ஊகங்களையும் பரப்பி அமுக்கி விட முயன்றார், ராஜீவ். அது முடியாமற் போகவே, தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி பத்திரிகைகளின் குரல்வளையை நெறித்து விட முயன்றார். தனது நம்பிக்கைக்குரிய ப. சிதம்பரத்தின் மூலம், அவதூறு தடைச் சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முயன்று, தோற்றுப் போனார்.

இதன்பின், "கூட்டுப் பாராளுமன்றக் கமிட்டி", "சி.பி.ஐ. விசாரணை" என இரு மோசடி நாடகங்கள் ராஜீவால் அரங்கேற்றப்பட்டன. காங்கிரசு உறுப்பினர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டிருந்த கூட்டுப் பாராளுமன்றக் கமிட்டி, பத்திரிகைகள் குற்றஞ்சாட்டியிருந்த யாரையும் விசாரிக்கவில்லை. கமிட்டியின் முன் சாட்சியம் அளிக்க வந்திருந்த சுவீடன் நாட்டு அதிகாரிகளிடம், "என்ன கேள்வி கேட்க வேண்டும்; அவர்கள் என்ன பதில் சொல்ல வேண்டும்" என்பது ஒத்திகை பார்க்கப்பட்டிருந்தது. இறுதியாக அக்கமிட்டி, "போ∴பர்ஸின் இந்தியத் தரகரான வின் சத்தா மட்டும் தான் கமிஷன் பெற்றுள்ளார்" என அறிக்கை தயாரித்து, ராஜீவ் காந்தியைத் தப்பவிட்டது. சி.பி.ஐ. தனது விசாரணையில், "வின் சத்தா வருமான வரி கட்டத்




படிப்பகம்

www.padippakam.com

தவறிவிட்டார் என்ற 'மாபெரும்' உண்மையைக் கண்டு பிடித்து, வழக்குத் தொடர்ந்தது.

ராஜீவுக்கு பூசப்பட்ட இந்த அரிதாரத்தை மக்கள் நம்பவில்லை. 1989-இல் நடந்த பொதுத் தேர்தலில் போ∴பர்ஸ் ஊழல் காரணமாக காங்கிரசுக் கட்சி மண்ணைக் கவ்வியது. வி.பி.சிங் தலைமையில் அமைந்த ஜனதா தள ஆட்சியில் மீண்டும் சி.பி.ஐ. விசாரணை துவங்கியது. கே. மாதவன் என்ற உயர் அதிகாரி தலைமையில் நடந்த விசாரணையின் முடிவில், வின் சத்தா, இந்துஜா சகோதரர்கள் உள்ளிட்ட 23 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேலும், சுவிஸ் நாட்டில் இருந்து இரகசிய வங்கிக் கணக்கு ஆவணங்களைப் பெறவும் சட்டபூர்வ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

90-ன் இறுதியில் வி.பி.சிங் ஆட்சி கவிழ்ந்த பின், போ∴பர்ஸ் விசாரணையை முடக்கி விடுவதில் ராஜீவ் மீண்டும் தீவிரம் காட்டத் தொடங்கினார். காங்கிரசின் தயவில் பிரதமர் பதவியில் அமர்ந்த சந்திரசேகர், ராஜீவை திருப்தி செய்ய விசாரணையை முடக்கினார்; ராஜீவ் செத்த பின் பதவிக்கு வந்த ராவோ, சோனியா ஆதரவு கோஷ்டியை அடக்கி வைக்க போ∴பர்ஸ் ஊழலைப் பயன்படுத்தினார்.

சந்திரசேகர் ஆட்சியின் பொழுது, காங்கிரசு கட்சியின் வழக்கறிஞர் ஹெச். எஸ். சௌத்ரி, போ∴பர்ஸ் ஊழல் தொடர்பாக, வி.பி.சிங் ஆட்சி காலத்தில் சி.பி.ஐ. பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை ரத்து செய்யக்கோரி வழக்கு தொடுத்தார்.

இவ்வழக்கு மீது டெல்லி உயர்நீதி மன்றத்தில் நடந்த விசாரணையின் பொழுது, சுப்பிரமணிய சுவாமி தலைமையில் இருந்த மத்திய சட்டத் துறையும், ''முதல் தகவல் அறிக்கையை ரத்து செய்து விடலாம்'' என சௌத்ரிக்கு பரிந்து பேசியது. இந்த சௌத்ரி இந்துஜாவின் கையாள் என்பது பின்னர் அம்பலமானது.

இவ்வழக்கில் சி.பி.ஐ. இணை இயக்குநர் கே. மாதவன், சந்திரசேகர் அரசுக்கு ஒத்துழைப்பு தராததோடு, டெல்லி உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து சென்றார். இதனால் இவர் போ∴பர்ஸ் விசாரணை பொறுப்பில் இருந்து '91 அக்டோபரில் கழற்றி விடப்பட்டார்.

• துபாய்க்கு ஓடிப் போய் விட்ட வின் சத்தாவை இந்தியாவிற்கு கொண்டு வர சி.பி.ஐ. எடுத்த நடவடிக்கைகளை டெல்லி உயர்நீதி மன்றம் தடை செய்தது. இதை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் சி.பி.ஐ. தொடுத்த வழக்கு, கடந்த நான்கு ஆண்டுகளாக ஆமை வேகத்தில் கூட நகரவில்லை.

• 1992-ஆம் ஆண்டு சுவிஸ் நாட்டில் டாவோஸ் நகரில் நடந்த பன்னாட்டு முதலாளிகள் மாநாட்டில், அப்பொழுது வெளியுறவுத் துறை மந்திரியாக இருந்த மாதவ் சிங் சோலங்கி, சுவிஸ் வெளியுறவுத்துறை மந்திரியிடம், ''சுவிஸில் நடக்கும் இரகசிய வங்கிக் கணக்கு தொடர்பான விசாரணையைத் தாமதப்படுத்தவும்'' என்ற கடிதத்தைக் கொடுத்தார்.

• ஏ.இ. சர்வீசஸ் இரகசிய வங்கிக் கணக்கு ஆவணங்களை 91-ம் ஆண்டிலேயே இந்தியா சுவிஸிடமிருந்து பெற்று விட்டது. ஆனாலும் கடந்த ஆறு ஆண்டுகளாக அந்த ஆவணம் தூசி படிந்து கிடக்கிறது.

• 93-ம் ஆண்டில் சுவிஸ் அரசு, இரகசிய வங்கிக் கணக்கு ஆவணங்களை இந்தியாவிற்கு அனுப்பக் கூடாதென சுவிஸ் நாட்டில் வழக்கு தொடுத்த குட்ரோச்சியின் பெயரை வெளிப்படையாக அறிவித்தது. குற்றவாளி என்று தெரிந்த நிலையிலும், குட்ரோச்சி மலேசியாவிற்குத் தப்பிச் சென்றதை ராவ் அரசும், சி.பி.ஐ.யும் கை கட்டி வேடிக்கை பார்த்தன.

★☆★☆★☆

சுவிஸ் நாட்டில் இருந்து தற்பொழுது பெறப்பட்ட ஆவணங்களில், போ∴பர்ஸின் இந்தியத் தரகன் வின் சத்தா, அவரது மனைவி கந்தா சத்தா, அவரது மகன் ஹர்ஷ் சத்தா மற்றும் ஒட்டாவியோ குட்ரோச்சி, அவரது மனைவி மரியா குட்ரோச்சி ஆகியோர் ஊழல் பணத்தைப் பெறுவதற்காகவே இரகசிய வங்கிக் கணக்கை இயக்கி வந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன. மேலும், ஏ.இ. சர்வீசஸ் வங்கிக் கணக்கில் இருந்து குட்ரோச்சியின் வங்கிக் கணக்கிற்குப் பணம் மாற்றப்பட்டதற்கும், பின்னர் அப்பணம் சுவிஸ் நாட்டில் இருந்து ஜோர்டன், பனாமா, லக்சம்பர்க், லெய்ச்டென்ஸ்டின் நாடுகளுக்கு கடத்தப்பட்டதற்கும் ஆதாரங்கள் உள்ளன.

வழக்குத் தொடரும் அளவிற்கு ஆதாரங்கள் கையிலிருந்தாலும், சி.பி.ஐ. இயக்குநர் ஜோகிந்தர் சிங், ''அவர்கள் பெற்றிருப்பது இலஞ்சப் பணமா? அல்லது தரகுத் தொகையா?'' என்பதை இனிதான் விசாரிக்க வேண்டும் என்கிறார். பிரதமர் தேவேகௌடாவோ குற்றவாளிகளுள் ஒருவரான இந்துஜா சகோதரர்களுடன் சமீபத்தில் சுவிஸ் நாட்டின் டாவோஸ் நகரில் விருந்துண்டு மகிழ்ந்தார். சோனியா காந்தியும், அவரது கைத்தடியான கருணாகரனும் பிரதமரைச் சந்தித்துச் சென்றுள்ளனர்.

ஊழல் விசாரணையைத் தொடர சி.பி.ஐ.க்குள்ளேயே சிறப்பு விசாரணைக் குழுவை உருவாக்கி, அதற்கு ரெவண்ண சித்தையா என்ற கர்நாடக அதிகாரியை நியமித்திருக்கும் கவுடாவின் தந்திரம், காங்கிரசை அடக்கி வைத்து, தனது பதவியைக் காப்பாற்றி கொள்ளத்தான்.

1989 தேர்தலின் பொழுது தமிழ்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் பீரங்கி பொம்மைகளைக் கட்டித் தொங்கவிட்டு, போ∴பர்ஸ் ஊழலை அம்பலப்படுத்திய தி.மு.க.வும், ராஜீவின் பீரங்கிக் கொள்ளையை இன்று வரை மூடி மறைத்து பேசும் மூப்பனார் - சிதம்பரம் கும்பலின் த.மா.கா.வும் இன்று கூட்டணி கட்சிகள். அதிகாரம் கைவிட்டுப் போய் விடாமல் இருக்க காங்கிரசின் தயவும் வேண்டும், த.மா.கா.வின் தயவும் வேண்டும் என்பதால், ஐக்கிய முன்னணியின் அங்கமாகிப் போன தி.மு.க.வும் சி.பி.எம். - சி.பி.ஐ.ம் சம்பிரதாயமான அறிக்கைகளுக்கு அப்பால் தாண்டிச் செல்லவில்லை. ஐக்கிய முன்னணி அரசு, போ∴பர்ஸ் ஊழலைக் குழி தோண்டிப் புதைத்து விட்டது; ஏனெனில் தனது ஆயுளை நீட்டித்துக் கொள்ள அதன் கையிலுள்ள துருப்புச் சீட்டே இதுதான்.

✸ ✸ ✸

ராஜீவுக்கும் குட்ரோச்சிக்கும் உள்ள அந்தரங்க உறவு போ∴பர்ஸில் தொடங்கி போ∴பர்ஸோடு முடிந்து விடவில்லை. ராஜீவ் காலத்தில் நடந்த ஹெலிகாப்டர் ஊழல், நீர்மூழ்கி கப்பல் ஊழல் அனைத்திலும் குட்ரோச்சிக்கு பெரும் பங்குண்டு. ''உர நிறுவனத்தின் அதிகாரிக்கும், ஆயுத விற்பனைக்கும் என்ன தொடர்பு'' என்ற கேள்விக்கான பதிலை குட்ரோச்சியிடமிருந்து வரவழைத்தாலே போதும். அவருக்கும் ராஜீவுக்கும் இடையே இருந்த பினாமி உறவை வெளிக் கொண்டு வந்து விடலாம்.

ஹவாலா மோசடி குற்றவாளிகளுள் ஒருவரான எஸ்.கே. ஜெயின், ''குட்ரோச்சிதான் எனக்கு அமீர்பாயை அறிமுகப்படுத்தினார்'' என விசாரணையின் பொழுது கூறியுள்ளார். பீரங்கிக் கொள்ளையில் ராஜீவ் பெற்ற இலஞ்சப்பணம் சுவிஸில் இருந்து மறைந்து போன மர்மம் இப்பொழுது தெளிவாகவில்லையா? சர்வதேச ஆயுதத் தரகர்கள், ஹவாலா கடத்தல் கும்பல், ஏ.இ. சர்வீசஸ் போன்ற நிழல் நிறுவனங்கள் இவர்களுடன் நெருக்கமாக இருந்த ராஜீவை தேச பக்தன் எனக் கூற முடியுமா?

கடைந்தெடுத்த இந்த தேசத் துரோகியைத் தான் நாட்டிற்காக உயிர் நீத்த தியாகியாகப் புகழாரம் சூட்டுகின்றன, ஓட்டுக் கட்சிகள். அக்கிரிமினல் சிதறுண்டு இறந்து போன இடத்தை புனிதத் தலமாக்கி வழிபடத் தூண்டுகின்றன, அவை. ராஜீவ் பெயரில் அறக்கட்டளைகளை நிறுவி விருதுகள் வழங்கிட அனுமதிக்கின்றன. நாட்டின் செல்வத்தைக் கொள்ளையடித்தவனின் வாரிசுகளுக்கு ஆயுதப் பாதுகாப்பு கொடுக்கப்படுகிறது. அதிகார பலமிருப்பதால் தண்டிக்கப்படுவோம் என்ற அச்சம் சிறிதுமின்றி மக்களின் வரிப் பணத்திலேயே உல்லாசமாக ஊர் சுற்றித் திரிகிறார்கள் அவர்கள். இந்த அவமானத்தை இன்னுமா நாம் சகித்துக் கொள்வது?

• ரஹீம்

16 ஜன. '97 - 28 பிப். '97 இதழில், அவ்விதழ் எண்:4-6 எனத் தவறுதலாக அச்சாகியுள்ளது. அவ்விதழ் எண்ணை ''5-7'' என மாற்றிக் கொள்ள வேண்டுகிறோம்.

- ஆசிரியர் குழு



படிப்பகம்

www.padippakam.com

14-ஆம் பக்கத் தொடர்ச்சி

களிடையே ஒரு வீச்சை ஏற்படுத்திய இயக்கம்கூட இப்போது அதன் வீரியத்தை இழந்துவிட்டது. (''தலித் இலக்கிய'' முன்னோடிகளும், பாஸ்டியன் விளாங்கோவைப் போன்ற ஜெர்மனி நாட்டு கோட்பாட்டுவாதியான கெயில் ஓம்வெத்தும் இதை ஒப்புக்கொள்கின்றனர். (ஆதாரம் முறையே அக்'92 சுபமங்களா பேட்டி, மற்றும் ''தலித் பார்வை'' என்ற நூல்). மராட்டியத்திலோ, அது குடிபெயர்ந்த கர்நாடகத்திலோ, வேறு எங்கேயும் ''தலித்தியம்'' என்பது கிடையாது.

நிறப்பிரிகை கும்பல் நடத்திய இரண்டாவது கூட்டு விவாதத்தில் (1991 ஜனவரி) கூட உஞ்சைராசன் மட்டும் தேசிய இனப் போராட்டத்தை முன்னெடுப்பவர்களுக்கு, தலித் பிரச்சினைகளை முன்நிபந்தனையாக வைக்க வேண்டும்; அடித்தட்டு மக்களின் கலாச்சாரத்தை மாற்றுக் கலாச்சாரமாக உருவாக்கிட வேண்டும் என்றார். அதை வேறுயாரும் அங்கீகரிக்கவோ நிராகரிக்கவோ இல்லை. அக்கும்பல் நடத்திய ''சாதி ஒழிப்பு'' என்ற மூன்றாவது (1991 ஜூன்) கூட்டு விவாதத்தில்கூட உஞ்சைராசன் உட்பட எவருமே ''தலித்தியம்'' என்பதை முன்வைக்கவில்லை. உஞ்சை ராசன் தனது பழைய கருத்தை வலியுறுத்தினார். ''ஒரு முழுமையான பொதுவுடைமைச் சமுதாயத்தில் மட்டுமே சாதி அதன் வேருடன் ஒழியும். இதன் பொருள் புரட்சிக்கு முந்திய சமுதாயங்களில் சாதி ஒழிப்பு முயற்சிகள் சாத்தியமில்லை என்பதல்ல. சாதி ஒழிப்பு என்பது ஒரு சனநாயகக் கோரிக்கை. எனவே சனநாயகப் புரட்சி நடவடிக்கையின் ஒரங்கமாகவே சாதி ஒழிப்பு இருக்கிறது. எனவே சனநாயகப் புரட்சியின் ஒரங்கமாய் சாதி இழிவு / தீண்டாமை ஒழிப்பு / சாதி உரிமைப் போராட்டங்களை எடுப்பது அவசியம்'' என்பதுதான் கூட்டு விவரதக் குழுவின் முடிவு. மார்க்சிய - லெனினியப் புரட்சியாளர்களின் பார்வையிலிருந்து இது எந்த வகையில் மாறுதலானது? ஆகவே தலித்தியம் என்பது இங்கேயும் முடிவாகவில்லை.

நிறப்பிரிகை நான்கு இதழ்கள் குறித்து, '92 மார்ச் பாண்டிச்சேரி ஆய்வரங்கம், '92 மே திருச்சி விவாதம், இதே வேலையைச் செய்த '92 ஜூன் சென்னை - தினமலர் கண்டனக் கூட்டம் - எங்குமே ''தலித்தியம்'' என்பதாக எதுவுமில்லை. பாண்டி ஆய்வரங்கத்தில் ப. கல்யாணி முன்வைத்த தீண்டாமை ஒழிப்பிற்கான ஒரு நடைமுறைத் திட்டத்திலும் இது இல்லை. 1992 அக். நிறப்பிரிகையில்தான், ''அம்பேத்கர் நூற்றாண்டு தந்த உற்சாகத்துக்குப் பின், தலித் மக்களிடையே ஏற்பட்டுள்ள எழுச்சி தமிழ்ச் சூழலிலும் பலவிதமாக வெளிப்படத் துவங்கியுள்ளது'' என்று கண்டுகொண்டனர்.

இதற்குக் கணிசமான காலம் முன்பிருந்தே ஏகாதிபத்திய கிறித்துவத் தன்னார்வக் குழுக்கள் - ஏற்கனவே சுட்டிக்காட்டியபடி - ''தலித் சித்தாந்தம்'', ''இயக்கம்'' ஆகியவற்றில் அக்கறை காட்டி வளர்த்து வந்தனர். இதேகாலத்தில் இந்தக் குழுக்களின் இலக்கிய அணியினர், இறக்குமதி செய்த பின்நவீனத்துவத்தை வரித்துக்கொண்ட கழிசடைக் கலாச்சாரவாதிகள் ஆகியோர் சமூக ஆதரவைத் தேடிக்கொள்ளவும், புரட்சிச் சவடால் அடிக்கவும் மேற்படி ''தலித் விடுதலை இயல் சித்தாந்தத்தை'' இணைத்து, ''தலித்தியத்தை'' உருவாக்கினார்கள். அம்பேத்கரிசம் பேசி வந்த சில தாழ்த்தப்பட்ட நபர்களும், குழுக்களும் அதன் போதாமை காரணமாக, அதே ''தலித் விடுதலை இயல் சித்தாந்தத்தை'' வரித்துக் கொண்டு, ''தலித்திய'' உருவாக்கத்தில் பங்கு பெற்றனர்.

''இறையியலை'' நிராகரிப்பதில் பின் நவீனத்துவவாதிகளும், இவர்களின் ''அமைப்பு மறுப்பியல், பெண்ணியம், விளிம்புநிலைப் பண்பாடு'' ஆகியவற்றை நிராகரிப்பதில் சில தாழ்த்தப்பட்டவர் குழுக்கள், நபர்கள் மாறுபட்டாலும், ''தலித்தியம்'' என்கிற ''தலித் விடுதலை இயல்'' சித்தாந்தம் இவர்கள் அனைவருக்கும் பொதுவாகவே அமைந்துள்ளது. உஞ்சைராசன் இதை மறுத்தாலும், அவருடைய கடிதம் இந்த உண்மையைக் காட்டிவிடுகிறது. ஏகாதிபத்திய கிறித்துவத் தன்னார்வக் குழுக்களின் நோக்கமும் பின் நவீனத்துவத்தின் அடிப்படையும் சமூகத்தை - புரட்சிகர சக்திகளை பால், இனம், சாதி, வர்க்கம், மொழி, அவற்றுக்குள் உட்பிரிவுகள் என்று பல நுண்கூறுகளாகப் பிரித்துச் சிதறடிப்பதுதான். இதைத்தான் ''தலித் தன்னை ஒரு தலித்தாக அடையாளம் காண்பது'' என்கிற பார்வை உள்ளடக்கி இருக்கிறது. ''தலித், தலித் இலக்கியம், தலித் பண்பாடு, தலித் மொழி, தலித் அரசியல், தலித்தியம்'' ஆகியவற்றுக்குத் தரப்படும் விளக்கங்களைக் குறிப்பாகப் பார்த்தாலே இது புரியும். மேலும் மிகவும் அம்பலப்பட்டுப் போய்விட்ட கிறித்துவக் குழுக்களைப்போல, பின்நவீனத்துவவாதிகளைப் புரட்சிகர சித்தாந்த எதிரிகளாகக் கருதாது, களப் பணியின் ஊடாக அவர்களை வென்றெடுப்பது என்பதும், மார்க்சிய - லெனினியத்தின் போதாமையில் இருந்து தொடங்கி, அது தோல்வி கண்டுவிட்டது, காலாவதியாகிவிட்டது என்பதுவரை அதைக் கொச்சைப்படுத்தாமல், ''தலித்திய'' வாதங்கள் முன்வைக்கப்படுவதில்லை. உஞ்சைராசனும் இதற்கு விதிவிலக்கல்ல.

உஞ்சைராசன் அவர்கள் வைக்கும் மூன்றாவது முக்கிய விமர்சனம், ''தலித் குழுக்களை'' சாதி அமைப்புகளாகப் பார்க்கும் போக்கு பற்றியது. அதிலும் பறையர் அமைப்பு என்றெல்லாம் கூறப்படுவதாகத் தனிப்பட்ட முறையில் தன்னையே குறிப்பிட்டு அரற்றுகிறார். இதற்கும் புதிய ஜனநாயகத்திற்கும் சம்பந்தமில்லை. இதுவரை அப்படி எழுதியதோ பேசியதோ கிடையாது.

ஆனால் ஒரு உண்மையை இப்போது முதன்முறையாக சுட்டிக் காட்டுகிறோம். ''அம்பேத்கர்'', ''தலித்துகள்'' மற்றும் பிற பெயரால் இயங்குபவை சாதி சங்கங்களாகவே உள்ளன. தங்களைத் தனிச் சாதியினர் என்று பிரித்து, ஒதுங்கிக் கொள்வது இந்த அமைப்புகளின் பண்பாக உள்ளது என்பது தான் உண்மை. ''தலித்'' என்ற சொல்லுக்கு ''தலித் விடுதலை அரசியலை ஏற்பவர்கள் அனைவரும் அடங்குவர்'', ''தீண்டத்தகாத தாழ்த்தப்பட்டவர் மற்றும் ஒடுக்கப்பட்டவர்கள் அனைவரும் அடங்குவர்'', ''தாழ்த்தப்பட்டவர்கள், பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட சாதியினர், உழைக்கும் மக்கள், பெண்கள் அடங்குவர்'' என்று பலரும் பல விளக்கங்கள் கொடுத்தாலும், நடைமுறைச் சான்றுகள் சுட்டும்பொழுதும், அமைப்புகளை வகைப்படுத்துவதிலும், நாங்கள் - நீங்கள் என்று பிரித்துப் பேசுவதிலும், தலித் மக்களின் ஏகப் பிரதிநிதிகளென உரிமை பாராட்டுவதிலும், இன்ன பிறவாறும் தாழ்த்தப்பட்டவர்களை மட்டுமே குறிப்பதாகத்தானே எழுதுகிறார்கள், பேசுகிறார்கள். உண்மையில் ''தலித்'' என்ற சொல்லுக்குப் பொருத்தமான சமூக அடிப்படை கொண்டவை மார்க்சிய - லெனினிய அமைப்புகள்தாம்! ஆனால் இவற்றை அப்படி வகைப்படுத்தாது, தாழ்த்தப்பட்டவர்களைக் கொண்டுள்ள அமைப்புகளை மட்டுமே தலித் அமைப்புகள் என்று உஞ்சைராசன் உட்பட அனைவருமே வகைப்படுத்துகின்றனர். மேலும் தாழ்த்தப்பட்டவர்களை மட்டுமே கொண்டுள்ள அமைப்புகளை, அதிலும் உட்சாதிகளுக்கென தனித்தனி அமைப்புகளாக இயங்குபவைகளை - உட் சாதிகளைக் கடந்து ஒன்றுபட்ட அமைப்புகளைக் கட்டமுடியாது என்பதால்தான் வானவில் கூட்டணி - சாதி அமைப்புகள் எனக் கூறுவதிலும் தவறில்லை. ஆனால் பிற மேல் சாதி அமைப்புகளைப் போல ஆதிக்கத்திற்காக எழுந்தவை அல்ல; சாதி ஆதிக்க ஒடுக்குமுறையில் இருந்து தற்காத்துக் கொள்ள எழுந்தவைதாம் தாழ்த்தப்பட்ட சாதி அமைப்புகள். இரண்டும் பண்புரீதியில் வேறுவேறானவை.

உஞ்சைராசன் எழுப்பிய சில கேள்விகளுக்கு இதுவரை புதிய ஜனநாயகம் பதிலளிக்கவில்லை என்கிறார். அலட்சியத்தால் பதில் எழுதாமலில்லை. இந்துத்துவ பாசிச பார்ப்பனீயத்துக்கெதிரான போராட்டத்தின் ஒரங்கமாக கருவறை நுழைவுப் போராட்டத்தை நடத்தினோம்; சிறுதெய்வ வழிபாட்டிடங்களில், வர்க்க - சாதி போராட்டங்களின் வளர்ச்சிப்போக்கில், சம உரிமை நிலைநாட்டப் போராடுவோம். மேதைகளுக்காக நடத்தப்படும் சிறு பத்திரிகைகள் போலன்றி, மக்கள் திரள் ஏடாக வளர முயற்சிக்கும் புதிய ஜனநாயகம், எளிய நடைக்காகவே நிலவும் படிநிலையில் உள்ள மேல்சாதி - கீழ் சாதி என்ற சொற்களைப் பயன்படுத்தியது இப்படிப்பட்ட விளக்கங்கள் கோரும் விவாதங்களுக்கு உஞ்சைராசன் கோருமளவு முக்கியத்துவம் தரமுடியாது என்றே கருதுகிறோம்.

இறுதியாக, மார்க்சிய - லெனினிய இயக்கத்துக்கும், தலித் குழுக்களுக்கும், குறிப்பாகத் தன்னைப் போன்றவர்களுக்கும், தோழமை பாராட்டும் அணுகுமுறையைக் கடிதம் நெடுகக் காட்டுகிறார், உஞ்சைராசன். ஆனால் புரட்சியின் சித்தாந்த எதிரிகளுடனும் இதே தோழமையான உறவுதான் கொண்டுள்ளார் என்பதை அவர்களுடன் நடத்தும் விமர்சன - விவாத அரங்கங்களும் தன்மைகளும் காட்டுகின்றன.

இப்படி, ''பூனைக்கும் தோழன், பாலுக்கும் காவலன்'' எனும் நிலை, எங்களுக்கு உவப்பானதல்ல; புரட்சிக்கும் தகவானதல்ல என்பதை மட்டும் சுட்ட விரும்புகிறோம்.

• • •



படிப்பகம்

www.padippakam.com

# பா.ஜ.க. – அகாலிதளம் கூட்டு கொள்கையற்ற வெத்து வேட்டு

பஞ்சாபில் மதவெறி பயங்கரவாதத்தைக் கிளறிவிட்டதில் காங்கிரசின் பங்கு முதன்மையானது. இதை வசதியாக மறைத்துவிட்டு, அமைதியின் காவலர்களாக, சமாதானத் தூதர்களாக ஓட்டுப் பொறுக்கப் பார்த்தது காங்கிரசு. ஆனால் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் பஞ்சாப் மக்கள் காங்கிரசுக்கு மரணஅடி கொடுத்துள்ளனர்.

எதிர்முகாமான அகாலிதளம் - பா.ஜ.க. கூட்டணி 5-ல் 4 பங்கு தொகுதிகளைக் கைப்பற்றி, மிருக மெஜாரிட்டியுடன் கூட்டணி ஆட்சியமைத்துள்ளது. இந்து - சீக்கிய ஒற்றுமையை முதன்மையாக்கிப் பிரச்சாரம் செய்து வெற்றியும் பெற்றுவிட்டனர்.

ஆனால் இக்கூட்டணி முழுக்க முழுக்க சந்தர்ப்பவாதமானது என்பதற்கு இவர்களின் பத்திரிகைப் பேட்டிகளே சாட்சி. கொள்கை அடிப்படையில் எதிர் எதிர் துருவங்களான இரு கட்சி கூட்டணி பற்றி அகாலிதளம் தலைவர் பாதலிடம் பத்திரிகையாளர் கேட்டபோது 'மத்தியில் 13 கட்சி கூட்டணி உள்ளது. இனிமேல் கூட்டணி ஆட்சிக்குதான் எதிர்காலம்' என்றார். பா.ஜ.க.வோ மத்தியில் எதிர் எதிர் கொள்கைகள் கொண்ட கூட்டணி ஆட்சி நீடிக்காது என்கிறது. பின்னர் பஞ்சாபில் மட்டும் எப்படி நீடிக்கும் என்பது அக்கட்சிக்கே வெளிச்சம்.

இந்தக் கூட்டணியிலுள்ள இரு கட்சிகளும் அனைத்திலும் வேறுபடுகின்றனர். அகாலிகளின் அடிப்படையான 'அனந்தபூர்' சாகிப் தீர்மானத்தை பா.ஜ.க. ஏற்கவில்லை. பா.ஜ.க.வின் இந்தி - இந்து - இந்துஸ்தானை அகாலிதளம் நிராகரிக்கிறது.

1984 சீக்கியர் படுகொலையை வாஜ்பாய் கண்டித்தார். ஆனால் அதற்குக் காரணமான 'நீல நட்சத்திர நடவடிக்கை'யை முழுமையாக ஆதரித்தவர்தான் வாஜ்பாய்.

1987-ல் மதவாத அடிப்படையில் சீக்கியர்கள் ஒன்று கூடும் 'சர்பட் கல்சா' நிகழ்ச்சியில் காலிஸ்தான் தனிநாடு கோரிக்கையை ஆதரித்தவர் பிரகாஷ்சிங் பாதல். அதற்கு சற்று முன்புதான் இந்திய அரசியல் சட்டத்தின் சில பக்கங்களைக் கிழித்தெறிந்தார்.

இவற்றைக் கடுமையாக எதிர்க்கும் பா.ஜ.க., இன்று பாதலின் அகாலி கட்சியின் கூட்டாளி.

இக்கூட்டணி போலிசாரின் நரவேட்டையாடல் மீது விசாரணைக் கமிசன் வைக்கும் என வாக்குறுதியளித்துள்ளது. ஆனால் பா.ஜ.க.வின் மாநிலத் தலைவர்களில் ஒருவரான எம்.எல்.ஏ. லட்சுமிகாந்த சாவ்லா கொலை வெறியன் கே.பி.எஸ். கில்லுக்குப் புகழாரம் சூட்டிகிறார்.

தவிர நதிநீர்ப் பங்கீடு, சண்டிகர் உட்பட பஞ்சாபி பேசும் பகுதிகளை பஞ்சாபுடன் இணைப்பது போன்ற பிரச்சினைகளிலும் இவ்விரு கட்சிகளும் முரண்படுகின்றன.

இதற்கு முந்தைய 1969 அகாலி - ஜனசங்கம் கூட்டணி ஆட்சி கவிழ்ந்ததற்கு காரணமே சீக்கிய மன்னர் பெயரை பஞ்சாப் பல்கலைக் கழகத்திற்கு வைக்கத் திட்டமிட்ட விசயம்தான்.

இந்த சந்தர்ப்பவாதக் கூட்டணி நீடிப்பதென்பது பஞ்சாப் மக்களின் உரிமைகள் குழி தோண்டிப் புதைக்கப்படுவதன் மீதுதான் தொடரும் என்பதில் சந்தேகமில்லை.

கன்ஷிராமின் பகுஜன் சமாஜ் கட்சியும், எஸ்.எஸ். மானின் அகாலி கட்சியும் இன்னொரு சந்தர்ப்பவாத கூட்டணி அமைத்தன. இவர்கள் மக்கள் மத்தியில் செல்வாக்கின்றிப் புறக்கணிக்கப்பட்டு, மொத்தமே 2 இடங்களைக் கைப்பற்றினர்.

இந்த பஞ்சாப் தேர்தலில், சி.பி.ஐ., சி.பி.எம். கட்சிகளின் யோக்கியதை சந்தி சிரிக்கிறது. பஞ்சாபில் பல தொண்டர்களைப் பலி கொடுத்து, 'தேச' ஒற்றுமைக்குப் போராடியதாக மார்தட்டிய இந்த இரு போலி கம்யூனிஸ்டுகளிடையே ஒத்த கருத்தின்றிப் படுதோல்வியடைந்துள்ளனர்.

கன்ஷிராமுடன் கூட்டணி முறிந்ததும் இந்த இரு கம்யூனிஸ்டுகளுடன் கூட்டணிக்கு முயன்றது காங்கிரசு. சி.பி.ஐ.யின் மாநிலத் தலைமை மத அடிப்படைவாதத்தை முறியடிக்க காங்கிரசுடன் கூட்டு எனக் கொள்கை முழக்கமிட்டது. மத்தியத் தலைமை இதை நிராகரித்து, ஜனதா தளம், முலயாமின் சமாஜ்வாதி கட்சி, சி.பி.ஐ., சி.பி.எம். என மூன்றாவது முன்னணி கண்டது. ஆனால் சி.பி.ஐ.யின் மாநிலத் தலைமையோ காங்கிரசுடன் மறைமுக உடன்படிக்கை கண்டு, காங்கிரசின் வெற்றிக்கு உழைத்தது. தற்போது சி.பி.ஐ. இரு தொகுதிகளில் வெற்றி பெற, பிற கூட்டணிக் கட்சிகளுக்கு ஒரு தொகுதிகூட கிடைக்கவில்லை.

தனது முழுத் தோல்விக்கும் சி.பி.ஐ.யே காரணம் எனப் பழியை சி.பி.ஐ. மீது சுமத்துகிறது சி.பி.எம். கட்சி.

மதவெறி பயங்கரவாதத்தை ஒடுக்குவது என்ற பெயரில் கட்டவிழ்த்து விடப்பட்ட அரசு பயங்கரவாதத்தை வரிந்து கட்டி ஆதரித்ததாலேயே மக்கள் இப்போலி கம்யூனிஸ்டுகளைப் புறக்கணித்துள்ளனர்.

அரசு பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்ட குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் என நம்பி அகாலி தளம் கட்சிக்கு ஓட்டளித்துள்ளனர். தவிர காங்கிரசு ஆட்சியின் ஊழல் மயமும், காங்கிரசுக்குள் ளேயிருந்த போட்டியும், குழிபறிப்பும் அகாலி - பா.ஜ.க. கூட்டணி வெற்றி பெற முக்கிய காரணங்கள்.

● பாரி

"புதிய ஜனநாயகம்" பற்றிய அறிக்கை
(4-ஆவது பாரம், 8-ஆம் பிரிவுப்படி)

| | | |
|---|---|---|
| 1. வெளியிடும் இடம் | : சென்னை |
| 2. வெளியிடும் காலம் | : மாதமிருமுறை |
| 3. அச்சிடுபவர் | : இரா. சண்முகராசு |
| தேசிய இனம் | : தமிழர் |
| முகவரி | : எழில் பிரிண்டஸ், 110, இரண்டாம் தளம், 63, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், சென்னை - 600 024. |
| 4. வெளியிடுபவர் | : இரா. சண்முகராசு |
| தேசிய இனம் | : தமிழர் |
| முகவரி | : 25, அருணாசலம் தெரு, ஜோதிராமலிங்க நகர், ஜாபர்கான் பேட்டை, சென்னை - 600 083. |
| 5. ஆசிரியர் | : இரா. சண்முகராசு |
| தேசிய இனம் | : தமிழர் |
| முகவரி | : 25, அருணாசலம் தெரு, ஜோதிராமலிங்க நகர், ஜாபர்கான் பேட்டை, சென்னை - 600 083. |
| 6. உரிமையாளர் | : இரா. சண்முகராசு |
| தேசிய இனம் | : தமிழர் |
| முகவரி | : 25, அருணாசலம் தெரு, ஜோதிராமலிங்க நகர், ஜாபர்கான் பேட்டை, சென்னை - 600 083. |

இரா. சண்முகராசுவாகிய நான் மேற்கூறிய தகவல்கள் அனைத்தும் உண்மையே என இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஒப்பம்) இரா. சண்முகராசு,
1.3.1997 வெளியிடுபவர்.



படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## இறால் பண்ணைகளுக்கு ஆதரவாக பிரதமர்

"இந்தியாவின் கிழக்கு கடற்கரைப் பகுதிகளில், கடல் அலைகள் ஓங்கி அடித்து நீர் புகும் கடல் எல்லையில் இருந்து (high tide line) 500 மீ. தொலைவிற்குள் இயங்கி வரும் அனைத்து இறால் பண்ணைகளையும் மார்ச் 31-க்குள் மூடிவிட வேண்டும்" என உச்சநீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது. இத்தீர்ப்புக்கு எதிராகத் திரண்ட காங்கிரசு தலைவர்கள், பவார் தலைமையில் பிரதமரைச் சந்தித்தனர். தேவே கௌடா அவர்களிடம், "500 மீட்டருக்குள் இறால் பண்ணைகள் இயங்க அனுமதிக்கும் சட்ட திருத்தம் கொண்டு வருகிறேன்" என வாக்குறுதி அளித்துள்ளார்.

## செல்லப் பிராணிகளின் சொகுசு வாழ்க்கை

பிரான்சு நாட்டு மக்கள் தங்கள் வீடுகளில் வளர்க்கும் நாய், பூனை போன்ற செல்லப் பிராணிகளைப் பராமரிக்க ஆண்டொன்றுக்கு 33,390 கோடி ரூபாய் செலவழிக்கின்றனர். அங்கு ஒரு நாயைப் பராமரிக்க ஆண்டொன்றுக்கு 28,000 ரூபாய் செலவிடப்படுகிறது; பூனையின் பராமரிப்புக்குச் செலவாகும் தொகை 15,370 ரூபாய். அதே பொழுதில் இந்தியர்களின் சராசரி ஆண்டு வருமானமோ, 11,725 ரூபாய்தான்; மொசாம்பிக் நாட்டவரின் ஆண்டு சராசரி வருமானம் 4,200 ரூபாய்தான். 142 ஏழை நாடுகளின் ஆண்டு மொத்த வருமானம், பிரெஞ்சு நாட்டு நாய்களும் பூனைகளும் தின்று தீர்ப்பதை விடக் குறைவானது. "நாய் பொழப்பு" எனப் புலம்புவோமே, அப்படி இனியும் சொல்ல முடியுமா?

## கால்நடைகளைவிடக் கேவலமானவர்களா மலைவாழ் மக்கள்?

மகாராஷ்டிரா மாநிலத்தின் தானே மாவட்டத்தில் 2.5 லட்சம் மலைவாழ் மாணவர்கள் "பிரதமர் - மதிய உணவுத் திட்டத்தின்" கீழ் ஆசிரமப் பள்ளிகளில் படித்து வருகின்றனர். இத்திட்டத்தின் படி அதிக நாட்கள் விடுப்பு எடுக்காமல், தவறாது பள்ளி வரும் மாணவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் 3 கிலோ அரிசி வழங்கப்படும். இப்படி வழங்கப்படும் அரிசியில் கால்நடைத் தீவனத்தைக் கலப்படம் செய்து வழங்கி, கோடிக் கணக்கில் ஊழல் நடந்திருப்பது தற்பொழுது அம்பலமாகியுள்ளது. கலப்படம் செய்து வழங்கப்படும் அரிசி, கால்நடைகூட உண்ண இலாயக்கற்றது. இம்மோசடி தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள ஷரவன் ஹோவத் சிவ சேனாவின் ஆசி பெற்றவராம்!

## பா.ஜ.க. - சிவசேனா வழியில் தி.மு.க.

தி.மு.க. அரசு சமீபத்தில் தமிழ்நாட்டில் 16 இடங்களில் தனியார் மின் நிலையங்களை அமைக்க ஒப்பந்தமிட்டுள்ளது. இதற்காக நடந்த ஏலப் போட்டியில் 13 இடங்களை பன்னாட்டு நிறுவனங்கள் கைப்பற்றின. அமெரிக்க பன்னாட்டு நிறுவனமான என்ரான் இராணிப்பேட்டையில் மின் நிலையம் அமைக்கவுள்ளது. ஏல விதிமுறைகளின்படி போட்டியிடும் நிறுவனங்கள், தாங்கள் குறிப்பிட்டுள்ள மின் நிலைய மாதிரியை, உலகில் வேறு எங்காவது 8000 மணி நேரம் இயக்கிய அனுபவம் இருக்க வேண்டும். என்ரானுக்கு இந்தத் தகுதி இல்லாதபொழுதும், விதிமுறைகளைத் தளர்த்தி சலுகை வழங்கியுள்ளது தி.மு.க. அரசு. இதன்படி, மின் நிலையம் வர்த்தகரீதியாக இயங்கத் தொடங்கும் வேளையில், என்ரான் தனது அனுபவம் பற்றி சான்றிதழ் கொடுத்தால் போதுமாம்!

## கள்ளச்சாராய வியாபாரிகள் குலைநடுங்கட்டும்

சென்னைக்கு அருகிலுள்ள சோழவரத்தில் கடந்த வருடம் கள்ளச் சாரயம் குடித்து 19 பேர் இறந்து போயினர். இவர்களுள் 14 பேர் இருபது வயதுக்கும் குறைவான இளைஞர்கள். இதை ஒழிக்கக் கோரி அரசிடம் போராடிச் சலித்துப் போன அப்பகுதி பெண்கள் இறுதியாக தாங்களே களத்தில் குதித்தனர். கள்ளச் சாராயம் காய்ச்சும் இடத்திற்குத் திரண்டு சென்று, ஊறல் பானைகளை அடித்து நொறுக்கினர். உடைந்த பானைகளை கள்ளச்சாராய வியாபாரிகளின் கழுத்தில் மாலையாகத் தொங்கவிட்டு, தெரு தெருவாக இழுத்துச் சென்று, போலீசிடம் ஒப்படைத்துத் திரும்பினர். இப்போர்க்குணத்திற்கு பயந்துதான் கருணாநிதி மதுவின் தீமைகளைப் பிரச்சாரம் செய்ய 25,000 பெண்களை நியமிக்கும் திட்டத்தைக் கைவிட்டு விட்டார் போலும்!

## அமெரிக்காவின் பிடியில் திருப்பூர் நகரம்

திருப்பூர் நகரம் பின்னலாடை ஏற்றுமதித் தொழிலின் மூலம் வருடமொன்றுக்கு 3500 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி ஈட்டிக் கொடுக்கிறது. ஆனாலும் அந்நகருக்குத் தேவைப்படும் சாலை, குடிநீர், கழிவுநீர் மற்றும் ஆலைக் கழிவுகளைத் தூய்மைப் படுத்தும் வசதிகளைச் செய்து தரும் பொறுப்பை ஐ.எல்.எஃப்.எஸ். என்ற அமெரிக்க நிறுவனத்திடம் ஒப்படைத்து விட்டது மைய அரசு. 548 கோடி ரூபாய்க்கு திருப்பூரைக் குத்தகைக்கு எடுத்துள்ள அந்நிறுவனம், முதற்கட்டமாக திருப்பூர் நகர மேம்பாட்டு பத்திரங்களை அமெரிக்காவில் விற்று 87.5 கோடி ரூபாயைத் திரட்டியுள்ளது. இனி திருப்பூரில் நடமாடுவதற்குக் கூட அந்நிறுவனம் கட்டணம் வசூலித்தாலும், அதை ஓட்டுக் கட்சிகளால் தடுக்க முடியாது.

## குடியரசுத் தலைவரின் பாதுகாப்பில் சுக்ராம்

ஹைதராபாத்தைச் சேர்ந்த நிறுவனமொன்றுக்கு சட்ட விரோத சலுகைகள் வழங்கியதற்காக, முன்னாள் தொலைதொடர்புத் துறை அமைச்சர் சுக்ராம், துணை இயக்குநர் ருனுகோஷின் மீது வழக்குத் தொடருவதற்கான அனுமதி வழங்க குடியரசுத் தலைவர் சங்கர்தயாள் சர்மா முட்டுக்கட்டை போட்டு வருகிறார். வழக்குத் தொடர அனுமதி கேட்டு சி.பி.ஐ. அனுப்பிய கோப்பு, கடந்த 4 மாதங்களாக குடியரசுத் தலைவர் மாளிகையில் தூசி படிந்து கிடக்கிறது. மேலும், வருமானத்திற்கு மீறி சொத்துகளைக் குவித்து வைத்திருப்பது தொடர்பாக சுக்ராம் மீது வழக்குத் தொடரவும் மைய அரசு அனுமதி அளிக்க மறுத்து விட்டது.

"கெஞ்சுவதில் பலனில்லை; போராடினாலே வெற்றி" எனப் புரிந்து கொண்ட சோழவரம் பகுதிப் பெண்கள்.



Published and Owned by R. SHANMUGARAJ, 25 Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, II Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM R.N. 42648/85 Regd. No. TN/MS(S) 622

# இதுதான் இன்றைய இந்தியா



கலைஞரின் வாரிசும், சென்னை நகர மேயருமான மு.க. ஸ்டாலின் சுற்றுப்புறத் தூய்மை மீது காட்டும் அக்கறைதான் இந்தப் படம். அழுக்குப் பிடித்த சென்னையை சிங்கார சென்னையாக மாற்ற, சுத்தம் செய்யும் குழு ஒன்றைத் துவக்கி வைத்துவிட்டு, தானே முதல் ஆளாக களத்திலும் குதித்தார் ஸ்டாலின். "சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ள மக்களின் ஒத்துழைப்பு வேண்டும்" என அறிவுரை வழங்கவும் தயங்கவில்லை அவர். மக்கள் ஒத்துழைப்பது ஒருபுறமிருக்கட்டும்; ஸ்டாலினின் தந்தை கலைஞரின் அரசு இந்த விசயத்தில் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது எனத் தெரிய வேண்டாமா?

இதோ வறண்டு கிடக்கும் இந்த அணை திருப்பூர் நகருக்கு அருகே ஒரத்துப்பாளையும் கிராமத்தில் உள்ளது. நொய்யல் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட இந்த அணை, தண்ணீரைத் தேக்கி வைக்கப் பயன்படவில்லை. திருப்பூரில் இயங்கும் சாயப்பட்டறைகள், ஆலைக் கழிவு நீரைக் கொட்ட அணையைப் பகிரங்கமாகப் பயன்படுத்திக் கொண்டன. கழிவுநீர் மட்டம் உயர, உயர அப்பகுதி நிலத்தடி நீர் மாசுபட்டுப் போனது; ஆடு மாடுகள் செத்து மடிந்தன; விவசாயம் பாழானது.

நாலரை ஆண்டுகளாக தேங்கி நின்ற நீரை சென்ற மாதம் இரகசியமாகத் திறந்து விட்டது தி.மு.க. அரசு. காவிரி ஆற்றுப் பாதையில் ஒரு வார காலம் ஓடிய இந்த கழிவு நீரால் கரூர், நாமக்கல், மோகனூர் பகுதிகளுக்கு குடிநீர் எடுத்துச் செல்ல, காவிரி ஆற்றுப் பாதையில் தோண்டப்பட்ட கிணற்று நீரும் விஷமானது. சதித்தனம் நிறைந்த இந்த கொலைப்பாதகச் செயலைக் கண்டித்து மக்கள் கொதித்தெழுந்த பொழுது, அதிகாரிகளின் மீது பழி போட்டு தப்பித்துக் கொண்டனர் தி.மு.க. உடன்பிறப்புகள்.

ஒருபுறம், தொழில் வளர்ச்சி என்ற பெயரில் காற்றையும் நீரையும் நஞ்சாக்கும் பன்னாட்டு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி அளிப்பது; மறுபுறம் சுற்றுப்புறத்தையும் சுகாதாரத்தையும் காக்க வேண்டி நீலிக் கண்ணீர் வடிப்பது. இப்பித்தலாட்டம் தொடர இன்னுமா நாம் அனுமதிப்பது?

